1408 1408

2849

STORIES

FROM

INDIAN HISTORY

FOR V CLASS

23 SEP 1937

BY

R. NATESA AIYER, B.A., L.T.,
Retired Senior History Assistant
TOWN HIGH SCHOOL, KUMBAKONAM

FOURTH EDITION

Registered] 1937 [Price As. 5

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
1.	ஐரோப்பியர் வருகையும் வியாபாரமும்	1
2.	போர்த்துகீசியர், டச்சுக்காரர், டேனியர் இந்தியாவுக்கு வருதல்	6
3.	இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி ...	9
4.	பிரெஞ்சுக்காரர்	13
5.	பிரெஞ்சு-இங்கிலீஷ் சண்டை ...	15
6.	வங்காளத்தில் இங்கிலீஷ் வெற்றி	27
7.	வங்காளத்தின் நிலைமை ...	31
8.	லார்டு கிளைவ் வங்காள கவர்னர் ...	35
9.	முதல் மைசூர் யுத்தம் ...	38
10.	கிளைவுக்குப் பின் கம்பெனியின் அரசாட்சியும் வியாபாரமும்	41
11.	வாரன் ஹேஸ்டிங்ஸ் ...	43
12.	முதல் மகாராஷ்டிர யுத்தம் ...	48
13.	இரண்டாம் மைசூர் யுத்தம்	52
14.	லார்டு காரன்வாலிஸ் ...	55
15.	பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ...	61
16.	கடைசி மைசூர் யுத்தம் ...	65
17.	மகாராஷ்டிர யுத்தங்கள் ...	69
18.	முதலாவது லார்டு மிண்டோ ...	75

பாடம்	விஷயம்	பக்கம்
19.	லார்டு ஹேஸ்டிங்ஸ்	... 78
20.	லார்டு ஆமெர்ஸ்ட்	... 84
21.	லார்டு வில்லியம் பெண்டிங்க்	... 86
22.	ஆப்கானிய முதல் யுத்தம்	... 90
23.	சீக்க யுத்தம்	... 93
24.	லார்டு டல்ஹௌசி	... 96
25.	சிப்பாய்க் கலகம்	... 103
26.	கலகம் பரவுதல்—டில்லி முற்றுகை	... 105
27.	கம்பெனி முடிவு	 109
28.	இராஜப்பிரதிநிதிகள் (வைசிராய்கள்) ஆட்சி	 112
29.	எல்லைப்புற யுத்தங்கள்	 114
30.	உள்நாட்டு விஷயங்கள்	 119
31.	இந்திய இராஜ்ஜியங்கள்	... 133
32.	பிரிட்டிஷ் இந்தியாவில் ஆட்சிமுறை	... 135
33.	பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மைகள்	... 140
34.	ஸ்தல சுய ஆட்சி	 145
35.	பொது மக்களின் முயற்சியும் ஒத்துழைப்பும்	 147
36.	நாம் என்ன செய்ய முடியும்?	... 148



டில்லி தர்பார்—1911

(பக்கம் 127)

இந்தியர் சரித்திரம்

இரண்டாம் பாகம்

---

1. ஐரோப்பியர் வருகையும் வியாபாரமும்

முந்திய சரித்திரம் :—இந்திய மக்களது சரித்திரத்தை ஆதிகாலம் முதல் மொகலாயர் ஆட்சிகாலம் முடிய II-வது பார புத்தகத்தில் படித்தோம். அதில் ஆதிமனிதர், திராவிடர், ஆரியர், ஆப்கானியர், மொகலாயர் என்ற பல வகுப்பினர் எவ்வாறு நமது தேசத்தில் ஒருவர் பின் ஞெருவராக இராஜ்ஜியங்கள் அமைத்து ஆண்டனர் என்று கூறப்பட்டது. மேலும், அவர்களது நாகரிகம், வாழ்க்கை முறைகள், மதக் கோட்பாடுகள், சண்டை சச்சரவுகள், அரசர்களின் வரலாறு முதலிய விவரங்கள் விரிவாக விளக்கப்பட்டன.

ஐரோப்பியர் வருகை :—மேற்கூறிய வகுப்பினருக்குப் பிறகு போர்த்துகீசியர், டச்சுக்காரர், டேனியர், பிரேஞ்சுக்காரர், இங்கிலீஷ்காரர் முதலிய பல ஐரோப்பிய தேசத்தினர் கடல் மார்க்கமாகக் கப்பலில் வந்து இந்தியாவில் தங்கள் வியாபாரத்தையும் அதிகாரத்ததையும் நிலை நிறுத்த முயன்ருர்கள். இந்தப் போட்டிச் சண்டையில் ஆங்கிலேயர்களே ஜெயமடைந்து விளங்கினர்.

ஆங்கில ஆட்சி :—ஆங்கிலேயருக்கு முன் பல இந்து, மகமதிய மன்னர்கள் திறமையாக ஆண்டபோதிலும், இத் தேச முழுமையும் ஒன்றுபடுத்தி ஒரு குடைக்கீழ் அவர்கள் அரசாட்சி செய்ததாகச் சொல்லமுடியாது. கன்னியா குமரி முதல் இமயமலை வரையிலும் ஒரே இராஜ்ஜியமாக ஆளும் சிறந்த பெருமை ஆங்கிலேயருக்கே உரியதாகும். இவ்விதம் ஆங்கிலேயர் தம்முடைய ஆதிக்கத்தைப் படிப்

படியாக ஓங்கச் செய்து இந்தியா முழுவதையும் ஒரே ஐக்கியமான இராஜ்ஜியமாக ஏற்படுத்திய வரலாற்றை இப் புத்தகத்தில் படிப்போம்.

இங்கிலீஷ் வியாபாரிகள் இந்தியாவுக்கு வந்தது முதல் இந்திய சரித்திரத்தில் புதியதொரு காலம் ஏற்பட்டது எனக் கூறலாம். நமது நாட்டுச் சரித்திரத்தில் ஆங்கிலேய ஆட்சி காலத்திற்குப் 'பிரிட்டிஷ் காலம்' என்று பெயர்.

குறிப்பு:—இங்கிலாந்து, ஸ்காட்லண்டு இந்த இரண்டு தேசங்களுக்கும் பிரிட்டன் என்று பெயர். இங்கிலீஷ், ஸ்காட்ஸ் இந்த இரு ஜனங்களும் பொதுவாகப் பிரிட்டிஷ் காரர் எனப்படுவர்.

ஐரோப்பாவுடன் வியாபாரம்:—பண்டைக்கால முதலே இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் வியாபாரம் நடந்து வந்தது. இந்தியாவிலிருந்து இரத்தினங்கள், பட்டாடைகள், நேர்த்தியான மஸ்லின் துணி, வாசனைச் சாமான்கள் முதலியவற்றை ஐரோப்பியர் வாங்கிக்கொண்டனர். ஐரோப்பாவிலிருந்து சாராயம், கண்ணாடி, தங்கம் முதலியவைகள் இந்தியாவுக்கு வந்தன. இந்தியச் சரக்குகளின் அருமையையும் மேன்மையையும்பற்றி மார்க்கோ போலோ முதலிய பல ஐரோப்பியர்கள் பண்டை நூல்களில் வர்ணித்திருக்கிறார்கள்.

ஐரோப்பா-இந்தியா வியாபார வழிகள் :—இந்தியாவிலிருந்து சரக்குகள் செல்லும் பண்டைக்கால வழிகளைப் படத்தில் பாருங்கள்!

1. நில மார்க்கமான கைபர் கணவாய் வழியாக ஆப்கானிஸ்தானம், துருக்கிஸ்தானம் முதலிய தேசங்களைக் கடந்து கான்ஸ்டாண்டிநோபிள் போய்ச் சேருவது.



2. பாரசீகக் கடல் மார்க்கமாகச் சென்று, அங்கிருந்து பாக்தாது, டமாஸ்கஸ், கான்ஸ்டாண்டிநோபிள் (இஸ்டன்புல்) முதலிய பட்டணங்களுக்குப் போவது.

3. செங்கடல் மார்க்கமாக எகிப்து, அலெக்ஸாண்டிரியா போய், அதற்குப் பிறகு ஐரோப்பிய நகரங்களுக்குச் செல்வது.

4. ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்லும் கடல் வழி:—15-ம் நூற்றுண்டில் முற்கூறிய மூன்று மார்க்கங்களிலும் உள்ள பட்டணங்கள் துருக்கியர் வசமாயின. அவர்களால் தடங்கல் ஏற்படவே, ஐரோப்பியர் இந்தியாவுக்கு வரப் புதிய வழி கண்டுபிடிப்பது அவசியமாயிற்று. 1498-ல் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனை (கேப் வழி) யைச் சுற்றி, வாஸ்கோடி காமா முதல் முதல் இந்தியாவுக்கு வந்தார். இம்மார்க்கமாக வியாபாரம் பல வருஷங்கள் நடந்து வந்தது. இவ் வழி சுமார் 12,000 மைல் தூரமுள்ளது. பிரயாணம் சுமார் ஆறு மாத காலமாகும்.

5. சூயஸ் கால்வாய் வழி:—நன்னம்பிக்கை முனை வழியாகப் பிரயாணம் செய்வது அதிக நாட்களாகவே, குறுக்கு வழி யேற்படுத்த 1870-ல் சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டது. அதுமுதல் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் சூயஸ் வழிதான் போக்குவரவு மார்க்கம்.

ஐரோப்பியர் வரத் தலைப்பட்டபொழுது இந்தியாவின் நிலைமை:—ஐரோப்பியர் சுலபமாக இராஜ்ஜியம் ஏற்படுத்தச் சாதகமாக இந்தியாவின் நிலைமை இருந்தது. பிரபல சக்கரவர்த்திகளாகிய மகா அக்பர், ஔரங்கசீப் இவர்களுக்குப் பிற்பட்ட மன்னர்கள் பலமற்றவர்களாக இருந்ததால் மொகலாய இராஜ்ஜியம் மலின மடைந்திருந்தது. அதுபற்றிப் பல சிற்றரசர்களும் சேனுவீரர்களும் அதிகாரம் செய்யத் தலைப்பட்டனர். வியாபாரச் சரக்குகளின் பாதுகாவலுக்காகக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு, ராணுவங்களை முதலில் ஏற்படுத்திக்கொண்ட ஐரோப்பிய வியாபாரிகள்

உள்நாட்டுச் சண்டை சச்சரவுகளில் கலந்துகொண்டு அந்தந்தப் பிரதேசங்களைக் கைப்பற்றுவது சுலபமாயிற்று.

மேலும், வடமேற்கு எல்லையில் ஆப்கானிஸ்தானம் தனி இராஜ்ஜியமாக வலிமையுற்றதாலும், பஞ்சாபில் சீக்கர்கள் பலம் பெற்றதாலும், தரை மார்க்கமாக அன்னியர் படை யெடுப்பது நின்றுவிட்டது.

நமது தேசத்தைப் பாதுகாக்கும் எல்லையாக இருந்த கடல், கப்பல் பிரயாணவசதிகள் ஏற்பட்டுக்கடல்மார்க்கமாக ஐரோப்பியர் வர ஆரம்பித்ததும், ஒரு திறந்த வாசல்போல் ஆயிற்று. இந்தப் புதிய வழியைப் பாதுகாக்க இந்திய மன்னர்கள் முயற்சி செய்யவே இல்லை. கடற்படையில் வலிமையுள்ள இங்கிலீஷ்காரர் இந்தியாவின் கடற்கரை யோரங்களில் கோட்டைகள் கட்டிக்கொண்டு பிறகு உள்நாட்டில் பிரவேசித்து, தேச முழுவதையும் ஜெயிப்பது சாத்தியமாயிற்று.

இந்தியாவில் ஐரோப்பியர் பிரவேசித்து நிலைத்த விதம்—மற்றவர் படையெடுத்து நிலைத்த விதம் :—இவ்வாறு ஐரோப்பியர் இந்தியாவிற் குடியேறி இராஜ்ஜியாதிகாரம் ஏற்படுத்தியதற்கும், அதற்குமுன் ஆரியர், ஹூணர், மகமதியர் முதலியவர்கள் குடியேறி இராஜ்ஜிய ஸ்தாபனம் செய்ததற்கும் முக்கிய வித்தியாசங்கள் உண்டு. ஆரியர் முதலியோர் வடமேற்குக் கணவாய் வழியாக வந்தார்கள். அவர்கள் இந்தியாவிற் குடியேறிச் சாசுவதமாக வசிக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் வந்தனர். தங்களுக்கு முன் இந்தியாவிற் குடியேறியிருந்தவர்களை ஜெயித்து, இந்தியாவில் நிரந்தரமாக வசித்துக் காலக்கிரமத்தில் மற்றவர்களுடன் கலந்துகொண்டனர். ஆனால் ஐரோப்பியர்கள் கடல் மார்க்கமாக வந்தனர். அவர்களுடைய முக்கிய நோக்கம் வியாபாரம். இந்தியாவில்

நிரந்தரமாக வசிக்கவேண்டுமென்று அவர்கள் இஷ்டப்பட வில்லை. அவர்கள் இந்தியாவிற் குடியேறி இந்திய ஜனங் களோடு கலந்து இந்தியராவதற்கு எண்ணுமல் அன்னிய தேசத்தினராகவே ஆண்டு வருகின்றனர்.

ஆரியர் முதலியோர் வடமேற்குக் கணவாய் வழியாக வந்து பஞ்சாபைத் தாக்கி, அவ்விடம் குடியேறிய பிறகு அங்கிருந்து மற்றப் பாகங்களுக்குப் பரவினர். ஆனல் ஐரோப்பியரோ, கடல் மார்க்கமாக வந்தபடியால், முதலில் கடற்கரைப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலை பெறச் செய்து, அங்கிருந்து மற்ற உள்நாட்டுப் பாகங்களை ஜெயிக்கத் தொடங்கினர். கடைசியாகப் பஞ்சாப் பாகத்தை ஜெயித்தார்கள். இவ்விதம் இந்தியா முழுவதிலும் இங்கி லீஷ் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

2. போர்த்துகீசியர், டச்சுக்காரர், டேனியர் இந்தியாவுக்கு வருதல்

போர்த்துகீசியர் வருதல் :—ஐரோப்பாவிலுள்ள போர்த் துகல் தேசத்தார்தான் நன்னம்பிக்கை முனையைக் கண்டு பிடித்து, ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு கடல் மார்க்க மாக முதன்முதல் இந்தியாவுக்கு வந்தனர். 1498-ல் வாஸ்கோடி காமா கள்ளிக்கோட்டை வந்து சேர்ந்தார். கள்ளிக்கோட்டை அரசரான சாமோரின் என்பவரிடம் அனுமதிபெற்றுத் தங்கள் பண்டகசாலைகளைக் கட்டினார்கள். மற்ற இந்திய அரசர்களும் அவரிடம் பட்சமாக நடந்து ஆதரித்தார்கள். இந்தியாவிலிருந்து முத்து, இரத்தினம், பட்டு, பருத்தி ஆடைகள், வாசனைச் சரக்குகள் ஏராளமாக ஐரோப்பாவுக்குச் சென்றன.

போர்த்துகீசியரது வியாபாரம் வலுத்தல் :— இந்தியாவில் தமது வியாபாரம் வலுக்கவும், போட்டி வியாபாரிகளை அடக்கவும் போர்த்துகீசியர் வழி தேடினர். அவர்களது கவர்னரான அல்பான்ஸோ அல்புகர்க் இந்திய வியாபார முழுவதையும் கைப்பற்ற ஏற்பாடுகள் செய்தார். 1510-ம் வருஷம் கோவா என்னும் நகரத்தையும் டையூ, டாமன் என்னும் தீவுகளையும், கிழக்குக் கரையில் ஸான்தோமையும் போர்த்துகீசிய வியாபார ஸ்தலங்களாக்கினர். கிழக்கே சிங்கப்பூரிலும், மேற்கே பாரசீகக் கடலிலும் போர்த்துகல் வியாபாரிகள் செல்ல ஏற்பாடு செய்தார்.

போர்த்துகீசியரது வர்த்தகம் அழிதல் :— கி. பி. 16-வது நூற்றாண்டில் போர்த்துகீசியரின் வியாபாரம் செழித்தோங்கியது. ஆனால் அவர்களது ஆதிக்கம் இந்தியாவில் நீடித்திருக்கவில்லை. பின்வரும் காரணங்களால் அவர்களுடைய வர்த்தகம் அழிவுற்றது :—(1) அவர்கள் இந்திய ஜனங்களை அலட்சியமாகப் பாவித்தனர். (2) அவர்கள் சுதேச மன்னர்களைத் தமது அதிகாரத்துக்கு உட்படுமாறு தூண்டியதால், அம்மன்னர்கள் அவர்களைத் துரத்திவிட முயன்றனர். (3) ஜனங்களைக் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்கவும் கடும் பிரயாசைப்பட்டனர். (4) போர்த்துகல் என்பது மிகச் சிறிய நாடு. 1580-ல் அது ஸ்பெயின் தேசத்திற்கு அடங்கியதால், இந்திய விஷயங்களை நன்கு கவனிக்க முடியாமற் போயிற்று. (5) டச்சுக்காரர், டேனியர், இங்கிலீஷ்காரர் முதலிய வேறு ஐரோப்பியர்களும் இந்திய வியாபாரத்தில் பங்கு பெறுவதற்கு வந்து, இவர்களைத் துரத்திவிட்டனர். கோவா, டையூ, டாமன் இம் மூன்று இடங்கள் மட்டும் இன்றைக்கும் போர்த்துகீசியரிடம் இருக்கின்றன.

டச்சுக்காரர் வருகை :—உலாந்தா (Holland) தேசம் அநேகமாய்க் கடல் சூழ்ந்திருப்பதால், அங்குள்ளவர்கள் சமுத்திரப் பிரயாணம் செய்வதில் சுலபமாகவே வல்லவர்கள். 16-ம் நூற்றுண்டின் பிற்பகுதி முதல் இத்தேசத்தவர்களாகிய டச்சுக்காரர்கள்,மலேயா, கிழக்கு இந்தியத்தீவுகள் இந்தியா முதலியவற்றோடு வர்த்தகம் செய்யலாயினர். பின்பு நாளடைவில் போர்த்துகீசியரைத் துரத்திவிட்டு, அவர்களிடமிருந்த பல வியாபார ஸ்தலங்களையும் கைக்கொண்டார்கள். அவற்றில் மேற்குக் கரையில் சூரத்தும், கோச்சியும், கிழக்குக் கரையில் பழவேற்காடு, மசூலிப்பட்டணம், நாகப்பட்டணம், சின்சுரா என்பவைகளும் முக்கியமானவை. ஆனுல் மலேயா தீபகற்பமே டச்சுக்காரரின் முக்கிய ஸ்தானமா யிருந்தது.

டச்சு வியாபாரத்தின் அழிவு :—17-வது நூற்றுண்டின் முற்பகுதியில் டச்சுக்காரரது வியாபாரம் இந்தியாவில் அழியத் தலைப்பட்டது. இந்திய வியாபாரத்தை முக்கியமாகக் கருதாமல், கிழக்கு இந்தியத்தீவுகளோடு வாசனைத்திரவியங்களின் வியாபார மொன்றையே லாபகரமாகக் கருதி, இந்தியாவை விட்டகன்றனர். மேலும், ஆங்கிலேயரின் வியாபாரப் போட்டிக்கும், அவர்களது கடல் வலிமைக்கும் டச்சுக்காரர் பின் வாங்க வேண்டியவர்களானுர்கள்.

டேனியர் :—டென்மார்க்கு தேசத்தினர் டேனியர் எனப்படுவர். இவர்களும் இந்தியாவில் வந்து வியாபாரம் செய்ய முயன்றனர். தரங்கம்பாடியிலும், வங்காளத்தில் சிராம்பூரிலும் டேனிஷ் பண்டகசாலைகளிருந்தன. ஆனுல் இங்கிலீஷ்காரரும், பிரெஞ்சுக்காரரும் பலமுள்ளவர்களாக இருந்ததால் டேனியர் இந்தியாவில் நிலைக்க முடியவில்லை.

ஆங்கிலேயர், பிரேஞ்சுக்காரர் :—பின்பு, ஆங்கிலேயர் களும், பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வந்து அதி காரத்தின் பொருட்டும், வியாபாரத்தின் பொருட்டும் நீடித்துச் சண்டையிடலாயினர். ஆரம்பத்தில் பிரெஞ்சுக் காரர் சிறிது வெற்றி பெற்ருலும், முடிவில் அவர்கள் தோற்று, ஆங்கிலேயர்களே வலுவுற்று அரசாள நேர்ந்ததை விரிவாக இனி படிப்போம்.

---

3. இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி

ஆங்கிலேயர் இந்தியாவுக்குப் புதிய வழி தேடுதல் :— இந்திய வியாபாரத்தினுல் போர்த்துகீசியர் ஏராளமாக லாபம் அடைவதைக் கண்டு இங்கிலீஷ்காரரும் இந்தியா வுக்கு வர முயற்சி செய்தனர். தாங்கள் கண்டுபிடித்த கேப் வழி தங்களுக்கே சொந்தமென்றும், அவ் வழியாக மற்ற ஐரோப்பியர் வரக்கூடாதென்றும் போர்த்துகீசியர் வாதித்தனர். இங்கிலீஷ்காரரும், தங்களுக்குச் சொந்த மென்று சொல்லத்தக்க ஓர் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க விரும்பி, யூரேஷியாவின் வட பாகத்தைச் சுற்றிக்கொண்டு, பசிபிக் சமுத்திர மார்க்கமாய் இந்தியாவுக்கு வரப் பிரயத் தனம் செய்தனர். ஆனுல் வட துருவ சமுத்திரத்தில் பனி யுறைந்திருப்பதால் அவர்கள் கப்பல்கள் அவ் வழிச் செல்ல முடியவில்லே

காற்றையும் கடலையும் ஒருவருக்குச் சொந்தமென்று சாதிப்பது தகாதென்று கூறி ஆங்கிலேயர் கடைசியில் போர்த்துகீசியர் வந்த 'கேப்' வழியாகவே தாங்களும் இந்தியாவுக்கு வரத் தீர்மானித்தார்கள்.

கிழக்கு இந்தியா கம்பெனி :—இங்கிலாந்தில் லண்டன் நகரிலிருந்த சில இங்கிலீஷ் வியாபாரிகள் 1600-ம் வருஷம்

'கிழக்கு இந்தியா கம்பெனி' என்ற ஒரு வியாபாரச் சங்கத்தை ஏற்படுத்தினர்கள். அக்காலத்தில் இங்கிலாந்தை ஆண்ட எலிஜபேத் மகாராணியார், இந்தியாவோடு வியாபாரஞ் செய்யும் சுதந்தரத்தை அக் கம்பெனியாருக்கு ஒரு சாஸனம் மூலம் வழங்கினர்.

'அம்பாய்னு' படுகோலை :—கிழக்கு இந்தியா கம்பெனியைச் சேர்ந்த இங்கிலீஷ் வியாபாரிகள் சுமாத்ரா, ஜாவா முதலிய கிழக்கு இந்தியத் தீவுகளில் வியாபாரம் செய்ய முதலில் சென்றனர். ஆங்கிலேயர்களுக்கும் முன்னரே அங்கு சென்றிருந்த டச்சுக்காரர்களுக்கும் வியாபாரப் போட்டியும் பகைமையும் ஏற்பட்டன. இங்கிலீஷ் வியாபாரிகளில் 23 பேர்களை டச்சுக்காரர்கள் பிடித்து அம்பாய்னு என்னுமிடத்தில் 1623-ல் படுகொலை செய்தார்கள். இதனுல் இங்கிலீஷ்காரர்கள் அவ்விடமிருந்து விலகி, இந்தியாவில் மாத்திரம் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். போர்த்துகீசியர், டச்சுக்காரர் இவர்களுக்கு இந்தியாவில் சொந்தமான இடங்களை நாளடைவில் இங்கிலீஷ்காரர் பிடித்துக்கொண்டனர்.

மசூலிப்பட்டணம், சூரத் :—1611-ல் இங்கிலீஷ் வியாபாரிகள் மசூலிப்பட்டணத்தில் பண்டகசாலையொன்று கட்டிக்கொண்டனர். 1612-ல் போர்த்துகீசிய கப்பற் படையைச் சூரத்துக்குச் சமீபத்தில் இங்கிலீஷ்காரர்கள் தோற்கடித்தார்கள். இதனுல் மொகலாய மன்னர்கள் ஆங்கிலேயரிடம் மதிப்புக் கொண்டு சூரத்தில் பண்டகசாலை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கினர். 1615-ல் ஸர் தாமஸ் ரோ என்ற இங்கிலீஷ் தூதர் ஜஹாங்கீரிடம் இங்கிலாந்து மன்னரால் அனுப்பப்பட்டார். ஆனுல் அவரது தூதால் அதிகப் பயன் விளைந்ததாகக் கூற முடியாது.

சென்னப்பட்டணம்:—1639-ம் வருஷத்தில் சந்திர கிரி அரசருக்குக் கீழ்ப்பட்ட ஒரு தலைவராகிய சென்னப்ப நாயகரிடமிருந்து கூவம் நதி முகத்துவாரத்திலுள்ள சில

H. P. II—2

நிலங்களை இங்கிலீஷ்காரர் வாங்கிக்கொண்டனர். தங்களையும், தங்களுடைய வியாபாரச் சரக்குகளையும் காப்பாற்றிக்கொள்ள, அங்கு அவர்கள் செயிண்டு ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். தாங்கள் குடியேறிய இந்த இடத்திற்குச் சென்னப்பட்டணம் என்றும், இந்தியர் வசித்த பாகத்திற்குப் பிளாக் டவுன் (= கருமை நிறமானவர் வசிக்குமிடம்) என்றும் பெயரிட்டார்கள். இந்தச் சென்னப்பட்டணம் நாளடைவில் வளர்ந்து தற்பொழுது மதராஸ் என அழைக்கப்படுகிறது.

குறிப்பு:—1906-ல் ஐந்தாம் ஜார்ஜ் இளவரசர் சென்னைக்கு வந்தபொழுது, பிளாக் டவுன் என்ற பெயர் ஜார்ஜ் டவுன் என மாற்றி அழைக்கப்பட்டது.

பம்பாய்:—மேற்குக் கரையிலுள்ள பம்பாய்த் தீவு முதலில் போர்த்துகீசியருக்குச் சொந்தமா யிருந்தது. போர்த்துகல் தேசத்து பிலிப் மன்னர் தமது மகள் காதரையினை இங்கிலாந்தின் அரசர் இரண்டாவது சார்லஸ் என்பவருக்குக் கல்யாணம் செய்து கொடுத்தபொழுது ஸ்திரீ தனமாக அவருக்குப் பம்பாயைக் கொடுத்தார். சார்லஸ் அதை வருஷம் ஒன்றுக்குப் பத்து பவுன் வாடகைக்கு 1668-ல் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு அளித்தார். இது காலக்கிரமத்தில் ஓங்கி ஒரு சிறந்த துறைமுகமாக இப்பொழுது விளங்குகிறது.

கல்கத்தா:—மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹானது குமாரத்திக்கு ஏற்பட்ட நோயை ஒரு ஆங்கிலேய வைத்தியர் சௌக்கியப்படுத்தினார். அதற்காக ஹூக்ளியில் பண்டகசாலை கட்டிக்கொள்ள அம்மன்னர் கம்பெனியாருக்கு 1651-ல் அனுமதி யளித்தார். ஔரங்கசீப் காலத்தில் ஏற்றுமதி இறக்குமதி வரியைப்பற்றித் தகரார் ஏற்பட்டதால், அவர்

பல இடையூறுகள் செய்தார் பின்பு மொகலாய சக்கர வர்த்தியுடன் சமாதானம் செய்துகொண்டு, 1690-ம் வருஷத்தில் வங்காள நவாப்பிடம் மூன்று கிராமங்களைக் கம்பெனியார் விலைக்கு வாங்கிக் கொண்டனர். அவைகளில் "காளி கட்டம்" என்னுமிடம் ஒன்று. இதுவே கல்கத்தா எனப்படும். இங்கு ஆங்கிலேயர்கள் ஒரு வர்த்தகசாலையையும், 'போர்ட் வில்லியம்' என்ற கோட்டையையும் கட்டிக்கொண்டனர்.

ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி :—முதலில் ஏற்பட்ட கிழக்கு இந்தியா கம்பெனியின் ஏராளமான லாபத்தைக் கண்டு, வேறு சில ஆங்கில வர்த்தகர்கள் மற்றொரு புதிய கம்பெனியை ஏற்படுத்தி இந்தியாவுடன் வியாபாரஞ் செய்யத் தொடங்கினார்கள். போட்டி வியாபாரத்தால் இரண்டு கம்பெனிக்கும் லாபம் குறைந்தது அதனால் இரண்டு கம்பெனிகளும் ஒன்று சேர்க்கப்பட்டு, 1708 முதல் ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி (யுனைடெட் ஈஸ்டு இந்தியா கம்பெனி) என்ற புதிய பெயர் ஏற்பட்டது.

4. பிரெஞ்சுக்காரர்

பிரெஞ்சு கிழக்கு இந்தியா கம்பெனி :—இந்தியாவில் வியாபாரம் செய்வதற்குக் கேப் வழியாக இங்கிலீஷ்காரர் வந்தது போலவே, பிரான்சு நாட்டிலிருந்து பிரெஞ்சுக்காரர் வந்தனர்.

1604-ம் வருஷம் பிரெஞ்சுக்காரர்கள் ஒரு கிழக்கு இந்தியக் கம்பெனியை ஏற்படுத்தினார்கள். ஆனால் இந்தக் கம்பெனி நஷ்டமடைந்து முறிந்துவிட்டது. 1664-ம் வருஷம் பிரெஞ்சு மந்திரியான கோல்பார்ட் ஆதரவில் ஒரு புதிய

கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. பிரெஞ்சு வியாபாரிகளும் தென்னிந்தியாவில் கடற்கரை யோரமாகப் பண்டக சாலைகள் கட்டிக்கொண்டார்கள்.

பிரெஞ்சு வியாபார ஸ்தலங்கள் :—1674-ம் வருஷத்தில் மார்ட்டின் என்னும் பிரெஞ்சு கவர்னர் செஞ்சியிலிருந்த சிற்றரசனிடமிருந்து பெண்ணையாற்றின் முகத்துவாரத்தருகே கொஞ்சம் நிலம் வாங்கிக்கொண்டு, அவ்விடத்தில் புதுச்சேரி என்னும் ஒருபட்டணத்தை ஏற்படுத்தினர். சந்திரநாகூர், காரைக்கால், மாஹி, யேனம் என்னும் இடங்களிலும் பிரெஞ்சு வியாபாரஸ்தலங்கள் ஏற்பட்டன. பிரெஞ்சு வியாபாரம் வலுக்கவே, டச்சுக்காரர் இந்தியாவை விட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் வியாபார ஸ்தலமாகிய திரிகோணமலை (சிலோனில் உள்ளது) யும், சென்னைக்கருகே உள்ள ஸான் தோமும் பிரெஞ்சுக்காரர் வசமாயின.

டூப்ளே

டூப்ளே :—பிரெஞ்சு கவர்னர்களில் மிகவும் கீர்த்திபெற்றவர் டூப்ளே. டூப்ளே பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரத்தையும் ஆட்சியையும் விஸ்தரிக்க வெகுவாக முயன்றார். இந்தியாவில் பிரெஞ்சு ஆட்சியை நிலைநிறுத்த வேண்டுமென்பது அவரது ஆசை. பல பாஷைகள் பேசும் திறமை வாய்ந்த அவருடைய சாமர்த்திய மனைவி டூப்ளேயினுடைய முயற்சிகளில் அவருக்கு மிகவும் சகாயமாக இருந்தாள்.

காலக் குறிப்பு:—

1498 வாஸ்கோடி காமா கள்ளிக்கோட்டை வந்தது
1510 போர்த்துகீசியர் கோவாவைப் பிடித்தது
1600 இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி
1615 ஸர் தாமஸ் ரோ ஜஹாங்கீரிடம் வந்தது
1623 அம்பாய்னு படுகொலை
1639 சென்னை ஏற்பட்டது
1664 பிரெஞ்சு கிழக்கு இந்தியா கம்பெனி
1668 பம்பாய்
1674 மார்ட்டின் பிரெஞ்சு கவர்னர்
1690 கல்கத்தா
1708 ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி
1742 டூப்ளே, புதுச்சேரி கவர்னர்

---

5. பிரெஞ்சு—இங்கிலீஷ் சண்டை

இந்தியாவில் பிரெஞ்சு அரசாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமானால் இங்கிலீஷ்காரரை இந்தியாவை விட்டுத் துரத்தினால் தான் சாத்தியப்படுமென்று டூப்ளே அறிந்தார். ஆகையால் இங்கிலீஷ்காரரோடு யுத்தம் செய்வதற் கேற்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

(i) முதல் கர்நாடக யுத்தம் (1744—1748)—(*a*) **காரணம்**:—1744-ம் வருஷம் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் யுத்தம் ஏற்பட்டது. இந்தியாவிலும் இங்கிலீஷ்காரருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை உண்டாயிற்று.

(*b*) போரின் நிகழ்ச்சி:—1746-ம் வருஷம் லாபூர்தனே என்ற பிரெஞ்சு தளகர்த்தர் சில கப்பல்களுடனும் யுத்த வீரர்களுடனும் புதுச்சேரி வந்து சேர்ந்தார். அவரும டூப்ளேயும் சென்னையைத் தாக்கி அதைக் கைப்பற்றினர். இங்கிலீஷ்காரர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். அவர்கள்

பெருந்தொகை கொடுத்தால் சென்னையைத் திரும்பக் கொடுத்துவிடுவதாக லாபூர்தனே தெரிவித்தார். ஆனால் இந்த யோசனை டூப்ளேக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், இங்கிலீஷ்காரரை அடியோடு இந்தியாவிலிருந்து விரட்ட வேண்டுமென்றும், சென்னையை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கக் கூடாதென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

சென்னையில் அகப்பட்ட இங்கிலீஷ்காரர்களை யெல்லாம் டூப்ளே புதுச்சேரியில் சிறையில் வைத்திருந்தார். அவர்களுக்குள் தைரியசாலிகளான சிலர் அவ்விடமிருந்து கூடலூருக்கருகிலுள்ள இங்கிலீஷ் பண்டக சாலையாகிய தேவனும் பட்டணத்துக்கு (Fort St. David) ஓடினர். இப்படி ஓடியவர்களில் ராபர்ட் கிளைவ் என்பவரும் ஒருவர். இவரே பிறகு பிரெஞ்சுக்காரர் அதிகாரத்தை நாசமாக்கினர். தேவனும் பட்டணத்தைப் பிடிக்க பிரெஞ்சுக்காரர் முயன்றனர். அப்பொழுது ஒரு இங்கிலீஷ் கப்பற்படை புதுச்சேரியைத் தாக்கியது. அதனால் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி திரும்பினர். இந்தக் கர்நாடக யுத்தத்திற் முதன்முதல் கப்பற்படை உபயோகமானது கவனிக்கத்தக்கது.

இச்சமயத்தில் கர்நாடக நவாப்பான அன்வார்உத்தீன், சென்னையை இங்கிலீஷ்காரருக்குத் திருப்பிக் கொடுத்து விடும்படி டூப்ளேக்கு உத்தரவிட்டார். ஆனால் டூப்ளே இதை அலட்சியம் செய்து கீழ்ப்படியாமல் இருந்தார். டூப்ளே தம் கட்டளைக்குக் கீழ்ப்படியாமலிருக்கவே நவாப் அவரைத் தண்டிக்கும் பொருட்டு ஒரு பெரிய சேனையை அனுப்பினர். நவாப்பின் சேனை சென்னையை முற்றுகை யிட்டது. ஆனால் அடையாறு நதிக்கரையில் ஸான் தோமில் பிரெஞ்சு சேனைகள் நவாப் சேனைகளை யெதிர்த்தன. நவாப்பின் சேனை பெருந் தோல்வி யடைந்தது.

இதுவரையில் ஐரோப்பியர் இந்திய அரசரிடம் வைத்திருந்த மதிப்பும், அச்சமும் இந்த யுத்தத்தோடு போய்விட்



டதென்று சொல்லவேண்டும். ஏனென்றால், இந்திய அரசர சேனைகள் ஒழுங்கிலும், பயிற்சியிலும், ஒற்றுமையிலும்

ஐரோப்பிய சேனைகளுக்கு மிகவும் கீழ்ப்பட்டனவென்று இந்த யுத்தத்தால் நன்கு விளங்கிற்று. பயிற்சி பெற்று ஒழுங்கும், ஒற்றுமையும் உள்ள ஒரு சிறிய சேனையைக் கொண்டு பயிற்சி யில்லாத ஜனக்கூட்டமாகிய ஒரு பெரிய இந்தியச் சேனையைச் சுலபமாக வெல்லலாம் என்ற உண்மை இங்கிலீஷ்காரருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் புலப்பட்டது. இந்திய அரசர்களும் ஐரோப்பியரிடம் விசேஷ மரியாதையும் மதிப்பும் காட்டத் தொடங்கி, தங்கள் சண்டை சச்சரவுகளில் அவர்களுடைய உதவியை நாடினர். இதனால் இந்தியாவில் பிரெஞ்சு அரசாட்சியை ஸ்தாபிக்க முடியுமென்ற தைரியம் டூப்ளேக்கு உண்டாயிற்று.

(*c*) போரின் முடிவு:—1748-ம் வருஷம் வரையில் சென்னை பிரெஞ்சுக்காரர் வசம் இருந்தது. அவ்வருஷம் ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி இங்கிலீஷ்காரர் வசம் சென்னை திருப்பி ஒப்புவிக்கப்பட்டது. இவ்வாறு சமாதானம் உண்டான போதிலும், இங்கிலீஷ்காரரைத் துரத்தவேண்டும் என்ற ஆசையைப் பூர்த்தி செய்யும் ஏற்பாடுகளை டூப்ளே கைவிடாமல் அதற்கான விவகாரங்களைக் கவனித்திருந்தார்.

(ii) இரண்டாவது கர்நாடக யுத்தம் (1749—1754)— (*a*) காரணம்:—1748-ல் ஹைதராபாத்து அரசரான நைஜாம் உல் முல்க் இறந்த பிறகு அரச பதவியை அடைவதற்கு அவர் மகனாகிய நாசர் ஜங்கும், மகள் வயிற்றுப் பேரனாகிய முசபர் ஜங்கும் சண்டை போட்டனர். தமக்கு உதவி செய்யும்படி டூப்ளேயினிடம் ஒரு தூதனை முசபர் ஜங் அனுப்பினார். டூப்ளே ஆசையுடன் எதிர்பார்த்திருந்த சமயம் கிட்டியது. முசபர் ஜங் பட்டத்துக்கு வர உதவி செய்ய அவர் தீர்மானித்தார்.

இதே சமயத்தில் கர்நாடகத்திலும் ஒரு சச்சரவு நேரிட்டது. கர்நாடக பழைய நவாப் வம்சத்தைச் சேர்ந்த சண்டா சாஹேப் அப்போது நவாப்பாயிருந்த அன்வார்உத்தீனிடமிருந்து இராஜ்ஜியத்தைக் கைப்பற்ற விரும்பினர். டூப்ளே அவருக்கு உதவி செய்வதாகக் கூறி உற்சாகப் படுத்தினர்.

பிரெஞ்சுக்காரர் தென்னிந்திய இராஜ்ஜிய விவகாரங்களில் தலையிட்டு அதிகச்செல்வாக்கும் அதிகாரமும் பெற்று வருவதைக்கண்ட இங்கிலீஷ்காரருக்கு அதிர்ச்சி திகில் உண்டாயிற்று. பிரெஞ்சுக்காரர்களுக்கு விரோதமாக அன்வார் உத்தீனுக்கும், நாசர் ஜங்குக்கும் உதவி செய்து, பிரெஞ்சுக்காரர்களின் பலத்தை ஒடுக்கவேண்டியது அவசியமென்று உணர்ந்தார்கள். இல்லாவிடில் இங்கிலீஷ் வியாபாரிகளை இந்தியாவினின்றும் டூப்ளே விரட்டிவிடுவா ரென்பது திண்ணமாய் விளங்கியது. ஆகையால் ஹைதராபாத்துக்கு ஒரு சிறிய படையை இங்கிலீஷ்காரர் அனுப்பினார்கள். டூப்ளேயும் சண்டா சாஹேபும் சேர்ந்து அன்வார்உத்தீனை எதிர்த்துச் சென்றார்கள்.

(*b*) போரின் நிகழ்ச்சி :—1749-ல் ஆம்பூர் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் அன்வார்உத்தீன் இறந்தார். சண்டா சாஹேப் கர்நாடக நவாப்பாகப் பட்டம் பெற்றார். அன்வார்உத்தீன் குமாரர் மகமது ஆலி சண்டையிலிருந்து தப்பி ஓடிப்போய்த் திரிச்சிராப்பள்ளிக் கோட்டையில் தங்கினர். திருச்சியில் பலமான மலைக்கோட்டை உள்ளது. அது காவேரி டேல்டாவின் ஆரம்பத்தில் முக்கியமான இடத்தில் இருந்ததால் திருச்சியைக் கைப்பற்றினால்தான் கர்நாடகம் முழுவதையும் அடக்கமுடியும். ஆகவே திருச்சியை முற்றுகை செய்து கைப்பற்றி, மகமது ஆலியைச் சிறைப்படுத்த வேண்டியது

அவசியம் என்று டூப்ளே சண்டா சாஹேபைத் தூண்டி ஞர். ஆனல் சண்டா சாஹேப் நவாப் பட்டம் பெற்ற வுடன் சந்தோஷமாகச் சிலகாலம் தங்கி யிருந்தார்.

இச்சமயம் ஹைதராபாத்தில் நாசர் ஜங் ஜெயம் பெற்று நிஜாமாக முடிசூட்டிக்கொண்டார். முசபர் ஜங் குக்காக டூப்ளே செய்த பிரயத்தனம் முதலில் பலிக்கவில்லை. முசபர் ஜங்கைப் பிடித்து நாசர் ஜங் சிறையிலடைத்தார்.

நாசர் ஜங்கைக் கவிழ்த்துவிடும் நோக்கத்துடன் டூப்ளே அவருடைய பிரபுக்களைக் கலைத்துவிட முயற்சி செய்தார். டூப்ளே கட்சியில் சில பிரபுக்கள் சேர்ந்தார்கள். அவர்கள் நாசர் ஜங்கைக் கொன்றுவிட்டார்கள். உடனே முசபர் ஜங் நிஜாம் பட்டம் பெற்ருர்.

தென்னிந்தியாவில் டூப்ளேயினுடைய ஆதிக்கம் ஓங்கி விளங்கியது. டூப்ளேயின் எண்ணம் நிறைவேறியது. இந்த வெற்றியின் ஞாபகார்த்தமாக டூப்ளே-பத்தே-பாத் (டூப்ளே ஜெயங்கொண்டபுரம்) என்ற ஒரு நகரத்தை ஸ்தா பித்தார். அவருடைய வீரச்செயல்களெல்லாம் ஒரு வெற்றித்தூணில் எழுதப்பட்டன. டூப்ளேக்கு நவாப் பட்டத்தை நிஜாம் முசபர் ஜங் அளித்தார்.

முசபர் ஜங் தம் தலைநகருக்குப் போகும்போது, அவ ரோடு புஸ்ஸி என்ற பிரெஞ்சுத் தளகர்த்தரை ஒரு பிரெஞ்சுச் சேனையுடன் டூப்ளே அனுப்பினர். போகும் வழியில் முசபர் ஜங் சில சதியாலோசனைக்காரர்களால் கொல்லப்பட்டார். உடனே நாசர் ஜங்கின் இளைய சகோ தரரான சலபத் ஜங்கை நிஜாமாக ஏற்படுத்திப் பிரெஞ்சு செல்வாக்குக் குறையாமல் புஸ்ஸிகாப்பாற்றினர். சலபத்ஜங் இந்த உதவிக்குக் கைம்மாருக வடசர்க்கார் ஜில்லாக்களை பிரெஞ்சுக்காரருக்குக் கொடுத்தார்.

இங்கிலீஷ் வெற்றி :—பிரெஞ்சுக்காரருடைய ஆதிக்கம் உன்னத நிலையில் இருப்பதைக் கண்ட இங்கிலீஷ்காரர், இனி சும்மா இருந்தால் காரியம் மிஞ்சிப்போகுமென்று தெரிந்துகொண்டு, மகமது ஆலிக்குத் தக்க உதவி செய்து எப்படியாவது அவனைக் கர்நாடக நவாப்பாக்கிவிட்டால், பிரெஞ்சுக்காரர் வீழ்ச்சி நிச்சயம் என்று கருதினார்கள். ஆனால் அச்சமயம் மகமது ஆலிக்கு உதவியாக அனுப்புவதற்குச் சென்னையில் தகுந்த பெரிய சேனை இல்லை. ஆயினும் ஒரு சிறிய படையை அனுப்பினார்கள். பிரெஞ்சுக்காரருடைய சேனையில் பெரும்பாகமும், சண்டா சாஹேபினுடைய சேனையில் பெரும்பாகமும் திருச்சியை முற்றுகை செய்தன. கோட்டைக்குள் இருக்கும் மகமது ஆலியின் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது.

ராபர்ட் கிளைவ் :—இங்கிலீஷ் கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்த ராபர்ட கிளைவ் இந்த யுத்த சமயத்தில் சேனை வீரராக அமர்ந்தனர். பிரெஞ்சுப் படைகளும் கர்நாடக நவாப்பினுடைய படைகளும் திருச்சியைச் சூழ்ந்து முற்றுகை போட்டிருந்த சமயம், கர்நாடக இராஜ்ஜியத்தின் தலைநகரமாகிய ஆற்காட்டில் அதிக சேனைபலம் இருக்காது என்று அவர் ஊகித்தார் ஆற்காட்டை உடனே யெதிர்த்துச் சுலபமாகப் பிடித்து

ராபர்ட் கிளைவ்

விடலாம் என்றும், அப்போது. திருச்சி முற்றுகையை விட்டுச் சண்டா சாஹேப் ஆற்காட்டை நோக்கி ஓடி

வருவார் என்றும், சென்னைக் கவர்னருக்கு அவர் யோசனை சொன்னார். அந்த யோசனைப்படி ஆற்காட்டைப் பிடிக்க ஒரு இங்கிலீஷ் சேனையைக் கிளைவ் வசம் இங்கிலீஷ் கவர்னர் அனுப்பினார்.

ராபர்ட் கிளைவ் எதிர்பார்த்தபடியே ஆற்காட்டில் பலமான சேனை ஒன்றும் இல்லை. ஆற்காட்டை வெகு சுலபமாக அவர் பிடித்துக்கொண்டார். பிடித்த பிறகு கோட்டைச்சுவர்களைப் பலப்படுத்திக்கொண்டு, சண்டா சாஹேப் வருவதை எதிர்பார்த்து ஜாக்கிரதை செய்திருந்தார்.

ஆற்காட்டு முற்றுகை :—தம் இராஜதானி நகரத்தை இங்கிலீஷ்காரர்கள் பிடித்துக்கொண்டார்களென்றுகேட்டதும், சண்டா சாஹேப் தம் சேனையிற் பெரும் பகுதியைத் தம் புதல்வர் ராஜா சாஹேப்வசம் பிரித்துக் கொடுத்து ஆற்காட்டை மீட்கும்படி அனுப்பினார். ராஜா சாஹேப் ஆற்காட்டைச் சீக்கிரம் பிடித்துவிடலாம் என்று நினைத்தார். ஆனால் ஐம்பது நாட்கள் கோட்டைக்குள் நுழைய முடியாமல் முற்றுகை செய்திருந்தார். கிளைவ் வசம் வெகு சிறிய சேனையும் வெகு சொற்பமான உணவுப் பொருளும் இருந்தாலும், அவர் வெகு தைரியத்துடனும் வீரத்துடனும் சண்டை யிட்டார். பல நாட்கள் காத்திருந்ததால் ராஜா சாஹேப் சேனையின் ஊக்கம் குறைய ஆரம்பித்தது. அவர்கள் அஜாக்கிரதையா யிருக்கும் சமயம் பாத்து, கிளைவ் சில வீரர்களுடன் அடிக்கடி வெளியில் வந்து ராஜா சாஹேப்பின் சிப்பாய்களை வெட்டி வீழ்த்தினார். ராஜா சாஹேப் அதைரியமடைந்து, கை சளைத்துப்போய் திருச்சிக்குத் திரும்பினார். உடனே கிளைவ் தம் சேனையுடன் வெளியில் வந்து ராஜா சாஹேபைத் தாக்கி ஆரணிக்குச் சமீபத்தில் அவரை முறி யடித்தார்.

ஆற்காட்டில் கிளைவ் அடைந்த ஜெயத்தினால் பிரெஞ்சுக்காரர்களின் உன்னத நிலைமை இறங்கிவிட்டது. சண்டா சாஹேபின் தலைநகரத்தைக் கிளைவ் பிடித்துக்கொண்டு அவருடைய சேனையையும் அழித்துவிட்டதால், திருச்சியில் உள்ள சேனை வெகுவாகக் குறைந்துவிட்டது. மகமது ஆலியின் அதிர்ஷ்டம் ஓங்க ஆரம்பித்தது. ஆனால் டூப்ளே கொஞ்சமும் மனங் கலங்கவில்லை. திருச்சிக்குக் கிளைவ் வந்து சேராமல் தடுக்க முயன்றார். காவேரிப்பாக்கம் என்னும்இடத்தில் பிரெஞ்சுச் சேனையைக் கிளைவ் சந்தித்து அதை நாசமாக்கினார். பிறகு திருச்சிக்கு வேகமாக வந்து, முற்றுகை செய்திருந்த சேனைகளைச் சூழ்ந்துகொண்டார். பிரெஞ்சுக்காரரது தோல்வியைக் கண்ட சண்டா சாஹேப் சேனைகள் மனத்தளர்ச்சி யடைந்தன. 1752-ம் வருஷம் திருச்சி முற்றுகையைவிட்டுச் சண்டா சாஹேப் ஓடினார். அவர் சேனையைக் கிளைவ் சின்னாபின்னமாக்கினார். சண்டா சாஹேபும் தஞ்சாவூர் அரசர் கைவசம் அகப்பட்டுஇறந்தார்.

(c) யுத்த முடிவும், டூப்ளேயின் வீழ்ச்சியும்:—ஒரு வருஷத்துக்கு முன் மகோன்னத பதவியிலிருந்த டூப்ளேயின் செல்வாக்கு மறு வருஷம் அழிந்துவிட்டது. தமக்கு உதவியாகப் பிரான்சிலிருந்து ராணுவமும் பண உதவியும் கிடைக்குமென்று டூப்ளே எதிர்பார்த்தார். ஆனால் ஐரோப்பாவில் சண்டையில்லாத சமயம் இந்தியாவில் பிரெஞ்சுக்காரரும் இங்கிலீஷ்காரரும் சண்டை செய்துகொள்வது சரியல்லவென்றும், உடனே சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்றும், டூப்ளே பிரான்சுக்குத் திரும்பவேண்டுமென்றும் உத்தரவுவந்தது. டூப்ளேபெருத்தஏமாற்றமடைந்தார். 1755-ம் வருஷம் சென்னைக்கருகிலுள்ள சதுரங்கப் பட்டினத்தில் (Sadras) இங்கிலீஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர்.

சிறந்த திறமையும் யுக்தியும் உள்ள டூப்ளே தோல்வியடைந்ததன் காரணங்கள் யாவை? அவர் சகாக்கள் அவருடன் மனமொப்பி யுழைக்காமல் அவருக்குப் பலவிதச் சங்கடங்களைச் செய்தார்கள். அவருடைய தளகர்த்தர்கள் அவருடைய உத்தரவுகளை அடிக்கடி எதிர்த்து நடந்தார்கள். இதனால், டூப்ளே செய்த யோசனைகள் பாழாயின. அவருக்கு உதவி செய்ய அனுப்பப்பட்ட லாபூர்தனேயும் அவருடைய நோக்கத்துக்கு விரோதமாக நடந்துகொண்டார். பிரெஞ்சு அரசாங்கத்தாரும் அவரது ஏற்பாடுகளை ஆதரித்து அவருக்கு உதவிசெய்யவில்லை. அவருடைய யோசனைகள் வீணனபோதிலும் இங்கிலீஷ்காரருக்கு அவைகளால் பலன் உண்டாயிற்று.

பிரான்சுக்குத் திரும்பிச்சென்ற டூப்ளேயை அங்குள்ள ஜனங்களும் சர்க்காரும் பெருமைப்படுத்தாமல் அவமானப் படுத்தினர். அவருடைய அரிய சேவையைப் பாராட்டிச் சன்மானிப்பதற்குப் பதிலாக அவரைக் குற்றஞ் சொல்லி நிந்தித்தனர். அந்திய காலத்தில் வியாதியும் வறுமையும் பீடிக்க, டூப்ளே இறந்தார். அவர் இறந்த பல வருஷங்களுக்குப் பிறகு தான், அவரது குணங்களையும் சாமர்த்தியத்தையும் பிரெஞ்சு ஜனங்கள் பாராட்டிப் புகழத் தொடங்கினர்.

(iii) மூன்றுவது கர்நாடக யுத்தம் (1757—1763)— (*a*) காரணம்:—1755-ம் வருஷம் ஏற்பட்ட சமாதானம் அதிகக் காலம் நீடித்திருக்கவில்லை. ஏனெனில் இரண்டு வருஷங்களுக்குள் மறுபடியும் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் ஐரோப்பாவில் சண்டை மூண்டதால், இந்தியாவிலும் இங்கிலீஷ்காரருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் மறுபடியும் யுத்தம் உண்டாயிற்று.

(b) **போரின் நிகழ்ச்சி**:—இச்சமயம் கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் செல்வாக்கு இல்லை. ஆனால் நிஜாம் மன்னரிடம் பிரெஞ்சுத் தளகர்த்தர் புஸ்ஸி இருந்தார். வட சர்க்கார் ஜில்லாக்கள் பிரெஞ்சுக்காரர்கள் வசம் இருந்தன. 1758-ம் வருஷம் கௌண்டி லாலி என்னும் பிரெஞ்சுத் தளகர்த்தர் பெரிய சேனையோடுவந்து சேர்ந்தார்.

யுத்தம் ஆரம்பித்த உடனே சந்திரநாகூரை இங்கிலீஷ்காரர் பிடித்துக்கொண்டார்கள். வங்காளத்தில் பிரெஞ்சுக்காரரின் பலம் அழிக்கப்பட்டது. பிறகு தென்னிந்தியாவில் இரு கட்சியினருக்கும் தீவிரமான யுத்தம் நடந்தது.

கௌண்டி லாலி இந்தியாவுக்கு வந்தது முதல் அவருக்குப் பலவித இடையூறுகள் ஏற்பட்டன. புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் அவருக்கு விரோதமாக இருந்தனர். சேனைகளுக்குச் சம்பளப் பாக்கி ஏராளமாய் இருந்ததால் அவைகள் கலகஞ் செய்யும் தறுவாயில் இருந்தன. அவருக்குப் பணம் வெகு அவசரமாகத் தேவையா யிருந்தது. இந்தச் சமயத்தில் அவருக்குப் பிரெஞ்சுக் கப்பற்படையின் உதவியும் கிடைக்கவில்லை. இங்கிலீஷ்காரருக்குக் கப்பற்படையின் பலம் இருந்ததால், லாலியை விட அவர்கள் நல்ல நிலைமையில் இருந்தார்கள். ஆங்காங்கு இருந்த பிரெஞ்சு நகரங்களை இங்கிலீஷ்காரர் பிடிக்க ஆரம்பித்தனர். அவைகளைக் காக்கப் போதுமான சேனைகள் இல்லாமையால், ஹைதராபாத்திலுள்ள சேனைகளையும் லாலி உதவிக்கழைத்தார். ஹைதராபாத்திலிருந்து புஸ்ஸியை அழைத்ததால் தக்ஷிணத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் குறைந்தது. நிஜாம் சலபத் ஜங் பிரெஞ்சுக்காரர் ஆதிக்கத்திலிருந்து விலகிவிட்டார். வங்காளத்திலிருந்து வந்த இங்கிலீஷ் சேனை வட சர்க்காரைக் கைப்பற்றியது.

தேவனும் பட்டணம் கோட்டையை (Fort St-David)க் கௌண்டி லாலி பிடித்த பிறகு சென்னையை முற்றுகைபோட ஆரம்பித்தார். ஆனால் அவருடைய தளகர்த்தர்கள் உற்சாகமில்லாமல் சண்டை செய்ததால் அவருக்கு ஜெயிக்கப் போகிறோம் என்ற தைரியமே இல்லை. இங்கிலீஷ் கப்பற்படை யொன்று சென்னைக்கருகே வந்து நின்றதும், லாலி தைரியமிழந்து சென்னையைப் பிடிக்கும் எண்ணத்தைவிட்டுப் புதுச்சேரிக்குத் திரும்பினர். 1760-ம் வருஷம் இங்கிலீஷ் தளகர்த்தரான கூட், வந்தவாசிக் கருகில் பிரெஞ்சுக்காரரை முறியடித்தார்.

உடனே இங்கிலீஷ்காரர் புதுச்சேரியை முற்றுகை யிட்டுக் கைப்பற்றினர். தோல்வியடைந்த லாலி பிரான்சுக் குத் திரும்புப்படி உத்தரவு வந்தது. அவர் உண்மையாக உழைக்கவில்லை யென்று பிரெஞ்சு அரசாங்கத்தார் அவரைத் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டார்கள். லாலியின்மீது குற்றம் இல்லை யென்பதைப் பல வருஷங்களுக்குப் பிறகு தான் பிரெஞ்சுக்காரர் உணர்ந்தனர்.

(*c*) யுத்த முடிவு :—1763-ம் வருஷம் யுத்தம் முடி வடைந்தது. புதுச்சேரி முதலிய பிரெஞ்சு நகரங்கள் அவர்களுக்குத் திருப்பி யளிக்கப்பட்டன. ஆனால் அவை களிலுள்ள கோட்டைகளை இங்கிலீஷ்காரர் இடித்து விட்டார்கள். வட சர்க்கார் ஜில்லாக்கள் இங்கிலீஷ் ஆளுகை யில் இருந்தன. பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் அடியோடு அழிந்தது. இந்தியாவில் இராஜ்ஜியாதிகாரம்' ஏற்படுத்த ஒரு போட்டியுமின்றி இங்கிலீஷ்காரர் விளங்கினர்.

பிரெஞ்சுக்காரரது அதிகாரம் அழிந்ததற்குக் காரணங் கள் :—டூப்ளேக்குப் போதுமான ஆதரவு பிரெஞ்சுக்காரர் அளிக்கவில்லை. பிரெஞ்சு வியாபாரம் நிலைபெற்று பலம்

கிடைக்கு முன்னமே, டூப்ளே இராஜ்ஜியம் ஸ்தாபிக்க முயன்றதால் அதிகப் பணக்கஷ்டம் உண்டாயிற்று. இந்தியாவில் பிரெஞ்சுத் தலைவர்கள் ஒருவரோடொருவர் ஒத்துழைக்கவில்லை. பிரெஞ்சு கப்பற்படை பலமாக இல்லை. 1757-ம் வருஷம் இங்கிலீஷ் கப்பற்படையின் பலம் சிறந்திருந்ததினால், பிரான்சிலிருந்து உதவி வருவது சாத்தியப்படவில்லை. இங்கிலீஷ் கப்பற்படையும் நிலப் படையும் ஒன்றுக்கொன்று உதவியாக உழைத்தன. இதனால் இங்கிலீஷ்காரர் வெற்றியடைவது சுலபமாயிற்று.

காலக் குறிப்பு :—

1744	பிரெஞ்சு இங்கிலீஷ் சண்டை
1746	சென்னையைப் பிரெஞ்சுக்காரர் பிடித்தது அடையாற்றின் கரையில் நவாப் சேனை தோல்வி
1748	சமாதானம் : நிஜாம் பதவி போட்டிக்காரர்
1749	ஆம்பூர் சண்டை
1751	டூப்ளேயின் உன்னத நிலை ; ஆற்காடு முற்றுகை
1754	டூப்ளே பிரான்சுக்குத் திரும்பியது
1755	சமாதானம்
1758	கௌண்டி லாலியின் சென்னை முற்றுகை
1760	வந்தவாசிச் சண்டை ; பிரெஞ்சு வீழ்ச்சி

6. வங்காளத்தில் இங்கிலீஷ் வெற்றி

போர்ட் வில்லியம் கோட்டை :—வங்காளத்தில் உள்ள இங்கிலீஷ் வியாபார ஸ்தலங்களில் முக்கியமானது கல்கத்தா. இதில் போர்ட் வில்லியம் (Fort William) என்ற ஒரு பலமான கோட்டையைக் கட்டிச் சரக்குகளை பத்திரமாக வைத்துக் காப்பாற்றிக் கொண்டார்கள். சுங்க வரிகள் கொடுக்காமல் வியாபாரம் செய்யும் சுதந்தரத்தை யும், இன்னும் மற்ற வசதிகளையும் டில்லி சக்கரவர்த்தி பாருக்ஷியரிடமிருந்து இங்கிலீஷ்காரர் பெற்றிருந்தார்கள்.

ஸிராஜ்-உத்-தௌலாவும் ஆங்கிலேயர்களும் :—அக்காலத்தில் வங்காள நவாப் ஆக இருந்த அலிவர்டிகான் இங்கிலீஷ்காரரோடு சிநேகமாகவே இருந்தார். ஆனால் அவருக்குப் பிறகு வந்த ஸிராஜ்-உத்-தௌலா ஆங்கிலேயரிடம் ஏராளமான செல்வம் இருக்கிறதாக அறிந்து, வரி கொடாமல் இலவசமாக வியாபாரம் செய்துகொண்டிருந்த இங்கிலீஷ் வியாபாரிகளுக்கு வரிவிதிக்கத் தீர்மானித்தார். இங்கிலீஷ்காரர் அதற்கிணங்கவில்லை. 1756-ம் வருஷம் பிரெஞ்சுக்காரர்களோடு யுத்தம் நேரிடும் போலிருந்தமையால், இங்கிலீஷ்காரர் தங்கள் கோட்டையைப் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். தம்மிடம் அனுமதிபெறாமல் கோட்டையைப் பலப்படுத்தியது பிசகு என்றும், அதை உடனே நிறுத்திவிடும்படியும் ஸிராஜ்-உத்-தௌலா உத்தரவு செய்தார். இங்கிலீஷ்காரர் அவர் உத்தரவை அசட்டை செய்தனர். உடனே நவாப், படையெடுத்து வந்து கல்கத்தாவைக் கைப்பற்றிக்கொண்டார். கோட்டையிலுள்ளவர்களில் சிலர் படகுகளில் ஏறித் தப்பி ஓடினார்கள். ஸிராஜ்-உத்-தௌலா வசம் 146 பேர்கள் கைதியாயினர். அவர்களை நவாப்பின் ஆட்கள் ஒரு சிறிய அறையில் அடைத்து வைத்தார்கள். மூச்சுவிட முடியாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், மறுநாட் காலையில் 23 பேர்களே உயிருடன் வெளிவந்தார்களென்றும் அவர்களில் ஒருவராகிய ஹால்வெல் எழுதியிருக்கிறார். ஆனால் இச்சம்ப

ஸிராஜ்-உத்-தௌலா

வம் நடைபெறவில்லையென்றும், ஸிராஜ்-உத்-தௌலாவின் மேல் சிறிதும் குற்றமில்லையென்றும், நவீன ஆராய்ச்சியால் விளங்குகிறது. ஹால்வெல் வர்ணித்துள்ள இந்தக் கல்கத்தா இருட்டறையின் சம்பவத்தைக் கேட்ட இங்கிலீஷ் கம்பெனியார் மிகவும் சீற்றங்கொண்டு நவாப்போடு யுத்தம் செய்ய ஏற்பாடுகள் செய்தனர்.

கிளைவும் வாட்ஸனும் வங்காளம் வருதல் :—கிளைவ் வசம் சில சேனைகளையும், வாட்ஸன் வசம் சில கப்பல்களையும் இங்கிலீஷ்காரர் அனுப்பினார்கள். வாட்ஸன் கல்கத்தாவைப பிடித்துக்கொண்டார். உடனே நவாப் சமாதானத்துக்கு வந்தார். தாம் கைப்பற்றியதையெல்லாம் திரும்பக் கொடுத்துவிட்டுக் கம்பெனியார் அனுபவித்த உரிமைகளை ஊர்ஜிதம் செய்தார்.

இந்தச் சமயத்தில் பிரெஞ்சுக்காரரோடு யுத்தம் ஆரம்பித்தது. கிளைவ் சந்திரநாகூரைப் பிடித்தார். ஸிராஜ்-உத்-தௌலா பிரெஞ்சுக் கட்சியில் சேர்ந்துகொண்டு இங்கிலீஷ்காரரை வங்காளத்திலிருந்து துரத்திவிட யத்தனம் செய்தார். இங்கிலீஷ்காரரும் ஸிராஜ்-உத்-தௌலாவை நீக்கிவிட, அவர் மந்திரியான மீர் ஜாபர் என்பவரோடு சூழ்ச்சி செய்தனர். ஸிராஜ்-உத்-தௌலாவை விட்டு விலகி இங்கிலீஷ்காரருக்கு உதவிசெய்தால், மீர் ஜாபர் தாம் நவாப ஆகலாம் என்று நினைத்தார். இதையறிந்த உமர் சந்து என்பவர் இவ்வித ரகசிய ஏற்பாட்டைப் பகிரங்கப்படுத்தி விடுவதாகப் பயமுறுத்தினர். அவரை வசப்படுத்த கிளைவ் முப்பது லக்ஷம் ரூபாய் அவருக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார். கிளைவ் இந்த ஒப்பந்தத்தை உண்மையான உடன்படிக்கையில் காட்டாமல் பொய்யான வேறொரு கடிதத்தில் எழுதி, உமர் சந்து நம்பும்படி செய்தார்.

பிளாசிச் சண்டை :—1757-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ம் தேதி பிளாசி என்னும் இடத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. ஸிராஜ்-உத்-தௌலாவின் சேனை தோல்வியடைந்தது. அவர் தப்பி ஓடுகையில், மீர்ஜாபரின் குமாரர், அவரைப் பிடித்துக் கொன்றுவிட்டார். இந்தியாவில் இங்கிலீஷ் ஆட்சியை ஏற்படுத்துவதற்குப் பிளாசி வெற்றி அஸ்திவாரம் நாட்டியது. சண்டைக்குப் பிறகு மீர் ஜாபர் வங்காள நவாப்பாக நியமிக்கப்பட்டார். கம்பெனியாருக் கடங்கி அவர் நடந்துகொண்டார். ஆகவே வங்காளம் முழுதும் அவர்கள் கைவசம் இருந்ததென்றே சொல்லலாம்.

வங்காளத்தின் முக்கியம் :—மிகவும் செழுமையான கங்கை டெல்டாவில் வங்காளம் இருந்ததால் அதன் செல்வமும் வியாபாரமும் அதிகம். கங்கை நதியின் கிளைகள் வழியாகப் பெரிய கப்பல்களும் உள்நாட்டுக்குள் வந்து வியாபாரம் செய்யமுடியும். கடற்கரையிலிருந்து சுமார் 70 மைல்களுக்குஅப்பால் கல்கத்தா இருந்தபோதிலும், கப்பல்கள் வந்து தங்க ஹூக்ளி நதி சௌகரியமா யிருந்ததால் கல்கத்தா பிரதான நகரமாகியது. இராஜ்ஜிய அதிகாரம் கையில் கிட்டியவுடன், கம்பெனியார் வங்காளத்தில் ஏராளமான செல்வம் திரட்ட ஆரம்பித்தனர். வங்காளத்திலிருந்து இந்தியாவின் மற்றப் பாகங்களை இங்கிலீஷ்காரர் ஜெயிக்க அனுகூலமா யிருந்தது.

வங்காளத்தில் ஆங்கிலேயர் பரவிய முறை :—இந்தியாவில் மொகலாயரும் அவர்களுக்குமுன் இராஜ்ஜிய ஸ்தாபனம் செய்தவர்களும் வடமேற்கேயுள்ள பஞ்சாபிலிருந்து தொடங்கி, கிழக்கே கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் இராஜ்ஜியத்தை விஸ்தரித்தனர். ஆனால் இங்கிலீஷ்காரர் முதலில் வங்காளத்தை ஜெயித்து, கங்கைநதி முகத்துவாரத்தில் ஆரம்பித்து, உள்நாட்டில் தங்கள் அதிகாரத்தைப் பரவச் செய்தார்கள்.

7. வங்காளத்தின் நிலைமை

மீர் ஜாபர் :—மீர் ஜாபர் வங்காள நவாப் ஆனவுடன் தமக்கு உதவி செய்த கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்குப் பல வெகுமதிகள் கொடுத்துத் திருப்தி செய்தார். முக்கியமாகக் கிளைவுக்கு ஏராளமான பொருள்களும் ஆபரணங்களும் கொடுத்ததுமின்றி, 24-பர்காணம் என்று வழங்கும் கல்கத்தாவைச் சுற்றிலுமுள்ள கிராமங்களையும் ஜாகீராகக் கொடுத்தார். இவ்வாறு மிதமிஞ்சிய வெகுமதிகள் கொடுத்ததால் வங்காள நவாப்பின் கஜானா காலியாகி விட்டது. மீர் ஜாபர்வசம் இருந்தசொந்தச்செல்வமும்செலவாகிவிட்டது. இராஜ்ஜிய விவகாரத்தைக் கவனித்து நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்குச் சமபளம் கொடுக்கப் போதுமான பணம் அவரிடம் இல்லை. இராஜ்ஜியம் மிகவும் பாழடைந்தது. சீர் திருத்தம் செய்து அரசு செய்ய மீர் ஜாபருக்குத் திறமையும் போதாது.

பிளாசி யுத்தம் முடிந்த பிறகு 1760-ல் கிளைவ் இங்கிலாந்துக்குத் திரும்பி விட்டார். இந்தியாவிலிருந்த இங்கிலீஷ்காரர் எல்லோரும் தத்தம் சொந்தச் செல்வத்தை அதிகப்படுத்த முயற்சி செய்தார்களேயன்றி, மீர் ஜாபருக்கு உதவியாக இராஜ்ஜிய நிர்வாகத்தைச் சீர்திருத்த முன்வரவில்லை. சுங்கங்கள் கொடுக்காமல் இலவச வியாபாரம் செய்யக் கம்பெனியாருக்கு நவாப் கொடுத்திருந்த அனுமதிச்சீட்டுகளைக் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் தங்கள் சொந்த வியாபாரத்துக்கு உபயோகப்படுத்தியும், சுதேச வியாபாரிகளுக்கு விலைக்கு விற்றும் பெருத்த லாபம் சம்பாதித்தார்கள். கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சொந்தமாகத் தனி வியாபாரம் செய்துகொள்வதைக் கம்பெனி டைரெக்டர்கள் கண்டிக்க வில்லை. தூரதேசமாகிய இந்தியாவுக்கு இங்கிலீஷ்காரர்

போவதற்கு ஒரு தூண்டுகோலாக ஏராளமான பணம் சம்பாதிக்கலாம் என்றிருந்த ஆசையைக் கெடுக்கவேண்டாம் என்று கம்பெனியார் சும்மாவிருந்தனர். ஆகவே ஒவ்வொருவரும் தம் சாமர்த்தியத்திற் கேற்றவாறு தம்முடைய சொந்தவியாபாரத்தைஅதிகப்படுத்திப் பெருத்தலாபத்தை அடைந்து வந்தனர். இதனால் கம்பெனியின் வியாபாரமும் வருமானமும் குறைந்தன. அரசாங்கத்துக்கு உரித்தான சுகங்கள் செலுத்தாமல் இவர்கள் வியாபாரம் செய்ததால், நவாப்பின் வருமானமும் குறைந்தது.

1760-ம் வருஷம் வங்காளத்தின் நிலைமை மிகவும் கேவலமாயிருந்தது. வருமானம் குறைந்ததால் கம்பெனியாரிடம் பணம் இல்லை. ராணுவத்தின் சம்பளம் பல மாதங்களாகக் கொடுபடவில்லை. ராணுவவீரர் எந்த நிமிஷம் கலகம் செய்து கிளம்பலாம் என்று காத்திருந்தனர். வங்காளத்தில் திறமையான ஆட்சியின்மையால் மகாராஷ்டிரர்களாவது, மொகலாய அரசராவது படையெடுத்து வரலாம் என்ற அச்சமும் இருந்தது. மொகலாய சக்கரவர்த்தி ஷா ஆலம் வங்காளத்தைத் திரும்பக் கைக்கொள்ள ஆசைப்பட்டு அயோத்தி நவாப்போடு சேர்ந்துகொண்டு 1760-ம் வருஷம் படையெடுத்து வந்தார். ஆனால் அவர் தோல்வியடைந்து சமாதானம் செய்துகொண்டு திரும்பினார்.

மீர் காசிம் நவாப்பானது:—இந்த நிலையில் மீர் ஜாபரை நவாப்பாக மேலும் வைத்திருப்பது பிரயோஜனமில்லையென்று கல்கத்தாவிலுள்ள கம்பெனி அதிகாரிகள் தீர்மானித்து, அவரைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கிவிட்டு மீர் காசிம் என்ற அவருடைய மருமகனை நவாப்பாக்கினார்கள். இங்கிலீஷ் சேனைகளின் போஷணைச் செலவுக்காக

பர்த்வான், சிட்டகாங், மிதுனபுரி என்னும் ஜில்லாக்களைக் கம்பெனிக்குச் சர்வமானியமாக நவாப் மீர் காசீம் கொடுத்தார். கம்பெனி உத்தியோகஸ்தர்கள் மீர் காசிமிடமிருந்து ஏராளமான வெகுமதிகள் வாங்கிக்கொண்டார்கள்.

மீர் காசிம்

மீர் காசிம் அரசாளுவதில் நல்ல திறமைசாலி. வெகு சீக்கிரம் வங்காளத்தின் நிலைமையைச் சீர்திருத்தினார். கம்பெனிக்கு அளித்துள்ள இலவச சுதந்தரத்தைக் கம்பெனி வியாபாரத்திற்கு மாத்திரம் அனுபவிக்கலாமென்றும், சொந்த வியாபாரத்திற்காக இங்கிலீஷ்காரர் உபயோகப்படுத்துவது நியாயமல்ல வென்றும் மீர் காசிம் முறையிட்டார். ஆனால் கம்பெனி அதிகாரிகளில் பெரும்பான்மையோர் இவ்விதச் சொந்த வியாபாரத்தினால் பெருத்த லாபம் அடைந்து வந்ததால், நவாப்பின் ஆட்சேபணைகளை மதிக்கவில்லை. தங்கள் சொந்த வியாபாரத்தில் நவாப் தலையிடக் கூடாது என்று அவர்கள் வாதித்தனர். நவாப் இணங்காவிடில் அவரை விலக்கிவிட்டு முன்போலவே தங்கள் இஷ்டப் பிரகாரம் கேட்டு வந்த மீர் ஜாபரை நவாப்பாக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

தம்முடைய நியாயமான ஆட்சேபணையை இங்கிலீஷ்காரர் ஏற்றுக்கொள்ள மறுத்ததை அறிந்த மீர் காசிம் வெகு சினங்கொண்டார். இங்கிலீஷ் வியாபாரிகளிடம் சுங்கம் வசூலிக்காமல், இந்திய வியாபாரிகளிடம் மட்டும் வசூலிப்பது அநியாயம் என்று கருதி, எல்லா வியாபாரி

களும் சுங்கவரி கொடுக்காமல் வியாபாரம் செய்யலாம் என்று சொல்லிவிட்டார். இந்திய வியாபாரிகள் முன் போலவே சுங்கம் கொடுக்கவேண்டுமென்றும், தாங்கள் மாத்திரம் சுங்கம் செலுத்தாமல் வியாபாரம் செய்யவேண்டு மென்றும் இங்கிலீஷ்காரர் நவாப்பிடம் தெரிவித்தார்கள். ஆனால் இதை நவாப் ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கிலீஷ் காரர் தம்மை எதிர்ப்பது நிச்சயம் என்று தெரிந்தவுடன் மீர் காசிம் தாமே முதலில் யுத்தத்தை ஆரம்பித்தார்.

பக்ஸார் சண்டை :—பாட்னாவைக் கைப்பற்றி அங் குள்ள இங்லீஷ்காரரை யெல்லாம் மீர் காசிம் சிறைப்படுத் தினார். ஆனால் கம்பெனியின் படை மீர் காசிம் சேனையை விரட்டி முறியடித்தது. அயோத்தி நவாப்பாகிய ஷூஜா-உத்-தௌலாவையும், மொகலாய அரசரான ஷா ஆலத்தையும் துணை சேர்த்துக்கொண்டு கம்பெனியாரை மீர் காசிம் எதிர்த் தார். பக்ஸார் என்னும் இடத்தில் 1764-ம் வருஷம் மீர் காசிம் தோல்வியடைந்து ஓடிப்போய்விட்டார். அயோத்தி நவாப்பும் டில்லி அரசரும் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டனர். பிளாஸி யுத்தத்தின் பலனாக வங்கா ளத்தில் ஏற்பட்ட இங்கிலீஷ் அதிகாரம் பக்ஸார் சண்டையின் பலனாக நிச்சயமாக ஸ்தாபிக்கப்பட்டுப் பூரணமாயிற்று.

மீர் ஜாபரின் இரண்டாவது ஆட்சி :—மீர் ஜாபரை மறுபடியும் வங்காள நவாப்பாக நியமித்தார்கள். ஆனால் அவர் பெயருக்கு மட்டும்தான் நவாப். வங்காளத்தின் ஆட்சி முழுவதையும் கம்பெனியார் நடத்தினர்.



கிளைவ் காலத்திய
இந்தியா
1767
பஞ்சாப்
சிந்து
இந்துஸ்தானம்
அயோத்தி
பீஹார்
வங்காளம்
ஒரிஸா
நிஜாம்
ராஜ்ஜியம்
வடசர்க்கார்
மைசூர்
கர்நாடகம்
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
டில்லி
காசி
கோவா
பூனா
சென்னைப்பட்டணம்

8. லார்டு கிளைவ் வங்காள கவர்னர்

கிளைவ் இந்தியாவுக்குத் திரும்புதல்:—வங்காளத்தின் நிலைமையைப்பற்றிக் கவலைகொண்டு லண்டனில் இருந்த கம்பெனி நிர்வாகஸ்தர்கள் (டைரெக்டர்கள்) உடனே கிளைவை வங்காள கவர்னராக அனுப்பினார்கள். பிளாஸியில் ஜெயம்பெற்ற கிளைவுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் லார்டு பட்டம் கொடுத்துக் கௌரவித்தார்கள். கிளைவ் இந்தியா வந்து சேருமுன் பக்ஸார் சண்டை முடிந்து விட்டது. கிளைவ் 1765-ம் வருஷம் வங்காள கவர்னராக வந்து சேர்ந்தார்.

ஆங்கிலேயர் அதிகாரம் நிலைக்க ஏற்ற தருணம்:—வங்காளத்தின் நிலைமை இவ்வாறு இருக்க, வட இந்தியாவிலும் வலிமையுள்ள இராஜ்ஜியம் ஒன்றும் இல்லை. சக்கரவர்த்தி என்று பெயர்பூண்ட டில்லி அரசரும், அயோத்தி நவாப்பும் பக்ஸாரில் தோல்வி யடைந்தார்கள். முன்னேற்ற மடைந்து வந்த மகாராஷ்டிரரும் 1761-ம் வருஷம் நடந்த பானிப்பட்டு யுத்தத்தில் வீழ்ச்சி யடைந்தனர். அந்தச் சமயம் வடமேற்கு எல்லையிலிருந்து வேறு ஜாதியார்கள் படையெடுத்து வருவார்கள் என்ற அச்சமும் இல்லை. ஏனெனில் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் உள்ள மலைப்பிரதேசத்தில் ஆப்கானிஸ்தானம் என்ற ஓர் இராஜ்ஜியம் ஏற்பட்டது. வடமேற்கிலுள்ள பஞ்சாபில் சீக்கர்கள் அதிகப் பலம் பொருந்தியவர்களாக இருந்ததால் எந்த அன்னியரும் இந்தியாவில் படையெடுக்க முடியாது. ஆகையால் இதுவே இங்கிலீஷ்காரர் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்ற சமயமா யிருந்தது.

அலகாபாத் உடன்படிக்கை:—பக்ஸார் சண்டை முடிவில் அலகாபாத்தில் ஒருஉடன்படிக்கையைக்கிளைவ்ஏற்பாடு

செய்தார். இந்த உடன்படிக்கையை இங்கிலீஷ் கம்பெனியார், அயோத்தி நவாப், டில்லிச் சக்கரவர்த்தி ஷா ஆலம் இம் மூவரும் செய்துகொண்டனர். ஷா ஆலம் சக்கரவர்த்தியைக் கம்பெனியார் பாதுகாப்பதாக ஏற்றுக்கொண்டனர். ஷா ஆலம் வசிப்பதற்காகக் கோரா, அலகாபாத்து என்ற ஜில்லாக்களை நவாப்பிடமிருந்து கிளைவ் வாங்கிக் கொடுத்தார். அவருக்கு வருஷத்துக்கு 26 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் அளிப்பதாகவும் கிளைவ் ஒப்புக்கொண்டார். வங்காளம்,



கிளைவ் திவானி பெறுதல்

பீஹார், ஒரிஸ்ஸா இம் மூன்று மாகாணங்களிலும் வரி வசூல் செய்து கொள்ளும் அதிகாரத்தைக் கம்பெனியாருக்கு ஷா ஆலம் கொடுத்தார். வட சர்க்காரையும் ஆங்கிலேயர் பெற்றுக்கொண்டனர். அயோத்தி நவாப்பும் இங்கிலீஷ் கம்பெனியாரின் மேற்பார்வைக் கடங்கிய சிற்றரசராக இருக்க ஒப்புக்கொண்டார். அவரது இராஜ்ஜி

யத்தை மகாராஷ்டிரர் எதிர்க்காமல் பாதுகாப்பதாக இங்கிலீஷ்காரர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இதன் பொருட்டு அயோத்தியில் நிறுத்தப்பட்ட இங்கிலீஷ் சைனியத்தின் போஷணைக்காக அயோத்தி நவாப் பிரதி வருஷமும் கப்பங் கட்டுவதாகச் சம்மதித்தார்.

கிளைவ் செய்த சீர்திருத்தங்கள் ;—1765-ல் கிளைவ் வங்காள கவர்னராக வந்தபொழுது, அங்குக் கம்பெனி வியாபாரிகள் பல அநீதிச் செயல்கள் புரிந்துகொண்டிருந்தனர். கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சொந்த வியாபாரம் செய்துகொண்டும், லஞ்சம் வாங்கிக்கொண்டு மிருந்தார்கள். அவர்கள் வெகுமதிகள் வாங்கக்கூடாது என்று கிளைவ் கண்டித்தார். அவர்கள் வரி கொடுக்காமல் சொந்த வியாபாரம் செய்துகொண்டிருந்த வழக்கத்தை அடியோடு நிறுத்திவிட முயற்சி செய்தார். ஆனால் இது விஷயத்தில் இங்கிலாந்திலுள்ள கம்பெனி டைரெக்டர்கள் சம்மதிக்கவில்லை. சொந்த வியாபாரத்திற்கு ஓர் அளவு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டது. சண்டையில்லாத காலத்தில் சேனை வீரர்களுக்குச் சாப்பாட்டுச் செலவு (பத்தா) கொடுக்கும் மாமூல் வழக்கத்தைக் கிளைவ் நிறுத்திவிட்டார். கம்பெனியார் உப்பு வியாபார உரிமையை வைத்துக்கொண்டு விலை உயர்த்தி வந்தார்கள். இதை ஒழுங்கு செய்து உப்பு விலையைக் குறைத்தார். இந்தச் சீர்திருத்தங்களைச் செய்ததால் இந்தியாவிலுள்ள கம்பெனி உத்தியோகஸ்தர்கள் கிளைவிடம் விரோதங் கொண்டனர்.

வங்காளத்தில் இரட்டை ஆட்சி:—வங்காளத்திலுள்ள ஊழல்களைச் சீர்திருத்திய பின்னர், அரசியல் திட்டத்தையும் கிளைவ் திருத்தி யமைத்தார். (1) வங்காளத்தில் வரி வசூல் செய்யும் வேலை கம்பெனியாரைச் சேர்ந்தது

ஆனால் (2) போலீஸ் வேலையும், வழக்குகளை விசாரித்து நீதி செலுத்தும் வேலையும் நவாப்பைச் சேர்ந்தன என்றும், நவாப்பின் செலவுக்காக வருஷத்தில் இவ்வளவு தொகை கொடுப்பது என்றும் ஏற்படுத்தப்பட்டன. இப்படி அரசாங்க அலுவல்களை இரண்டு பிரிவுகளாக்கிய ஏற்பாடு இரட்டை ஆட்சி முறை எனப்படும்.

கிளைவ் இங்கிலாந்துக்குச் செல்லுதல் :—1767-ம் வருஷம் ராபர்ட் கிளைவ் இங்கிலாந்துக்குத் திரும்பினார். அவர் செய்த சீர்திருத்தங்களால் இந்தியாவில் இங்கிலீஷ் அதிகாரம் பலப்பட்டது. நிர்வாகத்தில் அவர் ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறை அதிகத் திருப்தியாக நடக்காவிட்டாலும், அது அக்கால நிலைக்கு ஏற்றதாகவே இருந்தது. இந்தியாவில் கிளைவ் செய்த சீர்திருத்தங்களால் அவருக்குப் பல விரோதிகள் கிளம்பினார்கள். இங்கிலாந்து தேசச் சட்ட சபையாகிய பார்லிமெண்டில் கிளைவை விசாரணை செய்தார்கள். சில வருஷங்கள் விசாரணை நடந்த பிறகு, இங்கிலாந்து தேசத்தின் பெருமையையும் செல்வத்தையும் அதிகரிக்கச் செய்த மகா புருஷர் என்று கிளைவைப் புகழ்ந்து விடுதலை செய்தார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஸ்தாபித்தவர்களில், முதலில் அஸ்திவாரம் நாட்டி ஏற்பாடு செய்தவர் கிளைவ். பிறகு அவர் வழியைப் பின்பற்றி மற்றவர்கள் பாடுபட்டு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி வேரூன்றும்படி செய்தார்கள்.

9. முதல் மைசூர் யுத்தம் (1767—1769)

தென்னிந்தியாவின் நிலைமை :—டூப்ளேயின் வீழ்ச்சிக்குப் பிறகு தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரம் ஓங்கி வளர்ந்தது. மகமது ஆலிக்கு இராஜ்ஜியம் சம்பா

தித்துக் கொடுத்த பிரிட்டிஷ்காரரே அவரது இராஜ்ஜியத்தை ஆட்சி செய்து காப்பாற்றவேண்டியிருந்தது. இதனால் கம்பெனி உத்தியோகஸ்தருக்கு அதிகப் பொறுப்பு ஏற்பட்டது. கர்நாடகத்தின் விரோதிகள் மைசூர் அரசர், நிஜாம் அரசர், மகாராஷ்டிரர் ஆகிய மூவர் ஆவர். கர்நாடகத்தைக் காப்பாற்றும் காரணமாகப் பிரிட்டிஷ் கம்பெனியார் மைசூருடனும், மகாராஷ்டிரரோடும் சண்டை செய்தனர். நிஜாம் அரசர் சிநேகமாக ஒப்பந்தம் செய்துகொண்டதால், அக்காலம் முதல் நிஜாம் அரசர்கள் பிரிட்டிஷாரின் சிறந்த நண்பர்களாக இருந்து வருகிறார்கள்.

ஹைதர் ஆலி :—விஜயநகர இராஜ்ஜியம் வீழ்ந்த பிறகு மைசூர் இராஜ்ஜியம் காலக்கிரமத்தில் உண்டாகியது. 18-ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் விளங்கிய வல்லரசுகளில் மைசூர் இராஜ்ஜியம் முக்கியமானது. மைசூரின் முன்னேற்றத்துக்குக் காரணமாயிருந்தவர் ஹைதர் ஆலி. மைசூர் சேனையில் ஒரு ஏழைப் போர்வீரராயிருந்த ஹைதர் தம்முடைய சாமர்த்தியத்தாலும், போர் வன்மையாலும் மைசூர் சேனாதிபதியானார். அரசர் ஒருவர் இருந்தாலும், உண்மை இராஜ்ஜியாதிகாரம் முழுதும் நஞ்சராஜர் என்ற மந்திரி வசம் இருந்தது. மந்திரியின் அதிகாரத்தை யொடுக்கி அரசரை விடுவிக்கும் வேலையில் ஹைதர் முனைந்து ஜெயம் அடைந்தார். நஞ்சராஜாது அதிகாரம் வீழ்ந்தது. ஆனால்

ஹைதர் ஆலி

முன்போலவே அரசரை அடக்கி வைத்துவிட்டு ஹைதர் தாமே சர்வாதிகாரியாக ஆட்சி செய்யத் தொடங்கினார். சுற்றிலுமுள்ள இராஜ்ஜியங்களோடு இடைவிடாமல் போர்

புரிந்து மைசூர் இராஜ்ஜியத்தின் எல்லையைக் கொஞ்சங் கொஞ்சமாக விசாலித்தார். ஹைதருடைய பலம் அதிகரிப்பதைக் கண்ட நிஜாமும் மகாராஷ்டிரரும் கவலைகொண்டனர். 1765-ல் மகாராஷ்டிரர்கள் படையெடுத்து வந்தனர். ஹைதர் தோல்வியடைந்தார்; அவர்களுக்குப் பெருந் தொகையைக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். ஆகவே வடக்கே ஹைதர் ஆதிக்கம் பரவச் செய்வது சாத்தியமாயில்லை; ஆயினும் அவர் மனந்தளரவில்லை. மேற்கிலும் தெற்கிலும் படையெடுத்து வெற்றி பெற்ருர். திண்டுக்கல் கள்ளிக்கோட்டை முதலிய இடங்களைக் கைப்பற்றினுர்; பிறகு கிழக்கே கர்நாடகத்திலும் பிரவேசித்தார்.

முதல் மைசூர் யுத்தம் :— கிளைவ் இந்தியாவிலிருந்து திரும்பிச் செல்லும் சமயத்தில் ஹைதர் பலத்தைக் கண்டிப்பது கம்பெனியாரின் வேலையாயிற்று. ஹைதருக்கு விரோதமாக நிஜாம் அரசருடனும் மகாராஷ்டிரரோடும் கம்பெனியார் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆனல் ஹைதர் தந்திரமாக மகாராஷ்டிரர்களுக்கும் நிஜாமுக்கும் ஏராளமாகப் பணம் கொடுத்து அவர்களைக் கலைத்துக் கம்பெனியார் கட்சியிலிருந்து விலக்கிப் பிரித்துவிட்டார். நிஜாமும் மகாராஷ்டிரர்களும் விலகிவிடவே பிரிட்டிஷார் மட்டுமே ஹைதருக்கு எதிராக யுத்தம் செய்தனர். பெருத்த சேனையுடன் ஹைதர் செங்கம்கணவாய்வழியாகக் கர்நாடகத்தில் இறங்கினர். சென்னையிலிருந்து வந்த இங்கிலீஷ் சைனியம் செங்கம் கணவாயிலும், திருவண்ணுமலையிலும் ஹைதர் ஆலியைத் தோற்கடித்தது. பம்பாயிலிருந்து ஒரு பிரிட்டிஷ் சேனை ஹைதர் ஆலியின் முக்கியக் கோட்டைகளாகிய திண்டுக்கல், கோயம்புத்தூர், வாணியம்பாடி, பாராமஹால் முதலியவைகளை ஜெயித்தது. ஹைதர் ஆலியின் பலம் அழிந்துபோகும் நிலைமையில்

இருந்தது. ஆனால் ஹைதர் திடீரென்று ஒரு சாமர்த்திய மான தந்திரம் செய்தார். தம்மை எதிர்த்திருந்த பிரிட்டிஷ் சேனைகளை ஏமாற்றிவிட்டு அதிவேகமாகப் பிரயாணம் செய்து சென்னப்பட்டணத்தைத் தாக்கினார். எதிர் பாராத விதமாக ஹைதர் திடீரென்று சென்னையை எதிர்த்த வுடன், அங்கிருந்த பிரிட்டிஷார் பீதியடைந்தனர். அவர் கூறிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு சண்டையை நிறுத் திச் சமாதானம் செய்துகொண்டனர். இந்த சென்னை உடன்படிக்கைப்படி ஹைதரும் கம்பெனியாரும் ஒருவருக் கொருவர் ஆபத்துச் சமயத்தில் உதவி செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டனர்.

10. கிளைவுக்குப் பின் கம்பெனியின் அரசாட்சியும் வியாபாரமும்

இரட்டையாட்சியிலுள்ள கெடுதல்கள் :—கிளைவ் திரும்பிய பிறகு வங்காளத்தில் மறுபடியும் குழப்பம் நேரிட் டது. அவர் ஏற்படுத்திய இரட்டையாட்சி செவ்வனே நடை பெறவில்லை. தேசத்தில் பொறுப்பான மத்திய சர்க்கார் இல்லாமலிருந்ததால் ஒருவரும் ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிக்கவில்லை. கம்பெனியார் கொடுக்கும் பணம் போதாததால் நவாப் செய்யவேண்டிய போலீஸ் வேலையும் நீதிபரிபாலனமும் சரியாக இல்லை. கம்பெனி உத்தியோகஸ் தர்களோ, ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிக்கத் தாங்கள் பாத்தியப்பட்டவர்கள் அல்லர் என்றும், கூடியமட்டும் வரி வசூல் செய்வதே தங்கள் கடமை என்றும் இருந்தார்கள். நிர்வாகத்தின் இரு பிரிவுகளும் ஒன்றுக்கொன்று பொறுப் பில்லாமல் இருந்ததால் ஜனங்கள் வெகு கஷ்டப்பட்டனர்.

கம்பெனி உத்தியோகஸ்தர் வரி வசூலிக்கும் முறை யில் ஜனங்கள் பரம ஏழைகளாயினர். ஒவ்வொரு ஜில்லா

விலும் வரி வசூலிக்கும் வேலையை ஏலத்துக்கு விடுவது வழக்கம். எவன் அதிகப் பணம் வசூலிக்க ஏற்றுக்கொள்ளு கிறானோ, அவனிடம் வரி வசூல் செய்துகொள்ளும் வேலை விடப்பட்டது. அவனுக்கு அமீல்தார் என்று பெயர். அவன் கம்பெனியாருக்குக் குத்தகையாகக் கொடுக்கவேண் டிய தொகைக்குமேல் அதிகமாக வசூல் செய்தால்தான் அவனுக்கு லாபம். ஆகவே அவனுடைய ஆட்கள் ஜனங் களை இம்சித்து வரி வசூல் அதிகம் செய்தார்கள். ஜனங்கள் உணவுக்கு வேண்டிய தானியங்கூட வைத்துக்கொள்ள முடியாமல் தவித்தார்கள்.

பஞ்சம் :—1770-ம் வருஷம் வங்காளத்தில் ஒரு கடும் பஞ்சம் நேரிட்டது. இந்தப் பஞ்சத்தில் பல ஜனங்கள் மடிந்தனர். இந்தியாவில் பஞ்சம் ஏற்படுவது சகஜம். எனினும், ஒழுங்கான அரசாங்கம் இருந்தால் பஞ்சத்தின் கொடுமையை ஒருவாறு குறைத்திருக்கலாம். ஆனால் இராஜ் ஜிய நிர்வாகம் சீர்கேடாக இருந்ததால் பஞ்சத்தில் கஷ்டப் படுகிறவர்களுக்கு உதவி செய்வது சாத்தியமாக இல்லை. மேலும், அக்காலத்தில் ரஸ்தாக்கள் முதலிய போக்குவரத் துச் சாதனங்கள் இல்லை. ஆதலால் மற்ற இடங்களிலிருந்து பஞ்சம் நேர்ந்த இடத்துக்கு உணவுப்பொருள்கள் கொண்டு போவது கடினமா யிருந்தது. இந்தப் பஞ்சத்தில் வங்காள தேச மக்களில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் மரித்தனர்.

கம்பெனியின் நஷ்டம் :—வியாபாரம், இராஜ்ஜிய பரி பாலனம் என்ற இரண்டும் கலந்த நோக்கமாகக் கம்பெனி யாரின் இலட்சியம் இருந்ததால், அவர்கள் ஒன்றையும் சரி வரக் கவனிக்க முடியவில்லை; இராஜ்ஜிய நிர்வாகம் கேவல மானதுமன்றி, கம்பெனி வியாபாரமும் குறைந்து லாபம் கிடைப்பதும் அரிதாயிற்று. இதே சமயத்தில் தென்னிந்தி யாவில் ஹைதர் அலியுடன் போர் செய்யும்படி நேரிட்ட

தால் கம்பெனியின் செலவு அதிகரித்தது. ஆகையால் இந்தியாவிலுள்ள நிர்வாக ஊழல்களை மறுபடியும் சீர்திருத்திச் சரியான ஆட்சிமுறையை ஏற்படுத்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார்.

காலக் குறிப்பு :—

1756	ஸிராஜ்-உத்-தௌலா கல்கத்தாவைப் பிடித்தது
1757	பிளாசிச் சண்டை
1763	மீர் காசிம் சண்டை தொடங்கியது
1764	பக்ஸார் சண்டை
1765—1767	லார்டு கிளைவ் வங்காள கவர்னர்
1765	அலகாபாத் உடன்படிக்கை
1767—1769	முதல் மைசூர் யுத்தம்
1770	வங்காளத்தில் பஞ்சம்
1771	மகாராஷ்டிரர் ஹைதரை ஜெயித்தது
1772—1774	வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னர்
1773	பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஏற்படுத்திய ரெகுலேட்டிங் சட்டம்.

11. வாரன் ஹேஸ்டிங்ஸ்

வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னர் :—வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் 1732-ல் ஒரு ஏழைக் குடும்பத்தில் இங்கிலாந்தில் பிறந்தவர். தமது 18-வது வயதில் இந்தியாவுக்கு வந்தவர். இவர் கிளைவின் கீழ் கல்கத்தாவில் இருந்தவர். பிறகு சென்னையிலும் இருந்தவர். இவர் 1772-ல் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். வாரன் ஹேஸ்டிங்ஸ் இளமைப் பருவத்திலிருந்தே கம்பெனி உத்தியோகத்திலிருந்த வராதலால் இந்தியாவிலுள்ள நிலைமையை நன்கு அறிந்திருந்தார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ்

கம்பெனி ஆட்சியைச் சீர்திருத்துவதுடன், இந்திய ஜனங்களுக்கு உண்மையில் க்ஷேமமும் சந்தோஷமும் அதிகரிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும் ஹேஸ்டிங்ஸ் பாடுபட்டு உழைத்தார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள் :— இரட்டையாட்சி முறையை விடுத்துக் கம்பெனியாரே வங்காளத்தை அரசாளும் பொறுப்பு முழுவதும் ஏற்றுக் கொண்டனர். வங்காள நவாப்புக்குக் கொடுக்கப்படும் தொகை பாதியாகக் குறைக்கப்பட்டது. அவர் அரசர் பதவியிலிருந்து விலகிக் கம்பெனியார் கொடுக்கும் பென்ஷனைப் பெற்றுக்கொண்டு ஜீவனம் செய்துவந்தார். குத்தகைக்கு விட்டு வரி வசூலிக்கும் வழக்கத்தை நீக்கிவிட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கலெக்டரை ஹேஸ்டிங்ஸ் நியமித்தார். எல்லா ஜில்லாக்களின் வரி வசூல் விஷயங்களை மேற்பார்வையிட ரிவினியு போர்டு (சபை) ஒன்றைக் கல்கத்தாவில் ஏற்படுத்தினார். அந்தந்த வருஷத்திய மாசூல் பேரில் நிலவரி விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. ஜில்லாவில் வரி வசூலைக் கவனிப்பதும், நீதிபரிபாலனம் செய்வதும் கலெக்டர்களுடைய வேலை. கலெக்டர்களுக்குதவியாகச் சில இந்திய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டார்கள். கல்கத்தாவில் சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரிக்க இரண்டு பெரிய கோர்ட்டுகளை ஏற்படுத்தினார். இந்து, மகமதிய சட்டங்களை எழுதுவித்தார்.

கம்பேனியின் நிர்வாகம் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு வருதல் :—கம்பெனி ஆட்சியில் இந்தியாவில் ஏற்பட்ட அட்டூழியங்களையும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சம்பாதித்த ஏராளமான லாபத்தையும், கம்பெனிக்கு லாபம் குறைந்ததையும் கவனித்த பிரிட்டிஷ் அரசாங்க மந்திரிகள்

இந்தியாவில் கம்பெனி ஆட்சியை மேற்பார்வை செய்வதற்குப் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகாரம் இருந்தால் தான் நிர்வாகம் நேர்மையா யிருக்குமென்று நிச்சயம் செய்தார்கள். ஆகையால் பார்லிமெண்டு சபையார் வர்த்தகக் கம்பெனிக்குக் கடன் பணம் கொடுத்து, அதுமுதல் தங்கள் நிர்வாகத்தில் கம்பெனி இருந்து வர வேண்டுமென்று சில திட்டங்களை ஏற்படுத்தினர். இவ்வித நோக்கத்துடன் பின்வரும் சீதிருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

ரேகுலேட்டிங் ஆக்ட் :—பார்லிமெண்டார் 1773-ல் இந்தச் சட்டத்தைச் செய்தனர்.

ரெகுலேட்டிங் ஆக்டுப்படி சென்னை, பம்பாய் கவர்னர்களுக்கு மேலதிகாரியாகக் கவர்னர்-ஜனரல் என்று வங்காள கவர்னர் உயர்த்தப்பட்டார். கவர்னர்-ஜனரலுக்கு உதவியாக நான்கு மெம்பர்களடங்கிய ஒரு நிர்வாக சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் 5 வருஷம் உத்தியோகம் வகிக்கலாம். கல்கத்தாவில் ஒரு உன்னத (சுப்ரீம்) கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டது. மற்றக் கோர்ட்டுகளுக் கெல்லாம் மேல் விசாரணைக் கோர்ட்டாக அது விளங்கியது. அதில் ஒரு தலைமை நியாயாதிபதியும் மூன்று உப நியாயாதிபதிகளும் நியமிக்கப்பட்டார்கள். இந்த நியாயஸ்தலம் கவர்னர்-ஜனரல் அதிகாரத்துக்கு உட்பட்டதில்லை.

ஹேஸ்டிங்ஸ் கவர்னர்-ஜனரல் (1774—1785) :—ரெகுலேடிங் ஆக்டுப்படி இந்தியா முழுமைக்கும் முதல் கவர்னர்-ஜனரலாக ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார்.

நிர்வாக சபையார் ஹேஸ்டிங்ஸுக்கு இடையூறு செய்தல் :—நிர்வாக சபையார் நால்வரில் மான்சன், க்ளாவரிங், பிரான்ஸிஸ் இம் மூவரும் ஹேஸ்டிங்ஸுக்கு விரோதமா யிருந்தார்கள். எப்போதும் ஹேஸ்டிங்ஸின்

ஏற்பாடுகளை இவர்கள் கண்டிப்பது வழக்கம். ஆயினும், ஹேஸ்டிங்ஸ் வெகு சிரமப்பட்டு விவகாரங்களை நடத்தி வந்தார். அயோத்தி நவாப்போடு ஒரு புதிய உடன்படிக்கை செய்து, அவரிடமிருந்து அதிகப் பணம் வாங்கவேண்டு மென்று ஆலோசனை சபையார்வற்புறுத்தினர். ஹேஸ்டிங்ஸ் மீதுபுகார் கூறும்படியும் பலரைத்தூண்டினர். ஹேஸ்டிங்ஸ் பெருத்த தொகையை லஞ்சம் வாங்கினதாக நந்தகுமார் என்பவன் குற்றம் சாட்டினன். அதேசமயத்தில் இன்னொரு வழக்கில் அவன் பொய்க் கையெழுத்திட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டான். விசாரணையில் நந்தகுமாரின் குற்றம் ருசுவாகியதால் அவனைத் தூக்கிலிடத் தீர்ப்பு அளிக்கப் பட்டது. நந்தகுமார் விஷயத்தில் ஹேஸ்டிங்ஸ் நடந்து கொண்ட விதத்தைப்பற்றிப் பிறகு பிரமாதமான விசாரணை நடந்தது. அந்த நெருக்கடியான சமயத்தில் ஹேஸ்டிங்ஸ் நிலைமை மிகவும் ஆபத்தா யிருந்தது. ஆயினும் பொய்க் கையெழுத்து வழக்கிலும், தூக்குத் தண்டனை யளித்த விஷயத்திலும் வாரன் ஹேஸ்டிங்ஸுக்குக் கொஞ்சமாவது சம்பந்தமில்லை யென்று பிற்கால ஆராய்ச்சியில் தெரியவரு கிறது. ஆலோசனை சபையில் கவர்வர்-ஜனரலுக்கு விரோதிகளின் கொட்டம் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கிய பிறகு, ஹேஸ்டிங்ஸ் திறமையாக ஆட்சி செய்வது சாத்தியமாயிற்று.

பிரிட்டிஷாரின் நெருக்கடியான நிலை:—வாரன் ஹேஸ் டிங்ஸ் கவர்னர்-ஜனரலாக இருந்த காலம் உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் பிரிட்டிஷாருக்கு மிகவும் நெருக் கடியான சமயம். அமெரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகள் தாய் நாடாகிய இங்கிலாந்துக்கு விரோதமாகப் பெரும் போர் செய்தன. ஸ்பெயின், பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவுக்கு உதவியாக பிரிட்டிஷாருடன்

எதிர்த்து யுத்தம் செய்தன. இந்தியாவிலும் அதிகக் கஷ்டங்கள் உண்டாயின. ஹைதர் ஆலியும் மகராஷ்டிரரும் பிரிட்டிஷாரோடு யுத்தம் செய்ய ஆயத்தமாயிருந்தார்கள். இவ்வளவு நெருக்கடியான நிலைமையை வாரன் ஹேஸ்டிங்ஸ் வெகு திறமையுடன் சமாளித்தார்.

ஹேஸ்டிங்ஸ் பணம் திரட்டுதல்:—ஷா ஆலம் சக்கரவர்த்தியை மகாராஷ்டிரர் டில்லிக்கு அழைத்துச் சென்றனர். கம்பெனியார் அவருக்குக் கொடுத்து வந்த 26 லக்ஷம் ரூபாயை வாரன் ஹேஸ்டிங்ஸ் உடனே நிறுத்திவிட்டார். அவருக்காகக் கொடுக்கப்பட்ட கோரா, அலகாபாத்து ஜில்லாக்களை அயோத்தி நவாப்புக்கு 50 லக்ஷம் ரூபாய்க்கு ஹேஸ்டிங்ஸ் விற்றுவிட்டார். அயோத்தியின் பழையநவாப்பின்மனைவிகளானபேகம்மார்கள்வசம்இருந்த 40லக்ஷம் ரூபாயையும் நவாப் அடையுமாறு உதவிசெய்தார். காசி ராஜாவான சேட் சிங், கம்பெனியாருக்குக் கொடுக்க வேண்டிய கப்பம் கொடுக்காமல் இருந்தார். அவரை நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமித்து அவரிடமிருந்து பெருந்தொகை வாங்கினர்.

ஹேஸ்டிங்ஸின் இறுதிக் காலம்:—இவ்விதமாகப் பல வழிகளில் பணம் திரட்டியதால் தென்னிந்தியாவில் நடந்த யுத்தங்களில் பிரிட்டிஷார் வெற்றி யடைவது சாத்தியமாயிற்று. வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்திற்கு 1785-ல் திரும்பிய பிறகு அவர் விரோதிகள் அவர்மீது பல குற்றங்களைச் சுமத்தினார்கள். பார்லிமெண்டு முன்பாக ஹேஸ்டிங்ஸ் விசாரணை நடந்தது. நந்தகுமாரைத் தூக்கிலிட்டது, காசி ராஜனை நீக்கியது, அயோத்தி பேகம்மார்களைத் துன்புறுத்திப் பணம் பறித்து நவாப்புக்குக் கொடுத்தது முதலிய விஷயங்கள் அவர்மீது குற்றங்களாகச் சாட்டப்பட்டன.

ஏழு வருஷம் விசாரணை நடந்தது. கடைசியில் வாரன் ஹேஸ்டிங்ஸ் குற்றமற்றவரென்று விடுவிக்கப்பட்டார். அவர் முயற்சியினால் தான் பிரிட்டிஷ் இராஜ்ஜியம் இந்தியாவில் பலமடைந்தது என்று சொல்லவேண்டும்.

ஹேஸ்டிங்ஸ் செய்த நன்மை :—பிரிட்டிஷ் ஆட்சியினர் இந்திய மக்களது க்ஷேமத்தைக் கருதுகிறார்கள் என்ற எண்ணம் பரவுவதற்கு ஹேஸ்டிங்ஸ் தான் முக்கியக் காரணம். சுயநலம் பாராட்டாது நிரந்தரமான ஒழுங்கும் நியாயமும் உள்ள அரசியலை ஸ்தாபித்துத் தேசத்தையாளும் முறையைத் தமக்குப் பின் வருபவர்களுக்கு ஹேஸ்டிங்ஸ் காண்பித்தார். இந்துக்கள் அனுசரிக்கும் வழக்க முறைகளைப் பிரபல பண்டிதர்களைக்கொண்டு சட்டப் புத்தகமாக எழுதச் செய்தார். சமஸ்கிருதமும், விஞ்ஞான ஆராய்ச்சியும் விருத்தியடைவதற்கு மிகவும் உதவியளித்தார். இந்தியாவில் ஆட்சி செய்த பிரிட்டிஷ்காரரில் ஹேஸ்டிங்ஸ் சிறந்தவராக விளங்குகிறார் என்று சொல்லலாம்.

---

12. முதல் மகாராஷ்டிர யுத்தம் (1779—1782)

ஹேஸ்டிங்ஸ் கவர்னர்-ஜனரலாக இருந்தகாலத்தில் முதல் மகாராஷ்டிர யுத்தம், இரண்டாம் மைசூர் யுத்தம் ஆகிய போர்கள் நிகழ்ந்தன.

மகாராஷ்டிரரின் நிலைமை :—மூன்றாம் பானிப்பட்டு யுத்தத்தில் ஆமத்ஷா அப்தாலியால் முறியடிக்கப்பட்ட பிறகு மகாராஷ்டிரர்களின் பலம் குறைந்தது. ஆயினும் வட இந்தியாவில் அவர்களை அடக்கத்தகுந்த பலமான அரசர் இல்லாமற் போகவே அவர்கள் மறுபடியும் பிரபலமாயினர். அவர்கள் இராஜ்ஜியம் விஸ்தாரமாகியது. வட

இந்தியா முழுவதும் மகாராஷ்டிரர் கொள்ளையடிக்கத் தலைப்பட்டனர். வட இந்தியாவில் இராஜ்ஜிய ஸ்தாபனம் செய்ய ஆரம்பித்த பிரிட்டிஷ் கம்பெனியாருடன் போர் செய்ய முன் நின்றவர்களில் முக்கியமானவர் மகாராஷ்டிரர்கள்தான்.

மகாராஷ்டிரத் தலைவராகிய பேஷ்வாவினுடைய அதிகாரம் வரவரக் குறைந்துகொண்டே வந்தது. ஆயினும், அவரது சாய்காலும், பெருமையும், கௌரவமும் மகாராஷ்டிர தேசம் முழுதும் வியாபித்திருந்தது. 1773-ல் பேஷ்வா பட்டத்துக்கு இரண்டு போட்டிக்காரர்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்தனர். இது மிகவும் சகஜமான சம்பவம். நமது தேச சரித்திரத்தில் தகப்பன் பட்டத்துக்குப் போராடும் மக்களையும், மற்ற உறவினரின் அதிக்கிரமச் சண்டைகளையும் பற்றி அடிக்கடி நீங்கள் படித்திருக்கிறீர்கள். கர்நாடக யுத்தத்தில் ஏற்பட்டது போலவே இப்போது மகாராஷ்டிர யுத்தம் ஏற்படுவதற்கும் அதேமாதிரிக் காரணங்கள் உண்டாயின.

முதல் மகாராஷ்டிரப் போரின் காரணங்கள் :— இறந்துபோன பேஷ்வாவின் சிறிய தகப்பனுரான ரகுநாத ராவ் (ரகோபா) என்பவர் பேஷ்வா பதவியைப் பெற்றார். ஆனால் அவருக்கு விரோதமாகச் சிலர், காலஞ்சென்ற பேஷ்வாவின் சிறிய குழந்தையைப் பட்டத்தில் வைத்தனர். ரகோபாவுக்கு விரோதமான கக்ஷித் தலைவர் நானு பர்னுவிஸ். அவர்

நானு பர்னுவிஸ்

ரகோபாவைப் புனுவிலிருந்து விரட்டிவிட்டார். ரகோபா, பம்பாய் சென்று பிரிட்டிஷார் உதவியை வேண்டினர். சால்செட், பாஸீன் என்னும் தீவுகளைக் கம்பெனியார் பெற்றுக்கொள்வதென்றும், அதற்குப் பிரதியாக அவர்கள் ரகோபா பேஷ்வா பதவிக்கு வர உதவி செய்வதென்றும் சூரத்தில் 1775-ல் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

போரின் நிகழ்ச்சி:—மகாராஷ்டிரருடன் உடனே போர் தொடங்கியது. கல்கத்தாவிலிருந்தும் பம்பாயிலிருந்தும் பிரிட்டிஷ் சேனைகள் புறப்பட்டு வந்தன. பம்பாய் சைனியம் மகாராஷ்டிரர்களிடம் சிக்கிக்கொண்டது. பிரிட்டிஷ் சேனைத் தலைவர்கள் சால்செட் தீவைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும் மகாராஷ்டிரர்களுடைய விவகாரங்களில் கம்பெனியார் இனித் தலையிடுவதில்லை யென்றும் வார்காம் உடன்படிக்கையில் ஒப்புக்கொண்டார்கள். பிறகு அவர்களைப் பம்பாய் திரும்பிச் செல்லும்படி மகாராஷ்டிரர் விட்டுவிட்டனர்.

ஆனால் இந்த அவமானத்தைக் கம்பெனியார் ஏற்றுக்கொள்ளவில்லை. சண்டையில் தோற்றுவிட்டுக் கேவலமான இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்ட உத்தியோகஸ்தர்களை அப்பதவியினின்றும் நீக்கினர்கள். பம்பாயிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் பல சேனைகள் அனுப்பப்பட்டன. கர்னல் காடர்ட் என்பவர் வங்காள சேனையுடன் வெகு வேகமாக வந்து ஆமது நகரத்தைக் கைப்பற்றினர். 1780-ல் பாஸீன் என்னும் தீவு பிரிட்டிஷார் கையில் சிக்கியது. ஆனால் புனுவை காடர்ட் எதிர்க்க முடியவில்லை. அதே வருஷம் கர்னல் போபம் என்பவர் சிந்தியாவின் தலைநகராகிய குவாலியர் கோட்டையை முற்றுகை செய்தார். குவாலியர் கோட்டை ஒரு உயர்ந்த கற்பாறையின்



வாரன்ஹேஸ்டிங்ஸ்
காலத்திய இந்தியா
1785.
பெஷாவர்
பஞ்சாப்
அயோத்தி
வங்காளம்
மிதுனபுரி
ஒரிஸா
கட்டாக்
நாக்பூர்
பீரார்
பம்பாய்
நிஜாம் ராஜ்ஜியம்
வடசர்க்கார்
மசூலிப்பட்டணம்
கோவா
மைசூர்
சென்னை
ஸ்ரீரங்கபட்டணம்
குடகு
புதுச்சேரி
தஞ்சாவூர்
அரபிக்கடல்
வங்காளக்குடாக்கடல்

மீதுள்ளது. அக்கோட்டையை ஒருவராலும் பிடிக்க முடியாதென்று கருதினர். கர்னல் போபம் அதி சாதுர்ய மாக அக்கோட்டையைக் கைப்பற்றினர். சிந்தியாவின் சேனைகளும் தோல்வியடைந்து சின்னபின்னமாகச் சித றுண்டன.

1780-ல் இந்தியாவின் பல பாகங்களிலும் பிரிட்டி ஷார் யுத்தம் செய்யவேண்டி வந்தது. சேனைகளின் செல வுக்கு ஹேஸ்டிங்ஸ் மிகவும் கஷ்டப்பட்டார். ஆனல் முன் பாடத்தில் விவரித்த பிரகாரம் பலவிதமாக ஏற்பாடு கள் செய்து பணக்கஷ்டத்தைச் சமாளித்து யுத்தத்தை வெற்றிகரமாக முடிக்கப் பிரயத்தனம் செய்தார்.

முடிவு:—1782-ல் மகாராஷ்டிரரோடு ஸால்பய் என்னும் இடத்தில் கம்பெனியார் சமாதானஉடன்படிக்கை செய்துகொண்டார்கள். சால்செட் தீவு கம்பெனிக் குக் கொடுக்கப்பட்டது. பிரிட்டிஷாரைத் தவிர வேறு ஐரோப்பியரோடு நேசம் செய்வதில்லை யென்றும், ரகோபா வுக்கு வருஷம் மூன்று லக்ஷ ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதாகவும் மகாராஷ்டிரர் ஒப்புக்கொண்டனர். அவர்களிடமிருந்து கைப்பற்றிய இடங்களெல்லாம் திருப் பிக் கொடுக்கப்பட்டன.

ஸால்பய் உடன்படிக்கையினல் பிரிட்டிஷார் தங்கள் இராஜ்ஜியத்தை அதிகமாக விஸ்தரிக்காவிட்டாலும் இருபது வருஷ காலத்துக்கு மகாராஷ்டிரர் தொந்தரவில்லாமல் கம்பெனியார் இருந்தார்கள்.

13. இரண்டாம் மைசூர் யுத்தம் (1780—1784)

ஹைதர் சுற்றுப்புற நாடுகளை ஜெயித்தல் :—முதல் மைசூர் யுத்தம் முடிந்த இரண்டு வருஷங்களுக்குப் பிறகு மகாராஷ்டிரர் மைசூரில் படையெடுத்து வந்தனர். சென்னை உடன்படிக்கைப் பிரகாரம் தமக்கு உதவி செய்யும்படி ஹைதர் பிரிட்டிஷாரை வேண்டினர். ஆனால் அவருக்கு உதவிசெய்ய பிரிட்டிஷார் வரவில்லை. மகாராஷ்டிரர்களோடு தனியே போர்புரிந்த ஹைதர் தோல்வியுற்றுத் தமது இராஜ்ஜியத்தில் ஒருபாகத்தையும், ஏராளமானதிரவியத்தையும் இழக்க நேர்ந்தது. இவ்விதம் தம்மைக் கைவிட்ட பிரிட்டிஷாருக்குப் புத்தி புகட்டவேண்டும் என்று ஹைதர் சமயம் பார்த்திருந்தார். தம்முடைய பலத்தை மேலும் மேலும்விருத்தி செய்துகொண்டார். குடகுஇராஜ்ஜியத்தை வென்று அதைச் சேர்த்துக்கொண்டார். மகாராஷ்டிரர் பிடித்துக்கொண்ட பாகங்களையும் கொஞ்சங் கொஞ்சமாக மீட்டுக் கொண்டார். பிரெஞ்சுக்காரச் சேனைபதிகளைக் கொண்டு தம் சேனைகளை நன்ருகப் பயிற்சி செய்வித்தார்.

இரண்டாவது மைசூர் யுத்தம் (1780—1784) :—காரணம்.—பிரிட்டிஷாரோடு யுத்தம் செய்ய ஆயத்தம் செய்து கொண்டிருந்த ஹைதருக்கு 1780-ம் வருஷம் தக்க சமயம் வாய்த்தது. 1778-ல் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் யுத்தம் நிகழ்ந்தது. இந்தியாவில் பிரெஞ்சு நகரங்களான புதுச்சேரிமுதலியஇடங்களைப்பிரிட்டிஷ்காரர் கைப்பற்றினர். மேற்குக் கரையில் உள்ள பிரெஞ்சுத்துறைமுகமான மாஹியைப் பிடிக்கச் சென்ற பிரிட்டிஷ் சேனை ஹைதரின் இராஜ்ஜியத்தின் வழியாகச் செல்ல நேர்ந்தது. ஹைதரின் அனுமதியைப் பெருமல் அவருடைய இராஜ்ஜியத்தைக் கடந்து மாஹியைக் கைப்பற்றினர்கள்.

உடனே ஹைதர் பிரிட்டிஷ்காரருடன் யுத்தம் தொடங்கினார்.

ஹைதர் வெற்றி :—1780-ல் ஹைதர் தம் சேனைகளுடன் திடீரென்று கர்நாடகத்தில் பிரவேசித்தார். எதிர்பாராதவிதமாகத் திடீரென்று ஹைதர் கர்நாடகத்திலுள்ள ஊர்களைத் தாக்கினார். மகமது ஆலியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கம்பெனியார் யுத்தத்துக்குத் தயார் ஆகவில்லை. நிஜாம் இராஜ்ஜியத்திலிருந்த குண்டூரைப் பிடுங்கிக் கர்நாடக நவாப்புக்குக் கம்பெனியார் கொடுத்துவிட்டமையால் நிஜாம் அரசரும் கம்பெனியாருக்கு உதவியாக வரவில்லை. ஆதலால் ஹைதர் ஆலி கர்நாடகத்தை நாசம் செய்வது எளிதாயிற்று. அவரை எதிர்ப்பார் யாருமில்லை. ஹைதரை எதிர்த்துவந்த பிரிட்டிஷ் சேனை பாலிலூரில் தோல்வி யடைந்தது. வெற்றியடைந்த ஹைதர் தம் எண்ணம் பூர்த்தியடைந்ததாக மகிழ்ந்தார்.

ஆங்கிலேயர் வெற்றி :—பிரிட்டிஷ் அபஜெயத்தைக் கேள்வியுற்ற வாரன் ஹேஸ்டிங்ஸ் உடனே ஒரு பெரிய சேனையைத் திரட்டித் தென் இந்தியாவுக்கு அனுப்பினார். சேனாபதி ஸர் அயர் கூட் இச் சேனைகளை வெகு துரிதமாக நடத்திவந்து ஹைதர் ஆலியை எதிர்த்து யுத்தம் செய்தார். ஆற்காடுக் கோட்டையை முற்றுகையிட்டு அதை ஹைதர் ஆலியிடமிருந்து மீட்டுக்கொண்டார். பிறகு ஹைதரின் சேனையைவந்தவாசியிலிருந்து துரத்தி, மறுபடியும் பரங்கிப் பேட்டையில் தோற்கடித்தார். இதன் பிறகு பாலிலூரிலும் சோளங்கிபுரத்திலும் நடந்த யுத்தங்களிலும் ஹைதர் தோல்வியுற்றார். ஆனால் ஹைதர் சிறிதும் மனந்தளரவில்லை. பிரெஞ்சுக்காரர் தமக்கு உதவிபுரிவார்களென்று எண்ணியிருந்தார். ஆனால் பிரெஞ்சுக் கப்பற் படைத் தலைவரான

அட்மிரல் சப்ரேன் என்பவர் கிழக்குக் கடற்கரையில் வந்திருந்தும் அவரால் ஹைதருக்கு உதவிசெய்ய முடிய வில்லை.

ஹைதர் மரணம்:—கர்நாடகத்தில் ஹைதர் நிலைமை இவ்வாறிருக்க, அவர் குமாரர் திப்பு தஞ்சாவூரில் நடந்த யுத்தத்தில்பிரிட்டிஷாரைஜெயித்துவிட்டுமேற்கேசென்றார். இந்தச் சமயத்தில் ஹைதர் கழுத்தில் ராஜபிளவை புறப்பட்டுக் குணமடையாமல் திடீரென 1782-ல் இறந்து போனார். மேற்குக் கடற்கரையில் இருந்த திப்பு வந்து சேரும் வரையில் ஹைதர் மரணத்தைப் பகிரங்கம் செய்யாமல் இருந்தனர். பிறகு சுல்தானாக வந்தவுடன் யுத்தத்தைத் தீவிரமாக நடத்த திப்பு ஏற்பாடு செய்தார். மைசூரைச் சேர்ந்த பெட்னூரைப் பிரிட்டிஷார் கைப்பற்றினர். ஆனால் திப்பு மேற்கே சென்று மங்களூரைப் பிடித்துக்கொண்டார்.

திப்பு சுல்தான்

முடிவு:—மகாராஷ்டிர யுத்தமும் மைசூர்யுத்தமும் பல வருஷங்களாக நடந்து வந்ததால் கம்பெனியார் அலுப்படைந்து சண்டையை முடிக்க ஆவலாயிருந்தனர். மங்களூரில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இருதிறத்தாரும் தாங்கள் கைப்பற்றின நாடுகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும், பிடித்த கைதிகளை விடுவிப்பதாகவும் ஒப்புக் கொண்டார்கள்.

காலக் குறிப்பு :—

1774—1785 ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர்-ஜனரல்
1779—1782 முதல் மகாராஷ்டிர யுத்தம்
1780 ஹைதர் கர்நாடகத்தில் படை எடுத்தது
1780 ஹைதர் ஜேயம்
1781 வந்தவாசி, சோளங்கிபுரம் சண்டை
1782 ஹைதர் ஆலியின் மரணம்
1784 மங்களூர் உடன்படிக்கை

---

14. லார்டு காரன்வாலிஸ் (1786—1793)

பார்லிமெண்டு சட்டம்(1784):—இளைய பிட் என்பவர் இங்கிலாந்தில் மந்திரியாக இருந்தபொழுது பார்லிமெண்டில் ஒரு புதிய இந்திய சட்டத்தை நிறைவேற்றினர். அதன்படி ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நிர்வாக சபையினர் படுத்திய கஷ்டங்கள்போல் மறுபடியும் நேராமலிருக்கக் கவர்னர்-ஜனரலுடைய அதிகாரம் அதிகரிக்கப்பட்டது. அவசரமான அவசிய சந்தர்ப்பங்களில் நிர்வாக சபையினர் அபிப்பிராயத்தை நிராகரித்துவிட்டுக் கவர்னர்-ஜனரல் தம் இஷ்டப்படி செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டது. கம்பெனி விவகாரங்களை மேற்பார்வை செய்ய, மன்னரால் நியமிக்கப்படும் ஆறு மெம்பர்கள் அடங்கிய போர்ட் ஆவ் கண்ட்ரோல் என்ற சபை ஒன்று லண்டனில் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின் கவர்னர்-ஜனரலை இந்தச் சபையார் நியமித்து வந்தார்கள்.

லார்டு காரன்வாலிஸ்:—வாரன் ஹேஸ்டிங்ஸ் ராஜீனமாச் செய்துவிட்டுச் சென்றபின், நிர்வாக சபைத் தலைவராக இருந்த மக்பர்ஸன் சுமார் ஒன்றரை வருஷம் கவர்னர்-

ஜனரலாக இருந்தார். இந்தியாவில்ஏற்கெனவேஇருந்துபழ

காரன்வாலிஸ்

கியவர்கள் ஒழுங்கீனமா யிருப்பார்களென்றும், அவர்களைக் கவர்னர்-ஜனரல்களாக நியமிக்கக் கூடாதென்றும் ஓர் எண்ணம் ஏற்பட்டதனுல் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் காரன் வாலிஸை கவர்னர்-ஜனரலாக நியமித்தார்கள். இதற்கு முன் இவர் கம்பெனி சேவையில் இருந்ததே யில்லை; அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சிறந்த வீரரென்றும், ராஜ தந்திர நிபுணர் என்றும் பெயர் வாங்கியவர். இவரே பிட் இந்திய சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட முதல் கவர்னர்-ஜனரலாவர். இவர் புதிய இந்திய சட்டத்தை அனுசரித்துச் சுதேச விவகாரங்களில் பிரவேசிப்பதில்லை. உதாஸீன நியாயம் (Non-intervention policy) என்ற கொள்கையைப் பெரும்பாலும் கையாண்டார். ஆயினும் சில சமயங்களில் தம் கொள்கைக்கு மாருக இவர் நடக்கவேண்டியதாயிற்று.

மூன்ருவது மைசூர்யுத்தம் (1790—1792):—காரணங்கள்:—ஹைதரின புதல்வரான திப்பு தமது இராஜ்ஜியத்தை விஸ்தாரப்படுத்தக் கருதி, 1789-ல் திருவாங்கூர் இராஜ்ஜியத்தின்மீது படை யெடுத்தார். திருவாங்கூர் அரசர் இங்கிலீஷ் கம்பெனியாரோடு சிநேக உடன்படிக்கை கொண்டவராதலின், அவர் கம்பெனியாரைத் தமக்கு உதவிசெய்யுமாறு வேண்டினுர். அதனுல் சமாதானத்தை விரும்பிய காரன்வாலிஸ் சண்டையிட வேண்டியவரானுர். இதுவே

ஆங்கிலேயர் மைசூரோடு செய்த மூன்றாவது யுத்தத்திற்குக் காரணமாகும்.



யுத்த நிகழ்ச்சி :—சென்னை கவர்ன்மெண்டார் யுத்தத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யாமலிருந்தார்கள். ஆயினும் காரன்வாலிஸ் தாமே ஒரு படையைச் செலுத்திக்கொண்டு

வந்து, திப்புவோடு போர்புரியலானுர். மகாராஷ்டிரர்களா லும், நிஜாமினுலும் இடையூறு நேராவண்ணம், அவர்க ளோடு உடன்படிக்கை செய்துகொண்டு, திப்புவின் கோட் டைகளில் பலவற்றை வென்ருர். 1791-ல் பேங்களூரைப் பிடித்துக்கொண்டு, திப்புவின் தலைநகரான ஸ்ரீரங்கபட்ட ணத்தையும் முற்றுகை போட்டார்.

ஸ்ரீரங்கபட்டணம் உடன்படிக்கை :—அங்கே தோல்வி யடைந்த திப்பு 1792-ல் சமாதானத்தில் நாட்டமுடை யவராய், ஸ்ரீரங்கபட்டணத்தில் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன் பிரகாரம் ஆங்கிலேயருக் கும், அவர்களுடைய கட்சியினருக்குமாகத் தமது இராஜ்ஜி யத்தில் பாதியையும், மூன்று கோடி ரூபாயையும் கொடுப்ப தாகத் திப்பு ஒப்புக்கொண்டார்.மேலும் இவற்றிற்குஈடாகத் தமது இரண்டு பிள்ளைகளையும் ஆங்கிலேயர் வசம் ஒப்புவித் தார். இவ்வாறு திப்புவிடமிருந்து பெற்ற இராஜ்ஜியத் தைத் தமக்குள் பிரித்துக் கொண்டதில், ஆங்கிலேயருக்குச் சேலம், மலையாளம், மதுரை, திண்டுக்கல் என்னும் இடங் கள் கிடைத்தன. மகாராஷ்டிரர் துங்கபத்திரைப் பிரதே சத்தையும், நிஜாம் பெல்லாரி, கடப்பை ஜில்லாக்களையும் பெற்றனர். குடகு தனி இராஜ்ஜியமாக்கப்பட்டது.

சாசுவத நிலவரி ஏற்பாடு :—காரன்வாலிஸ் அமைதி யான முறைகளில் விருப்பமுள்ளவர் என்று முன்னமே கூறப்பட்டது. இவர் பல சீர்திருத்தங்களை இயற்றினுர். அவற்றில் முக்கியமானது சாசுவதநிலவரி ஏற்பாடு (Permanent Revenue Settlement) ஆகும். இதனுல் இவர் தமது பெயரை இந்தியர்கள்என்றும்மறக்கவொண்ணுதுசெய்தார். மொகலாய சக்கரவர்த்திகள் காலத்தில்ஜமீன்தார்கள் குடிக ளிடமிருந்து நிலத்தீர்வை வசூலித்து வந்தார்கள்; ஆனல்


காரன்வாலிஸ் காலத்திய
இந்தியா
1793.
பெஷாவர்
பஞ்சாப்
லாகூர்
பானிப்பட்
டில்லி
அயோத்தி
லக்னௌ
ஆக்ரா
சிந்துநதி
இராஜபுதனம்
சிந்து
குவாலியர்
கான்பூர்
அலஹாபாத்
காசி
பாட்னா
பிஹார்
வங்காளம்
மூர்ஷிதாபாத்
சந்திரநாகூர்
கல்கத்தா
டாக்கா
அஸ்ஸாம்
மிதுனபுரி
ஒரிஸா
மகாராஷ்டிர ராஜ்யங்கள்
சூரத்
சால்செட்
பம்பாய்
ஆமதுநகர்
நிஜாம் ராஜ்ஜியம்
ஹைதராபாத்
பூனா
சதாரா
கிருஷ்ணா
மசூலிப்பட்டணம்
குண்டூர்
சர்க்கார்
கோவா
மைசூர்
ஸ்ரீரங்கபட்டணம்
மைசூர்
மங்களூர்
மாஹி
சென்னபட்டணம்
புதுச்சேரி
சேலம்
கள்ளிக்கோட்டை
கோயம்புத்தூர்
கொச்சி
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்

இவ்வுரிமை கம்பெனியாருக்கு வந்ததுமுதல், கம்பெனியார் தங்களுடைய வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு ஜமீன்தார்களை யொழித்து, வரி தண்டும் உரிமையை ஏலம் போட்டு, மொத்தமாக வரிப் பணம் பெற்றுக்கொள்வது வழக்கம். போட்டா போட்டியில் அதிகத் தொகைக்கு ஏலம் கோரியவர்கள் இவ் வுரிமையைப் பெற்றுக் குடிகளிடம் தாங்கமுடியாத அதிக வரியை வசூலித்தார்கள். நிலங்கள் வருஷா வருஷம் கைமாறியதால் நிலத்தைக் குடிகள் பண்படுத்தி விருத்தி செய்வதில்லை. மேலும் குடிகளுக்குத் தாங்கள் எவ்வளவு வரி கொடுக்கவேண்டுமென்று தெரியாமற் போனதோடு, கம்பெனியாருக்கும் வருமானத்திற் கேற்பச் செலவு திட்டம் தயாரிக்க முடியவில்லை. இத் தீங்குகளை ஒழிக்க, காரன்வாலிஸ் சாசுவத நிலவரித் திட்டத்தை ஏற்படுத்தினர்.

சாசுவத நிலவரித்திட்டத்தின் நன்மைகள்:—இத்திட்டத்தின்படி பழைய ஜமீன்தார்களே நிலத்திற்குச் சொந்தக்காரராக ஒப்புக்கொள்ளப்பட்டனர். அவர் கொடுக்கவேண்டிய வரித்தொகை (பிரதி வருஷமும் ஏலம் போடப்படாமல்) நிரந்தரமாக இன்னதென்று ஏற்படுத்தப்பட்டது. அதற்கு மேல் நிலத்தில் வரும் லாபத்தை ஜமீன்தார்களே எடுத்துக் கொள்ளலாம். இதனல் அவர்கள் அதிக ஊக்கத்தோடு நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்து லாபமடைந்தார்கள். இதற்கு முன் சாகுபடி செய்யாமலிருந்த நிலங்களும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன. வங்காளததில் இன்றைக்கும் இந்த சாசுவத வரி ஏற்பாடே இருந்து வருகிறது. வங்காளத்தில் ஜமீன்தார்கள் அதிகம். நிலங்களை அவர்கள் வார்சு முறையில் அனுபவித்து, ஆதியில் ஏற்பட்ட நிரந்தர வரித் தொகையையே இன்றைக்கும் கட்டிவருகிருர்கள்.

குறிப்பு :—நமது சென்னை மாகாணத்தில் ஜமீன்தார் முறையில், வரி வசூலிப்பு இல்லாமல் நிலத்தின் குடிகளிட மிருந்தே நேரில் வரி வசூலிக்கப்படுகிறது. இது ரயத்துவாரி வரி வசூல் திட்டம் எனப்படும். இந்த நிலவரித் தொகை நிரந்தரமாக நிர்ணயிக்கப்படாமல், சாதாரணமாக 30 வருஷத்திற்கு ஒரு முறை சர்க்காரால் மாற்றப்படுகிறது.

சாசுவத வரித் திட்டத்தின் கெடுதல்கள் :—இந்த ஏற் பாட்டினால் பிற்காலத்தில் பல கெடுதல்கள் ஏற்பட்டன. நிலத்தில் உழைக்கும் குடியானவர்கள் ஜமீன்தார்களுக்கு அடங்கிய விவசாயிகளாயினர். ஜமீன்தார்கள் தாம் சுகவாசி களாக இருந்துகொண்டு,நிலத்தைக் குத்தகைக்காரர்களிடம் போட்டி ஏலத்துக்கு விட்டுத் தாம் மட்டும் அதிக லாபம் அடைந்தனர். ஆனால் உண்மையாக நிலத்தில் உழைக்கும் விவசாயிகள் பரம ஏழைகளாகி அடிமைகள்போலாயினர். பிறகு ஏழைக்குடியானவர்களை ஜமீன்தார்களுடைய பேராசையினின்றும் காப்பாற்றும் பொருட்டு 1859-ல் வங்காள வரிச்சட்டம் ஏற்பட்டு, குடியானவரது உரிமைகள் நிரந்தரஞ் செய்யப்பட்டன.

பழைய திட்டத்தைவிட அதிக நிலவரி வங்காளத்தில் இப்பொழுது சர்க்காருக்குக் கிடைக்காததால் அது செல வுக்குப் போதாமல் வங்காள துரைத்தனத்தார் பண உதவி இந்தியா கவர்ன்மெண்டாரிடம் பெறவேண்டி யிருக்கிறது.

காரன்வாலிஸ் செய்த இதர சீர்திருத்தங்கள் :—தாம் கவர்னர்-ஜனரலான மூன்று வருஷங்களுக்குள் சிவில் உத்தியோகஸ்தர்களின் நிலையை மேம்படுத்தினார். மேல் வரு மானங்களை நிறுத்தி, கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்குப் போதிய சம்பளம் தரும்படி ஏற்பாடு செய்தார். மற்றும் இதுவரையிலும், வரிவசூல் செய்வதையும்,நியாய விசாரணை

செய்வதையும் ஜில்லா கலெக்டர் ஒருவரே பார்த்துவந்தார். காரன்வாலிஸ் இவைகளுக்குத் தனித்தனி உத்தியோகஸ்தர்களை நியமித்தார். இதுமுதல் கலெக்டர்கள் வரி வசூலையும், ஜில்லா ஜட்ஜுகள் நியாய விசாரணையையும் கவனித்து வந்தனர். இவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு கல்கத்தா, டாக்கா, பாட்னு, மூர்ஷிதாபாத் என்றவிடங்களில் நீதிஸ்தலங்கள் ஏற்பட்டது. இவற்றில் மகமதிய சட்டங்களைப்பற்றிய ஆலோசனைகளைச் சொல்ல காஜிகளும், இந்து சட்டங்களை எடுத்துரைக்க இந்து சட்ட நிபுணர்களும் கோர்ட்டுகளில் நியமிக்கப்பட்டனர். மாகாண கோர்ட்டுகளின் நீதிபதிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்து, கிரிமினல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டுமென்று விதி ஏற்பட்டது. மேலும் ஊர்க்காவல் முறையைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்தார்.

கம்பெனியாரின் உரிமைச் சாசனம் :—1793-ல் மறுபடியும் 20 வருஷத்துக்கு இந்தியாவுடன் வியாபாரஞ் செய்ய ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனிக்குத் தனி வியாபார உரிமை பார்லிமெண்டால் அளிக்கப்பட்டது.

---

15. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்

ஸர் ஜான் ஷோர் (1793—1798) :— காரன்வாலிஸுக்குப் பிறகு ஸர் ஜான் ஷோர் கவர்னர்-ஜனரலாக நியமிக்கப்பட்டார். இவர் ஏற்கனவே இந்தியாவில் இருந்தவர். சுதேச மன்னர்விஷயங்களில் தலையிடக்கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றியதால் சில வருஷங்கள் இராஜ்ஜியத்தைப் பெருக்காமல் பிரிட்டிஷார் ஒதுங்கி யிருந்தனர்.

உதாசீனக் கோள்கையால் ஏற்பட்ட கெடுதல்கள் :— பானிப்பட்டுச் சண்டைக்குப் பிறகு மகாராஷ்டிரா மறுபடியும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றனர்.

நானு பர்னுவிஸ் மகாராஷ்டிரரின் தலைவராக இருந்தார். பிரிட்டிஷ் கம்பெனியார் ஒன்றையும் கவனியாதிருக்கவே மகாராஷ்டிரர்கள் ஒன்றுசேர்ந்து நிஜாமை எதிர்த்தார்கள். கம்பெனியார் தங்கள் சிநேகிதராகிய நிஜாமுக்கு இச்சமயத்தில் உதவிசெய்யவில்லை. மகாராஷ்டிரர்களிடம் 1795-ம் வருஷம் நிஜாம் தோல்வியடைந்தார். பெருந்திரவியத்தையும் தமது இராஜ்ஜியத்தில் ஒரு பாகத்தையும் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். சமயத்தில் கைவிட்ட பிரிட்டிஷாரிடம் நிஜாம் வெறுப்படைந்தார். தம் சேனைகளைப் பழக்குவதற்குப் பிரெஞ்சுக்காரர்களைத் தருவித்தார்.

சிலோன், சிங்கப்பூர், பினங் இவை பிரிட்டிஷார் வசம் வந்தன:—ஐரோப்பாவில் இங்கிலீஷ்காரரும் டச்சுக்காரரும் சண்டை செய்தார்கள். அச்சமயம் ஆசியாவில் டச்சுக்காரர் ஜெயித்திருந்த பிரதேசங்களைப் பிரிட்டிஷ்காரர் பிடித்துக் கொள்ள முயற்சி செய்தனர். சிலோன் தீவு ஜெயிக்கப்பட்டது. மலேயாவில் சிங்கப்பூர், பினங்கு பிரிட்டிஷார் வசம் வந்தன.

லார்டு வெல்லெஸ்லி (1798—1805) :—இங்கிலாந்திலிருந்து கவர்னர்-ஜனரலாக வெல்லெஸ்லி பிரபு அனுப்பப்பட்டார். வரும்பொழுது வயது 37. நல்ல கண்யமும் திறமையும் வாய்ந்த தந்திர நிபுணர். கம்பெனியார் இந்திய இராஜ்ஜியங்களின் சண்டை சச்சரவுகளில் சம்பந்தப்படாமல் ஒதுங்கியிருப்பதால், கம்பெனியாரின் பெருமையும் பலமும் மிகவலமாகக் கருதப்பட்டன. அவர்களது வியாபாரமும் குறைந்தது.

லார்டு வெல்லெஸ்லி

இந்திய இராஜ்ஜியங்களிலும் ஒன்றையொன்று செம்மையாக அடக்கிவைத்திருக்கக்கூடியவலிமையான இராஜ்ஜியம்ஏதுவு மில்லை. வீணான கலகங்களும், சண்டைகளும் ஏற்பட்டு உயிர்ச்சேதமும் பொருள் நஷ்டமும் உண்டாயின. முன் கம்பெனியார் ஒப்புக்கொண்ட உடன்படிக்கைப் பிரகாரம் நிஜாம் அரசருக்கு உதவிசெய்யாமல் அவரைக் கைவிட்டது மிகவும் பிசகு என்று வெல்லெஸ்லி உணர்ந்தார். மேலும், பிரெஞ்சுக்காரரின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் ஒழிப்பது அவசியம் என்பதும் அவரது கொள்கை. இந்திய இராஜ்ஜிய விஷயங்களில் கலந்து பாடுபட்டு இந்தியா முழு வதையும் பிரிட்டிஷ் அதிகாரத்துக் குட்படுத்துவதே சிறந்தது என்று வெல்லெஸ்லி நிச்சயித்தார்.

ஆதலின் இந்திய அரசர்களை நீக்கிவிடாமல் அவர்களை பிரிட்டிஷ் அதிகாரத்துக் குட்பட்ட சிற்றரசர்களாக வைத்துக்கொண்டே பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தை இந்தியா முழுவதும் ஸ்தாபிக்க வெல்லெஸ்லி ஏற்பாடு செய்தார். ஆதலால் பின்வரும் ஏகாதிபத்திய உடன்படிக்கையைத் திட்டஞ் செய்தார்.

உபகார நியமன உடன்பாடு (சப்ஸிடியரி சிஸ்டம்):— இந்த ஏற்பாட்டின் முக்கிய அம்சங்களைக் கவனிப்போம். எல்லா சுதேச அரசர்களும் ஆங்கிலேய ஆட்சியைத்தலைமை யாக ஒப்புக்கொண்டு, அதற்குட்பட்டு சிற்றரசர்களாக இருக்கவேண்டும். 'ஆங்கிலேயரது அதிகாரத்துக்கடங்கிய அரசர்களைப் பாதுகாத்து, அவர்கள் ஒருவரோடொருவர் சண்டைசெய்து கொள்ளாமலும், அவர்கள் இராஜ்ஜியங்களை விரோதிகள் எதிர்க்காமலும் காப்பாற்றுவது பிரிட்டிஷாரின் வேலை. ஒவ்வொரு இந்திய அரசரது இராஜ்ஜியத்திலும் அரசியல் விவகாரங்களை மேற்பார்வை செய்து சமயத்துக் கேற்றவாறு புத்தி சொல்ல ஒரு பிரிட்டிஷ் ரெசிடெண்டு

என்ற ஆங்கில அதிகாரியை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்திய அரசரது இராஜ்ஜியத்தின் பாதுகாப்புக்காக ஒரு பிரிட்டிஷ் சேனையும் நிறுத்தப்பட்டது. அதன் செலவை அந்த நாட்டு அரசர் கொடுக்க வேண்டும். இந்தத் தொகை சப்ஸிடித் தோகை எனப்படும். இந்த ஏற்பாட்டுக்கு சப்ஸிடியரி சிஸ்டம் என்று பெயர். மேலும் அதிகாரிகளாகிய கம்பெனியார் அனுமதியின்றி சப்ஸிடியரி இராஜ்ஜியங்கள் தங்களுக்குள் ஒருவரோடொருவர் சிநேகம் செய்து கொள்ளக்கூடாது. அந்நிய தேச அரசர்களுடனும் ஒருவித உடன்படிக்கையும் செய்துகொள்ளக்கூடாது. வேறு நாட்டு ஜனங்களை (முக்கியமாகப் பிரெஞ்சுக்காரரை)த் தங்கள் இராஜ்ஜியங்களில் வர விடக்கூடாது. பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு விரோதமாக இந்திய அரசர்கள் சூழ்ச்சி செய்யாமலிருக்கவே இவ்வித நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. ஆனால் இந்திய அரசர்களது உள்நாட்டு அரசியல் விஷயங்களில் மேலதிகாரிகளாகிய கம்பெனியார் அநாவசியமாகப் பிரவேசிப்பதில்லை. அவ்விஷயங்களில் அவ்வரசர்கள் தங்கள் இஷ்டப்படி சுயேச்சையாக ஆட்சி செய்யலாம். இந்தத்திட்டம்உண்மையில் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்துக்கு அஸ்திவாரம் ஆனது. இந்தக் கொள்கையே இன்றும் நிலவி வருகிறது.

ஏகாதிபத்தியத்தின்கீழ் வந்த நாடுகள் :—இவ்வித ஏற்பாட்டை ஒவ்வொரு இந்திய இராஜ்ஜியத்திலும் நிலைநிறுத்த வெல்லெஸ்லி முயற்சி செய்தார். கர்நாடக நவாப், அயோத்தி நவாப் இருவரும் முன்னமேயேபிரிட்டிஷ் அதிகாரத்துக் கடங்கியிருந்தனர். அவர்களுடன் மறுபடியும் இந்தப் புதிய உடன்படிக்கைகளைச் செய்தார். நிஜாம் அரசரைச் சமாதானப்படுத்தி அவருடனும் சப்ஸிடியரி உடன்படிக்கை செய்தார். மைசூர் இராஜ்ஜியத்

தையும் மகாராஷ்டிர இராஜ்ஜியங்களையும் சப்ஸிடியரி ஏற்பாட்டில் சேர்க்க முயற்சித்தபோது சண்டைகள் உண்டாயின.

---

16. கடைசி மைசூர் யுத்தம் (1799)

காரணம்:—1792-ம் ஸு சண்டையில் தமது செல்வத்திலும் இராஜ்ஜியத்திலும் பெரும் பாகத்தை இழக்க நேர்ந்தது பற்றித் திப்பு சுல்தான் பிரிட்டிஷார் மேல் தம் வஞ்சத்தைத் தீர்க்கச் சூழ்ச்சிகள் செய்துவந்தார். இந்தச் சமயத்தில் பிரான்சில் ஒரு பெரிய கலகம் உண்டாகியது. அரசனை நீக்கிவிட்டு ஜனங்கள் குடியரசு ஸ்தாபித்தார்கள். பல தலைவர்கள் கிளம்பித் தேசத்தில் கொலையும், குழப்பமும் சில வருஷங்கள் செய்து வந்தார்கள். கடைசியாக நெப்போலியன் என்னும் தளகர்த்தர் பிரான்சு முழுவதுக்கும் சர்வாதிகாரியாக ஏற்பட்டார். இங்கிலாந்தும் ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களும் அவரை எதிர்த்துப் பலத்த யுத்தம் செய்தன. ஐரோப்பா முழுவதையும் நெப்போலியன் கலங்கச் செய்தார். பிரிட்டிஷார் மாத்திரம் நெப்போலியனுடன் தீரமாகச் சண்டை செய்தனர். இந்தியாவில் பிரிட்டிஷாருக்குள்ள செல்வாக்கை குறைக்கவேண்டுமென்று நெப்போலியன் யோசனை செய்தார். இங்கிலீஷ்காரருக்கு விரோதமாகத் திப்பு சுல்தான் ஏற்பாடுகள் செய்ய ஆசைப்படுவதை யறிந்து சில பிரெஞ்சுக்காரர்கள் திப்புவிடம் வந்தார்கள். வெல்லெஸ்லிக்கு இந்தச் சமாசாரம் எட்டியதும் உடனே திப்பு சுல்தானை அடக்க விரும்பினர். முன் எச்சரிக்கையாக நிஜாம் அரசருடன் சப்ஸிடியரி உடன்படிக்கை செய்துகொண்டு, நிஜாம் திப்புவுடன் சேர முடியாமல் உறுதிப் படுத்திக் கொண்டார். திப்புவும் சப்ஸிடியரி உடன்படிக்கையை ஏற்றுக்கொண்

டிருந்தால் யுத்தம் ஏற்பட்டிருக்காது ; ஆனால் திப்பு சம்ம திக்கவில்லை.

யுத்த நிகழ்ச்சி:—பிரிட்டிஷ் சேனைகள் சென்னையி லிருந்தும் பம்பாயிலிருந்தும் மைசூரைச் சூழ்ந்துவந்தன. திப்புவின் சேனை இரண்டு இடங்களில் தோல்வியடைந் தன. பிறகு பிரிட்டிஷ் சேனைகள் ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகை போட்டன. இரு கிளைகளாகப் பிரிந்து செல் லும் காவேரி நதியின் நடுவே உள்ள ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டையை யாராலும் பிடிக்க முடியாது என்று திப்பு நம்பி யிருந்தார். ஆனால் கோட்டைச் சுவரை இடித்துக் கொண்டு பிரிட்டிஷ் வீரர்கள் பட்டணத்துக்குள் புகுந்தார் கள். கோட்டை வாயிலில் திப்பு சுல்தான் வெகு தீரமாகச் சண்டை செய்து கையிற் பற்றிய வாளுடன் இறந்தார்.

முடிவு:—மைசூர் இராஜ்ஜியம் முழுவதையும் கம்பெனி யார் ஆட்சியிலேயே வைத்துக் கொள்ளலாமாயினும் வெல் லெஸ்லி அப்படிச்செய்ய விரும்பவில்லை. திப்புவின் இராஜ் ஜியத்தின் நான்கு புறங்களிலும் சிற்சில பாகங்களை எடுத்து விட்டு முன்னிருந்த பழைய மைசூர் இராஜ்ஜியத்தை மாத் திரம் மிகுத்து வைத்தார். ஹைதருக்கு முன் இருந்த அரச வம்சத்தின் சந்ததியாராகிய கிருஷ்ணராஜ உடை யாரை மைசூர் அரசராக வெல்லெஸ்லி முடிசூட்டினார். புதிய மைசூர் அரசர் இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு சப்ஸிடியரி உடன்படிக்கை செய்து கொண்டார். மைசூரில் ஒரு பிரிட்டிஷ் ரெசிடெண்டும், பட்டாளமும் ஏற்படுத்தப்பட்டன.

திப்புவினிடமிருந்து ஜெயித்த ஜில்லாக்களில் கன்ன டம், கோயம்புத்தூர், வயநாடு முதலியவைகள் கம்பெனி ஆட்சியில் சேர்க்கப்பட்டன. கடப்பை, பல்லாரி முதலிய வைகள் நிஜாமுக்குக் கொடுக்கப்பட்டன.

மேலும் ஏகாதிபத்திய உடன்படிக்கைக்குள் வந்த பிரதேசங்கள்:—சென்னை மாகாணம் :—இப்போது உள்ள சென்னை மாகாணத்தின் ஜில்லாக்கள் பெரும்பாலும் வெல்லெஸ்லிகாலத்தில் கம்பெனியின் ஆட்சிக்குவந்தன. சென்னை கவர்னருக்குட்பட்டு இந்த ஜில்லாக்கள் ஒரு மாகாணமாக அமைக்கப்பட்டன. சென்னபட்டணத்தைச் சுற்றிலுமுள்ள பிரதேசமும் பிறகு வட சர்க்கார் ஜில்லாக்களாகிய கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா இவைகளும் கர்நாடக யுத்தம் முடிந்த சமயம் கிடைத்தன. சேலம், திண்டுக்கல், கோயம்புத்தூர், மலையாளம் முதலிய ஜில்லாக்கள் மைசூர் சண்டைகளில் ஜெயிக்கப்பட்டன. கர்நூல், கடப்பை, பல்லாரி, அனந்தபுரம் ஜில்லாக்கள் நிஜாம் அரசரால் கொடுக்கப்பட்டன. கம்பெனியாருக்கு நிஜாம் கொடுக்கவேண்டிய சப்ஸிடித் தொகை பாக்கி நின்றதற்கு ஈடாக இந்த ஜில்லாக்களைக் கொடுத்துவிட்டார். இவைகளை 'கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள்' (Ceded Districts) என்று சொல்வது வழக்கம்.

கர்நாடக நாடுகள் :—இராஜ்ஜிய நிர்வாகத்தைச் சரிவரக் கவனிக்காமல் மிதமிஞ்சிய செலவு செய்ததால் கர்நாடக நவாப்புக்கு ஏராளமான கடன் சுமந்துபோயிற்று. அவரை உற்சாகப்படுத்தி அதிகச் செலவுக்குட்படுத்தி அவருக்குக் கடன் கொடுத்து உதவின கம்பெனி உத்தியோகஸ்தர்களிற் சிலர் ஏராளமான லாபம் சம்பாதித்தனர். இராஜ்ஜியத்தின் சில பாகங்களில் வரி வசூலித்துக் கொள்ளும்படி சில கடன்காரருக்கு நவாப் அனுமதி கொடுத்தார். சில நிலங்களைக் கடன்காரருக்கு அடமானமாக அனுபோகத்துக்கு விட்டிருந்தார். 1795-ம் வூ மகமது ஆலி இறந்தவுடன் கர்நாடக இராஜ்ஜியத்தின் நிர்வாகத்தைப் பிட்டிஷ் கம்பெனியாரே ஏற்றுக்கொண்டு மகமது

ஆலிக்குப்பின் வந்த நவாப்பான உம்-தத்-உல்-உம்ராவுக்கு இராஜ்ஜிய வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு கொடுத்து வந்தார்கள். 1801 முதல் கர்நாடக இராஜ்ஜியம் இங்கிலீஷ் ஆட்சியில் சேர்ந்துவிட்டது.

தஞ்சாவூர் :—இதே விதமாகத் தஞ்சாவூர் இராஜ்ஜியத்தையும் கம்பெனியார் சேர்த்துக் கொண்டனர். தஞ்சாவூர் அரசருக்கு ஏராளமான கடன்தொந்தரவு இருந்ததால் தம் இராஜ்ஜியத்தை இங்கிலீஷ்காரரிடம் ஒப்புவித்துவிட்டு உபகாரச் சம்பளமாக வருஷத்துக்கு மூன்றரை லக்ஷம் பெற்றுக்கொண்டு அவர் விலகி விட்டார்.

ஜில்லாக் கலெக்டர் :—பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்க்கப்பட்ட இந்தப் பிரதேசங்களைச் சீர்திருத்தி வரி வசூல், நீதி பரிபாலனம் முதலிய முறைகளைக் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தினர்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கலெக்டர் ஆட்சி செய்தார். ஜில்லாக் கோர்ட்டுகளும், சென்னையில் ஒரு ஹை கோர்ட்டும் ஏற்படுத்தப்பட்டன.

அயோத்தி நவாப்போடு உடன்படிக்கை ,—தெற்கே விவகாரங்களை ஒழுங்கு செய்தவுடன் வட இந்தியாவிலும் வெல்லெஸ்லி சீர்திருத்தம் செய்தார். கம்பெனி இராஜ்ஜியத்துக்கு வடமேற்கு எல்லையாக இருந்த அயோத்தி இராஜ்ஜியத்தின் நிர்வாகம் சரிவர இல்லை. வங்காளத்தின் நன்மையைக் கருதி அயோத்தி நவாப்பைச் சப்ஸிடியரி உடன்படிக்கை செய்துகொள்ளும்படி வெல்லெஸ்லி கட்டாயப்படுத்தினர். அயோத்தி இராஜ்ஜியத்தில் ஒரு பலத்த பிரிட்டிஷ் சைனியம் வைக்கப்பட்டது. இந்தச்சேனையின் போஷணைக்காக நவாப் தம் தேசத்தில் பாதியைக் கம்பெனியாரிடம் கொடுத்தார். கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியி

லுள்ள தோ ஆப்(Do-ab) பிரதேசம் பிரிட்டிஷ் ஆளுகைக்கு வந்தது. ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த இந்த பாகத்துக்கு வடமேற்கு மாகாணம் என்ற பெயர் ஏற்பட்டது. வெல்லெஸ்லிகாலத்தில் கங்காசமவெளிமுழுதும் பிரிட்டிஷ் ஆட்சியில் வந்துவிட்டது. பஞ்சாப் மாத்திரம் மிகுந்திருந்தது. தற்காலத்திலுள்ள வடமேற்கு மாகாணம், பஞ்சாபிற்கு அப்பால் உள்ளது. ஆதலால் ஆக்ரா-அயோத்திக்கு ஐக்கிய மாகாணம் என்ற புதுப் பெயரைச் சமீப காலத்தில் கொடுத்தார்கள்.

---

17. மகாராஷ்டிர யுத்தங்கள்

இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம் (1803)

பாஸீன் உடன்படிக்கை:—நானு பர்னுவிஸ் மகாராஷ்டிரத் தலைவரா யிருந்த வரையில் மகாராஷ்டிரர்களுடைய செல்வாக்கும் அதிகாரமும் அழியாமல் இருந்தன. 1800-ம் வூ நானு பர்னுவிஸ் இறந்ததும் மகாராஷ்டிரருடைய ஒற்றுமை யழிந்து அவர்களுடைய செல்வாக்கும் குன்றியது. அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. மகாராஷ்டிர அரசர்களில் முக்கியமானவர்கள் ஜஸ்வந்தராவ் ஹோல்காரும், தௌலத்ராவ் சிந்தியாவும். இவர்கள் ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக்கொண்டு பேஷ்வாவை தத்தம் வசப்படுத்தப் பாடுபட்டார்கள். ஹோல்காருக்குப் பயந்த பேஷ்வா பாஜிராவ் பம்பாயிக்கு ஓடிக் கம்பெனியாரின் உதவியை நாடினர். பாஸீன் என்னும் இடத்தில் சப்ஸிடியரி உடன்படிக்கை செய்துகொண்டார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பேஷ்வா ஒப்புக்கொண்டு தம் தலைநகரில் பிரிட்டிஷ் பட்டாளம் ஒன்றை வைத்துக் கொள்ளச் சம்மதித்தார். புனுவில் ஒரு ரெசி

டெண்டு நியமிக்கப்பட்டார். நிஜாம் முதலிய மற்ற இந்திய அரசர்களோடும் மற்ற ஐரோப்பிய தேசத்தவர்களோடும் சிநேகம் செய்துகொள்வதில்லை யென்றும் ஒப்புக்கொண்டார்.

பாஸீன் உடன்படிக்கைப் பிரகாரம் வெல்லெஸ்லியின் சகோதரரான ஸர் ஆர்தர் வெல்லேஸ்லி (பிறகு இவர் டியூக் ஆவ் வெல்லிங்டன் என்று புகழ்பெற்று நெப்போலியனை ஜெயித்தார்) புனாவுக்கு வந்தார். அவர் உதவியினால் பேஷ்வா மறுபடியும் அதிகாரத்தில் அமர்ந்தார்.

யுத்த காரணம் :—நானா பர்னாவிஸ் காலத்திலேயே பிரிட்டிஷ் கம்பெனியார் மகாராஷ்டிரரைத் தங்கள் அதிகாரத்தில் அடக்கி வைத்துக்கொள்ள முயற்சி செய்தனர். அதி புத்திசாலியான நானா பர்னாவிஸ் இந்த ஏற்பாட்டினால் மகாராஷ்டிர சாம்ராஜ்ஜியம் அழிந்து போகும் என்ற உண்மையை உணர்ந்து சப்ஸிடியரி ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளவில்லை. பேஷ்வா இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேர்ந்தவுடன் மற்ற மகாராஷ்டிர அதிபதிகள் கலக்கம் அடைந்தனர். மகாராஷ்டிர சாம்ராஜ்ஜியத்தின் சர்வாதிகாரி எனப் பேஷ்வா பெயருக்கு இருந்ததால் அவர் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டது அவர்களுக்கு இஷ்டமில்லை. முக்கியமாகச் சிந்தியாவும் பான்ஸ்லேயும் ஒன்று சேர்ந்து புனாவிலிருந்த பிரிட்டிஷ் சேனையை விரட்டிப் பேஷ்வாவைக் கம்பெனி அதிகாரத்தினின்றும் மீட்கும் பொருட்டுப் படை எடுத்து வந்தார்கள். அவர்களுடைய சேனைகள் பிரெஞ்சு ராணுவ உத்தியோகஸ்தர்களால் நன்கு பயிற்சி செய்யப்பட்டுப் பலம் பொருந்தி விளங்கின. மகாராஷ்டிரர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் இப்போது நடந்த கடுமையான யுத்தத்தைப்போல் வேறு எவ்வித யுத்தமும் நேரவில்லை எனலாம்.

சிந்தியாவுடன் சண்டை :—யுத்தம் நேரும் என்று எதிர்பார்த்த கவர்னர்-ஜனரலும் அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்துவைத்திருந்தார். ஆறு பிரிட்டிஷ் படைகள் வெவ் வேறு மூலைகளிலிருந்து மகாராஷ்டிர இராஜ்ஜியங்களைத் தாக்கின. 1803-ல் கவர்னர்-ஜனரலின் சகோதரரான ஸர் ஆர்தர் வெல்லெஸ்லி சிந்தியாவையும் பான்ஸ்லேயையும் அஸ்ஸே என்னும் இடத்தில் முறியடித்தார் பிறகு ஆர் காம், காவில்கார் என்னும் இடங்களிலும் மகாராஷ்டிரர் தோல்வியடைந்தனர். வடக்கே ஜனரல் லேக் ஆக்ராவை யும் அதிலிருந்த சிந்தியாவின் வெடிமருந்து சாலை (Arsenal) யையும் கைப்பற்றினர். சிந்தியாவின் சேனைகளை யும் டில்லிக் கோட்டைக்கருகில் தோற்கடித்தார். சிந்தி யாவின் சேனை மறுபடியும் லஸ்வாரி என்னும் இடத்தில் பெருந் தோல்வியடைந்தது. இவ்வாறு பன்முறை தோல்வி யடைந்த பிறகு சிந்தியாவின் சேனை சின்னபின்னமாகி இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டது.

சிந்தியாவுடன் உடன்படிக்கை :—சேனை அழிந்த பிறகு தௌலத்ராவ் சிந்தியா வேறு வழி யின்றிக் கம்பெனி யாரோடு சமாதானம் செய்துகொண்டார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு சப்ஸிடியரி எற் பாட்டுக்குக் கட்டுபட்டுத் தம் இராஜ்ஜியத்தில் ஒரு பிரிட்டிஷ் சேனையைச் சிந்தியா ஏற்றுக்கொண்டார். இதர ஐரோப்பிய தேசத்தவர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள் வதில்லை யென்றும் ஒப்புக்கொண்டார். புரோச், ஒரிஸ்ஸா, பண்டல்கண்டு பிரதேசங்களைக் கம்பெனி ஆட்சியில் சேர்த்துக்கொண்டார்கள். பான்ஸ்லேயும் இவ்விதமாகவே சப்ஸிடியரி உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார். முன் னமேயே கேயிக்வார் பிரிட்டிஷாரோடு சிநேகமாக இருந்து, 1800-ம் வருஷம் முதல் சப்ஸிடியரி சிற்றரசராகவும்

இருந்து வந்தார். ஆகையால் மகாராஷ்டிர அரசாகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அங்கிகரியாமலிருந்தவர் ஜஸ்வந்தராவ் ஹோல்கார் ஒருவரே.

மூன்ருவது மகாராஷ்டிர யுத்தம் (1804—1805)

ஹோல்காருடன் யுத்தம்:—ஜஸ்வந்தராவ் ஹோல்கார் ரஜபுத்திர இராஜ்ஜியங்களிலிருந்து மகாராஷ்டிரர் வழக்கமாக வசூலிக்கும் சவுத்து என்னும் வரியை வசூலிக்க முயன்ருர். ஆனுல் ரஜபுத்திர அரசர்கள் பிரிட்டிஷ் கம்பெனியார் ஆதிக்கத்தில் இருந்தனர். ஹோல்காரை ஜெயிக்கும்படி நாலாபுறங்களிலும் பிரிட் டிஷ் சேனைகள்பிரவேசித்தன. சிந்தியாவை விரட்டி ஜெயித்தவிதமாக இந்த யுத்தத்தில் பிரிட்டிஷார் சுலபமாக ஜெயம் பெறவில்லை. ஏனெனில் ஒரே இடத்தில் நின்று யுத்தம் செய்யாமல், மகாராஷ்டிராருடைய வழக்கப்படி ஹோல்கார் அங்குமிங்கும் திரிந்துகொண்டே சண்டை செய்து எதிரிகள் களைத்துப் போகும்படி செய்தார். அவருடைய வீரர்கள் சிறுசிறு பிரிவுகளாகப் பிரிந்து பல திசைகளிலும் பரவி பிரிட்டிஷ் சேனைகளுக்குப் போகும் உணவு முதலியவைகளைப் பிடித்தும், சமாசாரங்களைத் தடுத்தும் வெகுவாகத் தொந்தரவு கொடுத்தார்கள். ஹோல்கார் தைரியங்கொண்டு டில்லியை முற்றுகை செய்தார் ஆனுல் பிரிட்டிஷ் ஜனரல் ஆக்டர்லோனி அவரை விரட்டி டில்லியைக் காப்பாற்றினுர். அவர் நண்பராகிய பரதபுரத்து அரசரை அடக்கும்பொருட்டு பிரிட்டிஷ் ஜனரல் லேக் பரதபுரத்தை முற்றுகை செய்தார். ஆனுல் பெரிய மண்சுவர்கள் கொண்ட அக்கோட்டையைப் பிரிட்டிஷ் சேனையால் பிடிக்க முடியவில்லை.

1805-ல் குஜராத்திலிருந்துவந்த பிரிட்டிஷ் சேனை ஹோல்காரின் பிரதான நகரான இந்தூரைப் பிடித்தது

தம் தலைநகரத்தைக் காப்பாற்ற ஹோல்கார் இந்தூருக்கு ஓடிவந்தார். ஆனால் வரும் வழியில் ஜனரல் லேக் அவருடைய சேனையைச் சிதறடித்தார். ஹோல்கார் பஞ்சாபுக்கு ஓடிப்போனார்.

முடிவு :—இந்தூர் இராஜ்ஜியத்தைக் கம்பெனியார் சேர்த்துக்கொண்டிருக்கலாம். இந்தச் சமயத்தில் லார்டு வெல்லெஸ்லி இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். பல வருஷங்களாக யுத்தம் நடப்பதையும் கம்பெனியின் இராஜ்ஜியம் விஸ்தீரணமாவதையும் கண்ட கம்பெனி டைரெக்டர்கள் திகைத்துப் போயினர். யுத்தத்தை நிறுத்திவிடும்படி உத்தரவு செய்தனர். பிறகு வந்த கவர்னர்-ஜனரலான ஸர் ஜார்ஜ் பார்லோ எப்படியாவது யுத்தத்தை முடித்துவிடவேண்டும் என்று தீர்மானித்தார். ஆதலால் தோல்வியடைந்த ஹோல்காரை அடியோடு அழித்துவிடக்கூடிய நிலைமையிலிருந்தாலும் அவருக்குப் பூரண சுதந்தரம் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். இத்துடன் நில்லாமல் பிரிட்டிஷ் ஆதரவில் முன்னே சேர்ந்திருந்த ஜயபுரம், பூண்டி முதலிய ரஜபுத்திர ராஜ்ஜியங்களைக்கூட ஹோல்கார் ஆட்சிக்கு விட்டு விட்டார். ஹோல்காருக்கு லாபமாக யுத்தம் முடிந்ததைக்கண்ட சிந்தியா தாமும் யுத்தஞ் செய்ய யோசித்தார். உடனே அவருக்கும் சௌகரியமான உடன்படிக்கை மறுபடியும் கிடைத்தது. குவாலியர் அவருக்குக் கொடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின்எல்லையாகயமுனைநதிநிர்ணயிக்கப்பட்டது. உதயபுரம், ஜோதிபுரம் முதலிய சமஸ்தானங்களைப்பற்றிக் கம்பெனியார் கவனிப்பதில்லையென்று விலகிவிட்டனர்.

இவ்வாறாக யுத்தம் முடிவடைந்ததனால் மகாராஷ்டிர அரசர்கள் பலம் குறையவில்லை. மகாராஷ்டிர இராஜ்ஜியத்

தில் பிரிட்டிஷ் ஆதிக்கம் செவ்வனே நிலைநாட்டுவதற்கு இன்னும் சிலகாலம் பிடித்தது.

வெல்லெஸ்லி இந்தியாவில் செய்த வேலை:—கவர்னர்-ஜனரல்களுக்குள் வாரன் ஹேஸ்டிங்ஸுக்குச் சமானமாக வெல்லெஸ்லியை மதிக்கலாம். வெறும் வியாபாரத்தில் மாத்திரம் கம்பெனியார் ஈடுபட்டிருந்தால் பிரயோஜனமில்லை என்று வெல்லெஸ்லி அறிந்தார். இராஜ்ஜியாதிகாரத்தைக் கம்பெனி கைக்கொள்வதில் பூரண நம்பிக்கையும் முழு சிரத்தையும் கொண்டு அதே தீவிர நோக்கமாக வெல்லெஸ்லி உழைத்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிப்பது என்ற நிச்சயத்தைக் கொண்டவுடன் வெல்லெஸ்லி அதை நிறைவேற்றப் பாடுபட்டார். அவர் காலத்தில் தென்னிந்தியா முழுவதும், வட இந்தியாவில் கங்கா சமவெளி முழுவதும் கம்பெனியார் ஆளுகையில் வந்தன. கல்கத்தாவில் ஒரு கலாசாலை ஏற்படுத்தினர். ஜனங்களது நலத்தையே கவனித்தார்.

காலக் குறிப்பு :—

1798—1805	லார்டு வெல்லெஸ்லி கவர்னர் ஜனரல்
1799	கடைசி மைசூர் யுத்தம்
1801	கர்நாடகம், தஞ்சாவூர் சேர்க்கப்பட்டது
1802	பேஷ்வாவுடன் சப்ஸிடியரி உடன்படிக்கை
1803	பிரிட்டிஷார் டில்லியைப் பிடித்தது
1804	சிந்தியா விலகியது: ஹோல்காருடன் சண்டை
1805	வெல்லெஸ்லி இங்கிலாந்துக்குத் திரும்பியது
1806	மகாராஷ்டிரருடன் சமாதானம்

18. முதலாவது லார்டு மிண்டோ

காரன்வாலிஸ் பிரபு இரண்டாம் முறை கவர்னர்-ஜனரல் :—இவர் சமாதானக் கொள்கையையே பின் பற்றினர். 1805-ல் காசிப்பூரில் இறந்தார்.

ஸர் ஜார்ஜ் பார்லோ (1805—1807) :—நிர்வாக சபைத் தலைவராக இருந்த இவர் கவர்னர்-ஜனரல் ஆனார். வெல்லெஸ்லி காலத்தில் உண்டான பல யுத்தங்களை நிறுத்தக் கம்பெனியார் இஷ்டம் கொண்டனர். வெல்லெஸ்லி திரும்பிய பிறகு ஹோல்காரும், சிந்தியாவும் தாங்கள் எதிர்பாராத விதமாக லாபகரமான உடன்படிக்கைகளைக் கம்பெனியாருடன் செய்துகொண்டார்கள். ஆனால், ஏற்கனவே ஏற்பட்ட சப்ஸிடியரி ஒப்பந்தங்களை மாற்றவில்லை. நிஜாம், பேஷ்வா, அயோத்தி நவாப் முதலியவர்கள் அந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டவர்களாகவே பாவிக்கப் பட்டனர்.

வேலூரில் கலகம் :—1805-ம் வருஷம் வேலூரில் இந்தியச் சிப்பாய்களுக்குள் கலகம் நேரிட்டது. ராணுவத்தின் நேர்மையையும் ஒழுங்கையும் கருதி எல்லாச் சிப்பாய்களும் ஒரேவிதமாக உடுப்புக்களைத் தரிக்கவேண்டும் என்று சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. சிப்பாய்கள் ஒரேவிதமாகத் தங்கள் மயிரை வெட்டிவிடவேண்டுமென்றும், நெற்றியில் ஜாதிச் சின்னங்கள் அணியலாகாதென்றும் கட்டுப்பாடுகள் செய்தனர். தங்கள் மதத்தைக் கெடுத்துவிடுவதாக இந்திய சிப்பாய்கள் பயந்து இக்கட்டுப்பாடுகளை ஒப்புக்கொள்ள மறுத்துக் கலகம் செய்தார்கள். சில ஆங்கில ராணுவ வீரர்கள் கொலையுண்டனர். இச்சமயம் திப்புவின் குமாரர்கள் வேலூரில் இருந்தமையால் அவர்கள் சார்பாகச் சிப்பாய்கள் கலகம் செய்வது எளிதாயிருந்தது. சீர்திருத்

தங்களை அவசரமாக அமுலுக்குக் கொண்டு வருவதில்லையென்று சிப்பாய்களைச் சமாதானப்படுத்தியதால் கலகம் சீக்கிரம் அடக்கப்பட்டது. திப்புவின் குமாரர்கள் இந்தக் கலகத்தில் கலந்துகொண்டதாகச் சந்தேகிக்கப்பட்டதால் அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டார்கள். ஸர் ஜார்ஜ் பார்லோவும் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.

லார்டு மிண்டோ (1807—1813) :—இங்கிலாந்தில் இந்திய மேற்பார்வைச் சபையில் தலைவராக இருந்த மிண்டோ பிரபு கவர்னர்-ஜனரலாக இந்தியாவுக்கு வந்தார்.



லார்டு மிண்டோ

சீக்கர் ரஞ்சிட் சிங் :—இக்காலத்தில் பஞ்சாபில் சீக்கர் இராஜ்ஜியம் வலுத்தது. சீக்க மகாராஜாவாகிய ரஞ்சிட் சிங் சாமர்த்தியத்திலும் நிர்வாக முறையிலும் சிவாஜி, ஹைதர் முதலிய வீரர்களுக்கு ஒப்பானவர். கொஞ்சங் கொஞ்சமாக அவர் தமது இராஜ்ஜியத்தையும் அதிகாரத்தையும் அதிகரித்துக்கொண்டு வந்தார். ஆப்கானிய அரசரிடமிருந்து லாகூரைப் பிடித்து அதைப் பஞ்சாபின் தலைநகராக ஏற்படுத்திக்கொண்டார். 1802-ல் சீக்கர்களது முக்கிய க்ஷேத்திரமாகிய அமிருதசரஸ் நகரைக் கைப்பற்றினார். அதில் அழகான ஓர் தங்கக் கோவிலைக் கட்டினர். சீக்கத் தளகர்த்தர்கள் எல்லோரும் ரஞ்சிட் சிங்கை மகாராஜாவாக ஏற்றுக்கொண்டனர். அவருடைய அதிகாரம் பஞ்சாப் முழுவதும் பரவியது. பஞ்சாப் சிங்கம் என்றும் அவர் புகழ்பெற்றார். ஸட்லெஞ் நதிக்குத் தெற்கி

லுள்ள பிரதேசங்களையும் ஜெயிக்க விரும்பி 1806-ல் ரஞ்சிட் சிங் ஒரு பெரிய சேனையுடன் ஸட்லெஜ் நதியைக் கடந்து லூதியானு வந்து சேர்ந்தார். அந்தப் பிரதேசத்திலிருந்த சீக்கத் தலைவர்கள் கவர்னர்-ஜனரலுடைய உதவியைக் கோரினர். லார்டு மிண்டோவும் ரஞ்சிட் சிங்கும் அமிருதசரஸில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஸட்லெஜ் நதி ரஞ்சிட் சிங் இராஜ்ஜியத்தின் எல்லையாக ஏற்பட்டது. அந்நதியின் தெற்கில் ரஞ்சிட் சிங் தலையிடுவதில்லை யென்று ஒப்புக்கொண்டார். இதனால் பிரிட்டிஷ் ஆதிக்கம் யமுனை நதியிலிருந்து ஸட்லெஜ் நதி வரையில் நகர்ந்து பரவியது. ஸட்லெஜ் கரையில் உள்ள லூதியானுவில ஒரு இங்கிலீஷ் பட்டாளம் நிறுத்தப்பட்டது.

ரஞ்சிட் சிங்

கம்பெனியின் வியாபாரச் சுதந்திரம் :—1813-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபார உரிமைச் சாசனம் மாற்றியமைக்கப்பட்டது. இதுவரையில் இந்திய வியாபாரம் கம்பெனியாருக்கு மாத்திரம் பிரத்தியேக உரிமையாக இருந்தது. கம்பெனியின் இராஜ்ஜியாதிகாரம் அதிகம் ஆகவே இந்தியாவில் எல்லாப் பிரிட்டிஷ் ஜனங்களும் வந்து வியாபாரம் செய்யலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டது.

சென்னை மாகாணத்தில் ரயத்வாரி வரி வசூல் ஏற்பாடு :—சென்னை கவர்னரான மன்ரோவினால் இந்த நிலவரி

வசூல் ஏற்பாடு அமைக்கப்பட்டது. இதனால் சாகுபடி செய்பவர்கள் சர்க்காருக்கு நேரில் நிலவரியைச் செலுத்த வேண்டும். அப்போதுக் கப்போதுள்ள விலைவாசிப்படி 30 வருஷத்துக்கு ஒரு முறை வரியை உயர்த்தலாம்; அல்லது குறைக்கலாம்.

---

19. லார்டு ஹேஸ்டிங்ஸ் (1813—1823)

ஹேஸ்டிங்ஸ் பிரபு :—இங்கிலாந்தில் பல சந்தர்ப்பங்களில் நல்ல கியாதிபெற்றிருந்த இவர் இந்தியாவுக்குத் தமது முதுமைப் பருவத்தில் கவர்னர்-ஜனரலாகவந்தார். இவர்சுறுசுறுப்பும் நற்குணங்களும் வாய்ந்தவர்.

லார்டு ஹேஸ்டிங்ஸ்

பிண்டாரிகள் :—மகாராஷ்டிர தேசம் பிரிட்டிஷ் ஆட்சியில் சேரவில்லை ஆதலால் மத்திய இந்தியாவில் மிகவும் குழப்பமாக இருந்தது. மகாராஷ்டிர சேனைகளிலிருந்த அநேகர் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து கொள்ளை யடிக்கத் தலைப்பட்டனர். அவர்களுக்குப் பிண்டாரியர் என்று பெயர். கிராமங்களைக் கொள்ளை யிட்டும் கொளுத்தியும் ஜனங்களை இம்சித்தும் பிண்டாரிகள் மத்திய இந்தியாவில் பெரும் பயத்தை விளைவித்து வந்தனர். பிண்டாரிகளை அடக்குவார் யாருமில்லை. சில சமயங்களில் மகாராஷ்டிர அரசர்களே அவர்களுக்கு உதவியாக இருந்து அவர்கள் கொள்ளையில் பங்கு பெற்றுக்

கொண்டனர். பிண்டாரிகளை அழிப்பதற்கு ஹேஸ்டிங்ஸ் சமயம் பார்த்திருந்தார்.

நேபாள யுத்தம் :—இந்தச் சமயத்தில் வடக்கு எல்லையில் உள்ள நேபாள இராஜ்ஜியத்துடன் சண்டை செய்ய நேர்ந்தது. இங்கு வசிக்கும் கூர்க்கர்கள் சிறந்த யுத்தவீரர்களாகிய ராஜபுத்திரர்கள். அவர்களின் இராஜ்ஜியம் இமய மலையின் தென்சரிவுப் பாகத்தில் இருந்தது. இங்கிருந்து தங்கள் இராஜ்ஜியத்தைச் சமவெளியில் விஸ்தரிக்கத் தொடங்கி அயோத்தியில் சில கிராமங்களைக் கைப்பற்றினர். உடனே கம்பெனியார் யுத்தம் செய்யவேண்டியதாயிற்று.

கூர்க்கர்களிடம் பலமான மலைக் கோட்டைகள் இருந்தன. அவைகளை எதிர்த்துப் பிடிப்பது கடினமா யிருந்தது. மலை நாட்டு யுத்தத்தில் அனுபவம் இல்லாத பிரிட்டிஷ் சேனைகள் முதலில் தோல்வியடைந்தார்கள். கடைசியாக ஜனரல் ஆக்டர்லோனி பல இடங்களில் வெற்றியடைந்தார். நேபாள இராஜதானியை எதிர்க்க ஏற்பாடு செய்தார். நேபாள அரசர் சமாதானத்துக்கு வேண்டினர். சமவெளியில் உள்ள தரைப்பிரதேசத்தைப் பிரிட்டிஷாருக்கு கொடுத்துவிடுவதாகவும், காட்மாண்டுவில் ஒரு பிரிட்டிஷ் ரெசிடெண்டை யேற்றுக்கொள்வதாகவும் நேபாள அரசர் ஒப்புக்கொண்டார். ஆனால் நேபாளம் சப்ஸிடியரி இராஜ்ஜியமல்ல என்றும், தனிப்பட்ட சுயேச்சையான இராஜ்ஜியம் என்றும் கம்பெனியார் ஒப்புக்கொண்டனர். நேபாளத்திலிருந்து கைப்பற்றின பிரதேசத்தில்தான் சிம்லா நகரம் உள்ளது. இதுவே கவர்னர்-ஜனரலது கோடை வாசஸ்தலமாக விளங்குகிறது. நேபாள வாசிகளான கூர்க்கர்கள் இந்தியச் சேனையில் ஒரு பகுதி (ரெஜிமெண்டு) ஆகச் சேர்ந்தார்கள் அவர்களது தீரச் செயல்கள் இந்திய ராணுவச் சரித்திரத்தில் வெகுபிரபலமாக விளங்குகின்றன.

பிண்டாரி யுத்தம் :—நேபாள யுத்தம் முடிந்ததும் பிண்டாரிகளை அடக்கும் வேலையை ஹேஸ்டிங்ஸ் கைக் கொண்டார். அவர்களை அழிப்பதற்கு நாலுபுறங்களிலு மிருந்து பிரிட்டிஷ் சேனைகளை ஹேஸ்டிங்ஸ் அனுப்பினர். எலிகள் பொறியில் அகப்படுவதுபோல் பிண்டாரிகள் அகப் பட்டுக்கொண்டனர். மகாராஷ்டிர அரசர்கள் ஒருவரும் பிண்டாரிகளுக்கு உதவி செய்ய வரவில்லை. அநேக பிண்டாரிகள் காடுகளுக்கு ஓடிப்போய் மடிந்தனர். பலர் சண்டையில் வீழ்ந்தனர். சிலர் கொள்ளைத் தொழிலை விடுத்து குடித்தனக்காரராக அமர்ந்தார்கள்.

கடைசி மகாராஷ்டிர யுத்தம்(1817-1819):—**காரணம்** —பிண்டாரி யுத்தம் நடந்தபோது மகாராஷ்டிரர் அவர் களுக்கு உதவியாயிருந்த விஷயம் ஹேஸ்டிங்ஸுக்கு நன்கு புலப்பட்டது. மகாராஷ்டிர அரசர்களும் சப்ஸிடியரி ஏற்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளச் சதியாலோசனை செய் தனர். மேலும்பேஷ்வா இங்கிலீஷ்காரரை எதிர்க்கஏற்பாடு கள் செய்துகொண்டிருந்தார். பேஷ்வாவின் மந்திரி அதி சாமர்த்தியமான சூழ்ச்சிக்காரர். கெயிக்வார் தூதன் புனுவுக்கு வந்திருந்தபோது பேஷ்வாவின் மந்திரி அவனைக் கொன்றுவிட்டார். கெயிக்வார், கம்பெனியாரின் ஆட்சிக் குட்பட்டவர். ஆதலின் இந்தக் கொலை விஷயமாகப் பேஷ்வாவைக் கம்பெனியார் விசாரணை செய்தனர். பேஷ்வா மந்திரியை நீக்கிவிட வேண்டுமென்றும் அதிக மான இங்கிலீஷ் சேனையைப் புனுவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதன் போஷணைக்காக இராஜ்ஜியத்தில் ஒரு பாகத்தைப் பம்பாய் கவர்னரிடம் விட்டுவிட வேண்டு மென்றும் நிபந்தனைகள் செய்தார்கள். இதர இராஜ்ஜியங் களோடு சிநேகம் செய்துகொள்ளக்கூடாது என்றும் பேஷ்வாவைக் கட்டுப்படுத்தினர்கள். அரசியல் சுதந்

தரம் முழுமையும் பேஷ்வா இழந்தார். அவருக்கு அது மிகவும் அவமானமாயிருந்தது. எப்படியாவது இந்தக் கேவல நிலைமையிலிருந்து விலகிக்கொள்வது நலமென்று தீர்மானித்தார். மற்ற மகாராஷ்டிர மன்னர்கள் எல்லோரும் தமக்குச் சகாயம் செய்வார்கள் என்று அவர் எண்ணினார். ஆனால் சிந்தியாவும் கெயிக்வாரும் முன்னமேயே பிரிட்டிஷ் ஆதிக்



கத்தை ஒப்புக்கொண்டு விட்டபடியால் பேஷ்வாவோடு சேரவில்லை. ஹோல்காரும் பான்ஸ்லேயும் பேஷ்வா பக்கம் சேர்ந்து பிரிட்டிஷாரை எதிர்க்கத்தீர்மானித்தனர்.

பேஷ்வாவுடன் யுத்தம் :—1817-ல் பேஷ்வா புனாவிலிருந்த இங்கிலீஷ் ரெசிடெண்டைத் திடீரெனத் தாக்கினார். ஆனால் பிரிட்டிஷ் சேனைகள் மகாராஷ்டிரரை

விரட்டி யடித்தன. புனுவிலிருந்து பேஷ்வா ஓடிவிட்டார். பேஷ்வாவின் சேனைகள் மறுபடியும் கர்க்கீ என்னும் இடத்தில் தோல்வியடைந்தன. புனு இராஜ்ஜியம் முழுமையும் கம்பெனியார் வசம் சேர்ந்தது. இப்பிரதேசத்தைப் பம்பாய் மாகாணமாக ஏற்படுத்தினுர்கள். பேஷ்வா தம் பட்டத்தை யிழந்து, கம்பெனியார் கொடுத்த பென்ஷன் எட்டு லக்ஷம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு தனியே வசிப்பதாக ஒப்புக் கொண்டார். சடாாரவைச் சுற்றிலுமுள்ள பிரதேசம் ஒரு சிறு இராஜ்ஜியமாகச்செய்யப்பட்டு,சிவாஜியின் சந்ததியைச் சேர்ந்த ஒரு அரசருக்குக் கொடுக்கப்பட்டது.

பான்ஸ்லேயுடன் யுத்தம் :—புனுவில் பேஷ்வா கிளம்பியதுபோல், அதே சமயம் பான்ஸ்லே அரசர் நாகபுரியிலுள்ள ஆங்கிலச் சேனையை எதிர்த்தார். பேஷ்வா தோல்வியடைந்த விதமாகவே பான்ஸ்லேயும் தோல்வியுற்ருர். சீதாபல்டி என்னும் இடத்தில் அவர் சேனைகள் சின்னுபின்னமாயின.பான்ஸ்லே அரசரும் ஓடிவிட்டார். நாகபுரி இராஜ்ஜியத்தில் பெரும்பாகத்தைக் கம்பெனி ஆட்சியில் சேர்த்துக்கொண்டனர். அது மத்திய மாகாணம் என்று ஏற்பட்டது. சொற்ப பாகத்தை ஒரு சிறிய இராஜ்ஜியமாக்கிப் பான்ஸ்லே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையை அதன் அரசனுக ஏற்படுத்தினுர்கள்.

ஹோல்காருடன் யுத்தம் :—ஹோல்கார் இறந்த பிறகு இந்தூர் இராஜ்ஜியத்தைத் துளசிபாய் அரசாட்சிசெய்திருந்தாள். மகாராஷ்டிர பிரபுக்கள் பேஷ்வா யுத்தம் ஆரம்பித்த சமயம் அவருக்கு உதவியாகத் தாங்களும் பிரிட்டிஷாரைத் தாக்கவேண்டும் என்று பிடிவாதம் செய்தனர். துளசிபாய் இதற்கு இணங்கவில்லே. உடனே மகாராஷ்டிர சேனைத் தலேவர்கள் அவளேக் கொன்றுவிட்டு பிரிட்டிஷ் சேனைகளே எதிர்த்துச் சென்றனர். மாஹித்பூர் என்னும்

லார்டு ஹேஸ்டிங்ஸ்
காலத்திய இந்தியா
1823.
நேபாளம்
அயோத்தி
இராஜபுதனம்
வங்காளம்
நாகபுரி
ராஜ்ஜியங்கள்
நிஜாம்
ராஜ்ஜியம்
வடசர்க்கார்
மைசூர்ராஜ்ஜியம்
அராபிக்கடல்
வங்காளக் குடாக்கடல்

இடத்தில் நடந்த யுத்தத்தில் மகாராஷ்டிர சேனை தோல்வியடைந்தது. துளசிபாய் குமாரராகிய முல்ஹார்ராவ் ஹோல்கார் இந்தூர் அரசராக நியமிக்கப்பட்டார். அவருக்குதவியாக ஒரு பிரிட்டிஷ் சேனை வைக்கப்பட்டது.

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் ஆட்சியும் சீர்திருத்தங்களும் :— வெல்லெஸ்லி இந்தியாவில் ஆரம்பித்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெருகி பலமடைந்து ஒழுங்கு பெற்றது ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில்தான். மாகாராஷ்டிரர்களை அடக்குவதற்கு முன் வெல்லெஸ்லி இங்கிலாந்து திரும்பினர். ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில்தான் மகாராஷ்டிர இராஜ்ஜியம் முழுமையும் கம்பெனியார் அதிகாரத்துக்கு அடங்கிய சிறுசிறு இராஜ்ஜியங்களாயின. பிரிட்டிஷ் ஆட்சியில் பம்பாய் மாகாணம், மத்தியமாகாணம் இவை உண்டாயின. ராஜபுத்திரர்களுக்கு மகாராஷ்டிரர் தொந்தரவு நீங்கியது. மத்திய இந்தியா மக்களுக்குப் பிண்டாரிகளினல் ஏற்பட்ட பயம் ஒழிந்தது. கல்வியை விருத்திசெய்ய ஏற்பாடுகள் அமைத்தார். அச்சுயந்திரங்கள் உண்டாகி இந்தியப் பத்திரிகைகள் தோன்றின. இந்தியர்களைப் பல உத்தியோகங்களில் நியமித்தார். இவர் காலத்தில் எல்பின்ஸ்டன், கிராண்டு டப் என்ற நிபுணர்கள் பம்பாயில் இருந்தனர்.

காலக் குறிப்பு :—

1807—1813	லார்டு மிண்டோ
1809	ரஞ்சிட் சிங்குடன் உடன்படிக்கை
1813—1823	லார்டு ஹேஸ்டிங்ஸ்
1813	கம்பெனியின் வியாபாரச் சுதந்தரம் புதிப்பித்தல்
1814—1816	நேபாள யுத்தம்
1817	பிண்டாரி யுத்தம்
1817—1818	கடைசி மகாராஷ்டிர யுத்தம்
1818	பேஷ்வா அரசாட்சி நீங்கியது
	பம்பாய், மத்திய மாகாணங்கள்

20. லார்டு ஆமெர்ஸ்ட் (1823—1828)

பர்மா யுத்தம் :— பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியா முழுவதும் பரவிய பிறகு எல்லைப் பக்கங்களில் சண்டை ஏற்பட வேண்டியது இயல்பு. வடமேற்கு எல்லையில் ரஞ்சித் சிங்குடன் உடன்படிக்கை செய்தாகிவிட்டது. வடக்கெல்லையில் நேபாள அரசருடன் ஒரு ஏற்பாடும் செய்துகொண்டாயிற்று. இனி வடகிழக்கு எல்லையில் நடந்தவைகளைக் கவனிப்போம். வங்காளத்துக்குக் கிழக்கே பிரிட்டிஷ் ஆளுகை அஸ்ஸாம் வரையில் பரவி யிருந்தது. அஸ்ஸாமுக்குக் கிழக்கில் பர்மா இராஜ்ஜியம் இருந்தது.

காரணம் :— பர்மிய அரசர்கள் தங்கள் இராஜ்ஜியத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக விஸ்தரித்து வந்தனர். பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் எல்லைப்புற நகரமாகிய சிட்டகாங்கைச் சமீபித்து விட்டனர். 1813-ல் பர்மியர் அஸ்ஸாம் இராஜ்ஜியத்தையும் சேர்த்துக்கொண்டனர். பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு மிகவும் சங்கடங்கள் ஏற்பட்டன. சில பிரிட்டிஷ் வீரர்களைப் பர்மியர் இம்சித்தார்கள். பர்மியர் இவ்வித அதிக்கிரமச் செயல்களைச் செய்யக்கூடாது என்று கவர்னர்-ஜனரல் கண்டித்துச் சொன்னவுடன் பர்மிய சேனபதி வங்காளத்தை ஜெயிப்பதாகப் படை எடுத்து வந்தார். பொன் விலங்குகள் மாட்டிக்கவர்னர்-ஜனரலைக் கைதியாக்கிக் கொண்டு வருவதாக வீண் பெருமை கூறிக்கொண்டு பர்மிய சேனபதி சண்டைக்குப் புறப்பட்டார்.

போரின் நிகழ்ச்சி :— ஆனால் பெருமைக்கேற்றவாறு பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. அஸ்ஸாம், மணிபூர் முதலிய பிரதேசங்களைப் பிரிட்டிஷ்காரர் சுலபமாகப் பிடித்துக்கொண்டார்கள். அங்குள்ள பர்மியரைத் துரத்தி விட்டனர். பிறகு கடல் மார்க்கமாகப் பர்மாவின்மேல்

படை எடுத்துச் சென்றனர். ரங்கூனைச் சுலபமாகக் கைப் பற்றினர். அதிக மழையினால் பிரிட்டிஷ் சேனைகள் மிகவும் கஷ்டப்பட்டன. ஆகாரப் பொருள்களும் குறைந்து வியாதிகளும் உண்டாகவே பிரிட்டிஷ் படைகள் முன் செல்ல முடியாமல் தங்கி விட்டன. ரங்கூனை ஜெயித்த பிறகு சூட்டுடன் சூடாக உள் நாட்டில் பிரவேசிக்க முடியவில்லை.

இந்த நிலையில் பர்மிய சேனாபதி பிரிட்டிஷ்காரரை எதிர்த்தார். தோனபூ என்னும் இடத்தில் நடந்த சண்டையில் பர்மியர் தோல்வி யடைந்தனர். ப்ரோம் நகரத்தைப் பிரிட்டிஷார் பிடித்துக்கொண்டனர். பர்மா இராஜ்ஜியத் தலைநகராகிய ஆவாஜெயிக்கப்படும் நிலைமையில்இருந்தது. உடனே பர்மிய அரசர் சமாதானம் செய்துகொள்ள இசைந்தார்.

யாண்டபூ உடன்படிக்கை:—1826-ம் ஹு யாண்டபூ என்ற இடத்தில் பிரிட்டிஷ்காரரும் பர்மியரும் உடன் படிக்கை செய்துகொண்டனர். ரங்கூன் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அஸ்ஸாம், அரகான், டேனஸரிம் முதலிய பிரதேசங்களும், சால்வின் நதியின் கிழக்குப் பாகத்தில் உள்ள பிரதேசமும் பிரிட்டிஷ் இராஜ்ஜியத்துடன் சேர்க்கப்பட்டன. அஸ்ஸாம் அருகில் இருந்த மணிபூர், காசார் முதலிய சிறிய இராஜ்ஜியங்கள் விஷயத்தில் தாம் தலையிடுவதில்லை என்று பர்மிய அரசர் ஒப்புக்கொண்டார். ஒரு பிரிட்டிஷ் ரெசிடெண்டு ஆவா நகரத்தில் வசித்து வருவதற்கு ஒப்புக்கொண்டார்.

பராக்பூர் சிப்பாய்க் கலகம்:—பராக்பூரிலிருந்த இந்திய சிப்பாய்கள் சில கஷ்டங்கள்பற்றி பர்மா சண்டைக்குச் செல்ல மறுத்து, தங்கள் குறைகளை நிவர்த்திக்காததால் கலகஞ் செய்தனர். கலகத் தலைவர்கள் சுடப்பட்டதால் கலகம் அடங்கிற்று.

21. லார்டு வில்லியம் பெண்டிங்க் (1828—1835)

பெண்டிங்க்பிரபு:—இவர் முதலில் சென்னைகவர்னராக இருந்தார். பிறகு இங்கிலாந்து சென்று கவர்னர்-ஜனரலாகத் திரும்பினார். ஜனங்களின் நன்மையை நாடுவதே ஆங்கில ஆட்சியின் முக்கியநோக்கமாகக்கொண்டு பல சீர்திருத்தங்களை அமைத்தார். இவர் செய்த நன்மைகள் பல.



பெண்டிங்க் பிரபு

1. தக்கியர்களை அழித்தது :—தக்கியர் என்பவர்கள் மத்தியஇந்தியாவிலிருந்தஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தார். பல ஊர்களிலும் தங்கி வழிப்பிரயாணிகளையும் இதரர்களையும் பிடித்துக்கொன்றுகொள்ளையிட்டு ஜீவனஞ்செய்து வந்தார்கள். இந்தக் கொடிய கொள்ளைக் கூட்டத்தாரை அடியோடு நாசமாக்கினார். ஆங்கிலச் சேனைகள் இவர்களைத் துரத்தி ஆயிரக்கணக்கான தக்கியர்களை வெகு சீக்கிரத்தில் பிடித்துத் தண்டனை செய்தன. இந்த அரிய உபகாரத்தால் வழிப்பிரயாணம் சுலபமாயிற்று.

2. ஜனசமூக சீர்திருத்தங்கள் :—கணவன் இறந்ததும் அவன் மனைவி அவனுடன் தீக்குளித்து உடன்கட்டையேறுங் கொடிய வழக்கத்தை நிறுத்தினார். அவ்விதம் செய்பவர்களையும் உடந்தையாகயிருப்பவர்களையும் கடுமையாகத் தண்டிக்க உத்தரவிட்டார். நரபலி கொடுக்கும் வழக்கமும் நிறுத்தப்பட்டது.

3. கல்வி அபிவிருத்தி :—ஜனங்களுக்குக் கல்வி போதிப்பது சர்க்காரின் முக்கிய வேலைகளில் ஒன்ருகப் பெண்டிங் கருதினுர். கவர்னர்-ஜனரல் சபையில் அங்கத்தினராய் இருந்த லார்டு மெக்காலே அபிப்பிராயப்பட்டபடி இந்தியர்களுக்கு இங்கிலீஷ் பாஷையைக் கற்பிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இஙகிலீஷ் கற்பிக்கப் பல கலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

4. அரசியல் சீர்திருத்தங்கள் :—கம்பெனியாரின் செலவைக் குறைக்கும் வழிகளையும் வரவை அதிகரிக்கும் வழிகளையும் அனுசரித்தார். ராணுவ வீரர்களுக்குக் கொடுத்திருந்த போர்க்களப் படியை நிறுத்தினுர். ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் வருமானங்களையும் குறைத்தார். குறைந்த சம்பளத்தில் அதிகம் உழைக்கக்கூடிய இந்தியர்களை உயர்ந்த உத்தியோகங்களில் நியமித்தார். ஜாதிமத பேதமின்றி அவரவரது யோக்கியதைக்கேற்ப உத்தியோகங்களில் நியமிக்கலாம் என்று ஏற்பட்டது. ஐக்கிய மாகாணத்தில் நிலவரித் திட்டத்தை ஏற்படுத்தி வருமானத்தை விருத்தி செய்தார். அபின் உற்பத்தி செய்வதை அரசாங்கத்தின் உரிமையாக்கி வருமானத்தை அதிகப்படுத்தினுர் கோர்ட்டு பாஷையாயிருந்த பாரசீக மொழியை நீக்கிவிட்டு அந்தந்த மாகாணங்களின் பாஷைகளை உபயோகிக்கும்படி உத்தரவு அளித்தார். இங்கிலீஷ் ராஜ பாஷையாயிற்று.

ராஜா ராம் மோகன் ராய் (1776—1833) :—சமூக சீர்திருத்தங்கள் அமைப்பதில் பெண்டிங்க் பிரபுவுக்கு மிக்க உதவியாக இருந்த இந்தியர் ராஜா ராம் மோகன் ராய் ஆவர். இவர் வங்காளப்பிராமணர். இந்துசமூகத்தில் இருந்த ஊழல்களை நீக்க இப்பெரியார் வெகுவாகப் பாடுபட்டார். இவர் பல மதங்களையும் படித்து உண்மை விஷயங்களைச் சகலரும் அறியும் பொருட்டுப் புத்தகங்களும் பத்திரிகைகளும் பிர

சரித்தார். கடவுள் ஒருவரே என்றும், எல்லா ஜனங்களும் சகோதரர்கள் என்றும், கடவுளைப் பூசிக்க ஆடம்பரமான சடங்குகள் தேவையில்லை என்றும் விளக்கினார். இந்தக் கொள்கைகளை யேற்றுக்கொண்ட பலரைச் சேர்த்து ஒரு சங்கம் ஸ்தாபித்தார். இதுவே பிரம சமாஜம் எனப்படும். உடன்கட்டை யேறுதல், நரபலி முதலிய கொடிய பழக்கங்கள் நிறுத்தப்பட்டதற்கு இவருடைய முயற்சியும் ஒரு காரணமாகும். இவர் கல்கத்தாவிலேலொருஇந்துகலாசாலையை ஏற்படுத்தினார். இங்கிலாந்து சென்று இந்தியாவின் நிலைமையை விளக்கிப் பிரசங்கங்கள் செய்தார். அந்நாட்டிலேயே இறந்தார்.

ராஜா ராம் மோகன் ராய்

வியாபார உரிமைச் சாசனம் புதுப்பிக்கப்படுதல் :— 1833-ம் வருு கம்பெனியின் வியாபார உரிமை மறுபடியும் புதிப்பிக்கும் சமயம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பலத்த விவாதம் நடந்தது. இதுவரையில் வியாபாரம், தேச ஆட்சி என்னும் இருவகை வேலைகளையும் கம்பெனியார் செய்து வந்ததால் தேச ஆட்சி திருப்திகரமாக இல்லை 1813-ல் கம்பெனிக்குச் சமதையாகப் பிரிட்டிஷ்பொது மக்களும் வந்து இந்தியாவில் வியாபாரம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது. இப்போது கம்பெனி வியாபாரம் செய்வதையே நிறுத்திவிட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதாவது கம்பெனி, வியாபாரச் சங்கமாக இருந்தது போய் இனி தேச ஆட்சி செய்யும் சங்கமாக மாறியது. இந்தியாவில் வியாபாரம் செய்வதற்குப் பல பிரிட்டிஷ் வியாபாரி

களும், கிறிஸ்துவ மதத்தைப் பரவச் செய்வதற்குப் பல ஐரோப்பியரும் வரத்தொடங்கினர்.

நாடுகேள் கிடைத்தல்:—இந்திய அரசர்களது விஷயங்களில் தலையிடுவதில்லை என்னும் நோக்கத்துடன் பெண்டிங்க் இந்தியாவுக்கு வந்தார். ஆனால் இந்திய இராஜ்ஜியங்களிலுள்ள ஊழல்களைக் காணவும் மேலதிகாரியாகிய கவானர்-ஜனரல் அக்கொள்கையை மாற்றிக்கொள்வது அவசியமாயிற்று.

புதியதாக ஏற்படுத்திய மைசூர் இராஜ்ஜியம்மிகவும் சீர்கேடான நிலைமையில் இருந்தது. மைசூர் அரசரை நீக்கிவிட்டு இராஜ்ஜிய நிர்வாகத்தைப் பிரிட்டிஷார் வசம் ஒப்புவித்தார். 1831 முதல் 1881 வரை மைசூர் பிரிட்டிஷ் ஆளுகையில் இருந்தது.

மைசூரை யடுத்த குடகு இராஜ்ஜியத்து அரசரும் குடிகளைக் கொரேமாக இம்சித்து வந்தார். ஜனங்களின் வேண்டுகோளின்பேரில் பிரிட்டிஷ்காரர்கள் அரசரை நீக்கிவிட்டுக் குடகு இராஜ்ஜியத்தைப் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்துக்கொண்டனர்.

காலக் குறிப்பு:—

1823—7828 லார்டு ஆமேர்ஸ்ட்
1824—1826 முதல் பர்மா யுத்தம்
1828—1835 லார்டு வில்லியம் பெண்டிங்க்
1829 சக கமனம் நிறுத்தப்பட்டது
1833 கம்பெனி வியாபாரம் எடுபட்டது

22. ஆப்கானிய முதல் யுத்தம் (1838—1842)

லார்டு ஆக்லண்ட் (1836—1842):—பெண்டிங்குக்குப் பிறகு ஒரு வருஷகாலம் ஸர் சார்லஸ் மெட்காப் க்வர்னர்-ஜனரலாக இருந்தார். பத்திரிகைகள் அச்சிடும் சுவாதீனத்தை மெட்காப் அளித்தார். பிறகு ஆக்லண்ட் பிரபு இங்கிலாந்திலிருந்து வந்தார்.

எல்லைப்புறப் பாதுகாப்பு:—வடமேற்கு எல்லைப்புற விஷயங்களில் இந்திய சர்க்கார் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் இந்தியா ஸட்லெஜ் நதி வரையில் பரவி யிருந்தது. அப்பால் பஞ்சாபில் ரஞ்சிட் சிங் மகாராஜாவாக இருந்தார். இச்சமயம் வடக்கு ஐரோப்பாவிலுள்ள ருஷிய தேசம் வெகுவாக விஸ்தரிக்க ஆரம்பித்தது. வடக்கு ஆசியா முழுவதும் ருஷிய இராஜ்ஜியமாயிற்று. முன் நாட்களில் ஆரியர்கள், ஹூணர்கள் முதலிய ஜனங்கள் மத்திய ஆசியாவிலிருந்து காபூல் வந்து கைபர் கணவாய் வழியாக இந்தியாவில் பிரவேசித்ததுபோல ருஷியர்களும் கொஞ்சங் கொஞ்சமாக மத்திய ஆசியாவிலிருந்து காபூல் வந்துவிட்டால் அவர்கள் இந்தியாவுக்கு வருவது சுலபமாகும். இந்த அச்சம் பிரிட்டிஷ்காரரைச் சில வருஷங்களாக வருத்தியது. ருஷிய இராஜ்ஜியத்துக்கும் பிரிட்டிஷ் இராஜ்ஜியத்துக்கும் இடையில் பாரசீகம், ஆப்கானிஸ்தானம், சிந்து இவைகள் இருந்தன. பஞ்சாப் அரசர் பிரிட்டிஷாருடன் சிநேகமாகிவிட்டார். மேலும் இந்தியாவைப் பாதுகாக்க அவரும் பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்க வேண்டியவராயிருந்தார். ஆகவே பாரசீகம், ஆப்கானிஸ்தானம் இரண்டு தேசங்களிலும் ருஷிய அதிகாரமும் சாய்காலும் பரவாமல் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியது அவசியம். இவ்விரண்டு

தேசங்களிலும் பிரிட்டிஷ் செல்வாக்கு உண்டாகுமானால் நல்லது. முக்கியமாக ஆப்கானிஸ்தானத்தில் பிரிட்டிஷாருடன் சிநேகமுள்ள ஓரரசர் இருந்தால் அதிக நலம்.

ஆப்கானிய யுத்தத்துக்குக் காரணம் :—சில வருஷங்களாக ஆபகானிஸ்தானத்தில் அரச பதவியை விரும்பிப் போட்டிக்காரர்கள் சண்டை செய்திருந்தனர். அரசரான ஷாஷுஜாவைச் சில ஆப்கன் பிரபுக்கள் விரும்பவில்லை. அவர்கள் தலைவராகிய டாஸ்ட் மகமது, ஷாஷுஜாவைத் தள்ளிவிட்டு ஆப்கன் அரசராயினர். ஷாஷுஜா இந்தியாவிற்கு ஓடிவந்து வசித்திருந்தார். இச்சமயம் பிரிட்டிஷ் மந்திரி உத்தரவுப் பிரகாரம் டாஸ்ட் மகமதுடன் சிநேகம் செய்து கொள்ள லார்டு ஆக்லண்ட் முயற்சி செய்தார். ஆப்கன் அரசராகிய டாஸ்ட் மகமது தம்மிடமிருந்து ரஞ்சிட் சிங் கைப்பற்றின பெஷாவர் நகரத்தைத் திரும்ப வாங்கிக் கொடுத்தால்தான் பிரிட்டிஷாருடன் ஒருவித உடன்படிக்கை செய்துகொள்ளச் சம்மதித்தார். ரஞ்சிட் சிங்கினிடம் இதைத் தெரிவிக்க லார்டு ஆக்லண்டு இஷ்டப்படவில்லை. ஆகவே டாஸ்ட் மகமது கேட்டபடி கம்பெனியார் செய்யமுடியவில்லை, உடனே டாஸ்ட் மகமது தமது நாட்டில் ருஷிய தூதனை வரவேற்று ருஷியருடன் ஏதோ ஏற்பாடு செய்துகொள்ள முயற்சி செய்தார்.

உடனே லார்டு ஆக்லண்டு யுத்தம் ஆரம்பித்தார். டாஸ்ட் மகமதை நீக்கிவிட்டு ஷாஷுஜாவை அரசராக்கத் தீர்மானித்தார்.

போர் நிகழ்ச்சி :—பிரிட்டிஷ் சேனைகள் சிந்து வழியாகவும் பலுசிஸ்தானம் வழியாகவும் ஆப்கானிஸ்தானத்தில் பிரவேசித்தன. கஜனி கோட்டையைக் கைப்பற்றின பிறகு காபூலை நோக்கி வந்தன. காபூலில் நுழைந்து ஷாஷு

ஜாவை அரசராகச் சிம்மாசனத்தில் அமர்த்தின. ஆனால் ஆப்கன் ஜனங்கள் ஷாஷுஜாவை விரும்பவில்லை. பலத்த சேனையுடன் பிரிட்டிஷ்காரார்கள் காபூலில் தங்கியிருந்ததால் பட்டணத்தில் அமைதி யேற்பட்டதுபோல் இருந்தது. தங்கள் தேச விஷயத்தில் அன்னியர் தலையிடுவதுபற்றி ஆப்கானியஜனங்கள் சீற்றங்கொண்டு தம்நாட்டில் நுழைந்த பிரிட்டிஷ் சேனையை நாசம் செய்ய யோசனை செய்தார்கள். ஆப்கானியர் கையில் சேர்ந்த பிறகு ஷாஷுஜாவுக்குப் பிரிட்டிஷ் சேனைகளைக் காப்பாற்ற ஒருவித வழியும் இல்லை. காபூலிலிருந்து பிரிட்டிஷ் சேனைகள் திரும்பும்போது ஆப் கானியர் அவர்களைத் தாக்கி இம்சித்தார்கள். பிரயாண கஷ்டங்களும், உணவுக் குறைவும், வியாதியும், ஆப் கானியர் தொல்லையும் ஆகப் பல காரணங்கள் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ் சேனுவீரர்களை அழித்தன. அநேகர் மடிந்து போயினர்; இரண்டொருவர் திரும்பி வந்து சேர்ந் தனர்.

லார்டு எல்லன்பரோ (1842—1844):—மிகவும் துக்கமான இந்த ஆபத்து நேர்ந்தவுடன் பிரிட்டிஷ் ஜனங் கள் அதிக பரபரப்பும் ஆவேசமும் அடைந்தனர். லார்டு ஆக்லண்டு மிகவும் வருத்தத்துடன் இங்கிலாந்து திரும்பி னர். பிறகு வந்த லார்டு எல்லென்பரோ பிரிட்டிஷ் சேனை யின் பெருமையையும் கீர்த்தியையும் மறுபடியும் பிரகாசிக்கச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். தகுந்த ஏற்பாடு களுடன் பிரிட்டிஷ் சேனைகள் கைபர் கணவாய் வழியாக ஆப்கானிஸ்தானத்துக்குள் நுழைந்தன. ஆப்கானியர்களை விரட்டித் துரத்தின. காபூல் பட்டணத்தைப் பிடித்தன இவ்விதம் செய்ததால் பிரிட்டிஷாரின் பெருமையும் கீர்த்தியும் அதிகரித்ததாக அவர்கள் கருதினார்கள். பிறகு பிரிட்டிஷ் வீரர்கள் திரும்பினர். முன் ஏற்பட்ட கலவரத

தில் ஷாஷுஜா கொல்லப்பட்டதால் டாஸ்ட் மகமது ஆப்கானிய அரசராகத் திரும்பிவந்தார். பிரிட்டிஷார் சில காலம் ஆப்கானிஸ்தான விவகாரங்களில் தலையிடாமல் இருந்தனர்.

சிந்துப் பிரதேசம் ஆங்கில ஆட்சியில் சேர்க்கப் பட்டது:—சிந்து தேசத்தில் மூன்று அமீர்கள் அரசாட்சி செய்திருந்தனர். 1832-ல் அவர்களைக் கம்பெனியார் சப் ஸிடியரி உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளச் செய்தனர். சிந்து இராஜ்ஜியத்தில் ஒரு பிரிட்டிஷ் பட்டாளமும் ஒரு ரெசிடெண்டும் இருந்தார்கள். ஆப்கானிய யுத்த சமயம் சிந்து அமீர்கள் கம்பெனியாருக்கு உதவி செய்ய முன்வர வில்லையென்றும், அதனால் உடன்படிக்கைப்படி நடக்க வில்லையென்றும் எல்லென்பரோ சிந்து அமீர்கள்மீது குற்றம் சாட்டினார். நேபியரின்கீழ் பிரிட்டிஷ் சேனைகள் அமீர்களை எதிர்த்துப் போர் செய்தன. சிந்து அமீர்கள் தோல்வியடைந்தனர். சிந்துதேசம் முழுவதும் ஜெயிக்கப் பட்டு பம்பாய் மாகாணத்துடன் சேர்க்கப்பட்டது. 1936-ல் இது தனியாகப் பிரிக்கப்பட்டு ஒரு கவர்னர் மாகாணமாக ஏற்பட்டது.

---

23. சீக்க யுத்தம்

ஸர் ஹென்றி ஹார்டிஞ்சு I (1844—1848):—இவர் கவர்னர்-ஜனரலாக வந்தார். இவர் சிறந்த போர்வீரர்.

முதல் சீக்க யுத்தம் (1845—1846) :—பஞ்சாப் தவிர மற்ற எல்லாப் பாகங்களிலும் பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக் கப்பட்டு பூர்த்தியாகி விட்டது. பஞ்சாப் மாத்திரம் தனி இராஜ்ஜியமாக இருந்தது.

காரணம் :—1839-ம் ஹு மகாராஜா ரஞ்சிட் சிங் இறந்த பிறகு அவருடைய சேனைகளை யடக்கி இராஜ்ஜி

யத்தைத் திறமையாக ஆளக்கூடிய அரசர் ஒருவரும் இல்லே. இராஜ்ஜியத்தில் கலவரம் ஏற்பட்டது. ஐந்து வருஷ காலத்திற்குள் மூன்று அரசர்கள் பட்டத்துக்கு வந்து மடிந்தார்கள். 1844-ல் ரஞ்சிட் சிங் குமாரர் டூலீப் சிங் மகாராஜாவைச் சர்தார்கள் ஏற்றுக்கொண்டார்கள்.



டூலீப் சிங் சிறுவராக இருந்ததால் அவர் தாயார் இராஜ்ஜிய நிர்வாகத்தை நடத்தி வந்தார். ஆனல் சீக்க கால்சா என்ற சேனேக்கூட்டத்தை அவளால் அடக்கக்கூடவில்லே. ஒரு வேலேயுமின்றி ஆயிரக்கணக்கான சேனுவீரர்களேயும் பீரங்கிகளேயும் வைத்திருப்பது கஷ்டம். அவர்களுக்கு வேலே கொடுப்பது அவசியமாயிற்று. ஸட்லெஜ் நதி எல்லேயைக் கடந்து பிரிட்டிஷ் சேனேயுடன் சண்டை செய்வதே சிறந்தது எனத்தோன்றிற்று. ஜெயித்தால் சீக்கர் அதிகாரம் பலப்படும். பிறகு பிரிட்டிஷாருடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்று சீக்க மகா

ராணி எண்ணியிருந்தாள். அவ்வாறே சீக்க சேனைகள் ஸட்லெஜ் நதியைக் கடந்து பிரிட்டிஷ் ஆட்சிக் குட்பட்ட பிரதேசங்களில் பிரவேசித்தன. பிரிட்டிஷ் சேனைகளைக் கவர்னர்-ஜனரல் ஹார்டிஞ்சும், ஹ்யூகப்பும் தலைவர்களாக இருந்து நடத்தினர். முட்கீயிலும், பிரோஜ்ஷாவிலும் பலத்த சண்டைகள் நிகழ்ந்தன (1845). சீக்க சேனாவீரர்கள் ஐரோப்பியர்களால் நன்றாகப் பயிற்சி செய்யப்பட்டிருந்தனர். கம்பெனியார் இந்தியாவில் செய்த எல்லாச் சண்டைகளிலும் சீக்கர்களுடன் செய்த சண்டை மிகவும் கடுமையாக இருந்தது. ஆயினும் தகுந்த சேனாபதி இல்லாமையால் சீக்கர்களுடைய போர்த்திறமை வீணாயிற்று. பிரிட்டிஷார் வெற்றியடைந்தார்கள். மறுபடியும் சீக்கர்களை அலிவாலிலும், சோப்ரயானிலும் முறியடித்துத் துரத்தினர் (1846). இந்த யுத்தங்களில் சீக்கர்கள் பெருத்த நஷ்டமடைந்தனர். கால்சா சேனை அழிந்து போயிற்று. பல பீரங்கிகளைப் பிரிட்டிஷார் கைப்பற்றினர்.

லாகூர் உடன்படிக்கை :—கம்பெனியார் பஞ்சாப் இராஜ்ஜியத்தைப் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் மகாராஜா ரஞ்சிட் சிங் குமாரரிடம் இராஜ்ஜியத்தை ஒப்புவித்தனர். லாகூரில் ஒரு ரெசிடெண்டும் ஒரு பிரிட்டிஷ் பட்டாளமும் நிறுத்தப்பட்டன. யுத்தச் செலவுக்காக சீக்க அரசாங்கம் 20 லக்ஷ ரூபாய் கொடுக்க வேண்டியதா யிருந்தது. சீக்க மந்திரிகளில் ஒருவரான குலாப் சிங் அத்தொகையைக் கம்பெனியாருக்குக் கொடுத்தார். அதற்கு வெகுமதியாக அவரை ஜம்மூ காஸ்மீரம் ராஜாவாகக் கம்பெனியார் ஏற்றுக்கொண்டு கௌரவித்தனர். அதுமுதல் காஸ்மீரம் ஒரு இந்து இராஜ்ஜியமாக விளங்குகிறது.

---

24. லார்டு டல்ஹௌசி (1848—1856)

டல்ஹௌசி பிரபு :—ஸ்காட்லண்டில் பிறந்த இவர் தமது 36-ம் வயதில் கவர்னர்-ஜெனரலாக வந்தார். இங்கிலாந்தில் வியாபாரச் சங்கத் தலைமை வகித்தவர். இவர் முன்னமேயே அரசியல் முறைகளில் நல்ல பழக்கம் பெற்றிருந்ததால் இந்தியாவிலிருந்த உத்தியோகஸ்தர்கள் இவருக்கு அடங்கி ஒத்து உழைத்தார்கள்.

லார்டு டல்ஹௌசி

இரண்டாம் சீக்க யுத்தம் :—முதல் சீக்க யுத்தத்தில் பெருந்தோல்வி யடைந்த போதிலும் சீக்க சேனைகளுடைய வலிமை இன்னும் அடங்கவில்லை. பிரிட்டிஷ் ஆதிக்கத்தினின்றும் தம்மை விடுவித்துக்கொள்ளச் சீக்க அதிபதிகள் சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். மூல்தான் மாகாணத்தின் கவர்னரான மூல்ராஜ் திடீரெனப் பிரிட்டிஷாரைத் தாக்கினார். சீக்க சேனைகளும் யுத்தம் செய்ய ஆரம்பித்தன. சில்லியன் வாலாவில் நடந்த கோரமான யுத்தத்தில் ஆயிரக் கணக்கான பிரிட்டிஷ் வீரர்களும் சீக்க வீரர்களும் மடிந்தார்கள். மறுபடியும் 1849-ல் குஜரத்தில் நடந்த யுத்தத்தில் சீக்கர்கள் பெருந்தோல்வியடைந்தனர். குஜரத் யுத்தத்தில் சீக்க சேனையாகிய கால்சா முழுதும் அழிவுற்றது. பஞ்சாப் பிரிட்டிஷ் ஆளுகையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. மகாராஜா டுலிப் சிங் ஆறு லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு விலகிவிட்டார்.

பஞ்சாபில் அமைதி யேற்பட்டது :—புதிதாக பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்க்கப்பட்ட பஞ்சாப் மாகாணத்தில், அமைதி யுண்டாக்க மூன்று கமிஷனர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஸர் ஹென்ரி லாரேன்ஸூம் அவருடைய சகோதரரான ஸர் ஜான் லாரேன்ஸூம் முக்கியமானவர்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் மேன்மையையும் பெருமையையும் பரிமளிக்கச் செய்தவர்களில் லாரென்ஸ் சகோதரர்கள் புகழ் பெற்றவர்கள். பல சீக்க வீரர்கள் போர்த் தொழிலை விட்டு வியாபாரமும் விவசாயமும் செய்து அமைதியாக இருக்கத் தலைப்பட்டனர். சில சீக்க வீரர்களை மாத்திரம் ஒழுங்குபடுத்திப் பிரிட்டிஷ் ராணுவத்தில் சீக்க பட்டாளங்களாக அமைத்தார்கள். நிலவரி விகிதம் சீர்திருத்தப்பட்டது. சட்டங்களை ஏற்படுத்தி நியாய விசாரணை முறைகளை ஒழுங்கு செய்தார்கள். அவர்களுடைய திறமையான நிர்வாகத்தினால் பஞ்சாப் சீரும் சிறப்பும் மிகுந்து விளங்கியது. வியாபாரத்திற்கும் பிரயாணத்திற்கும் வசதியாகப் பல சாலைகள் ஏற்பட்டன. அவைகளில் லாகூரிலிருந்து பெஷாவர் போகும் பாதை மிகவும் முக்கியமானது. போக்கு வரத்துக்கும் நீர்ப்பாசனத்திற்கும் வசதியா யிருக்கும்படி அநேக கால்வாய்கள் வெட்டப்பட்டன. தேசத்தில் கொள்ளை, கொலை, அடிமைத்தனம் முதலியன அறவே நீக்கப்பட்டன. பஞ்சாப் தேசம் இந்தியாவின் வடமேற்குக் கோடியில் இருப்பதால் அதை ஜெயித்தவுடன் வடமேற்கு எல்லையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பிரிட்டிஷ் சர்க்காருக்கு உண்டாயிற்று. அங்குள்ள முக்கியக் கோட்டைகளைப் பிரிட்டிஷார் பலப்படுத்தினார்கள். எல்லைப் பிரதேசத்தில் ஆட்சி செய்த நிக்கல்ஸன் ஆதரவில் அங்குள்ள ஜனங்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் அதிக விசுவாசம் கொண்டனர்.

பத்து வருஷ பிரிட்டிஷ் ஆட்சியில் பஞ்சாப் தேசம் வெகு நேர்மையாகி விட்டது. 1858-ம் வூ சிப்பாய்க் கலகம் ஏற்பட்டபோது பஞ்சாப் வெகு அமைதியாகவே இருந்தது. சிக்க சேனைகள் பிரிட்டிஷாருக்கு உதவியாக இருந்தன.

இரண்டாவது பர்மா யுத்தம் (1852) :—டல்ஹௌசி பிரபுவின் காலத்தில் பர்மாவுடன் இரண்டாவது யுத்தம் நடைபெற்றது. யாண்டபூ உடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் ஒருவர் பர்மியத் தலைநகரான ஆவாவில் இருக்க வேண்டியதாயிற்று. ஆனால் பர்மா அரசர் பிரிட்டிஷ் அதிகாரியை அவமதித்து வந்ததுடன் பர்மாவில் வியாபாரம் செய்து வந்த இங்கிலீஷ் வர்த்தகர்களை வெகுவாகத் துன்புறுத்தி வந்தார். அவ் வர்த்தகர்கள் கவர்னர்-ஜனரலின் உதவியைக் கோரினதால் போர் துவக்கமாயிற்று. முதல் பர்மா யுத்தத்தின்பொழுது சரியான ஏற்பாடுகள் செய்யாத காரணத்தால் ஆங்கிலேய சேனை கஷ்டப்பட வேண்டி யிருந்தது. ஆனால் டல்ஹௌசியோ படை யெடுப்புக்குத் தேவையான ஏற்பாடுகள் யாவையும் தாமே செய்து முடித்தார். ஆகவே வெகு சுலபமாக ஆங்கிலேயருக்கு வெற்றியும் கிடைத்தது. ஆங்கிலேயத் தளகர்த்தரான



பர்மா யுத்தங்களை விளக்கும் படம்



டல்ஹௌசிகாலத்திய
இந்தியா 1856
ஆப்கனிஸ்தானம்
காஷ்மீர்
ராஜபுதனம்
நேபாளம்
பூடான்
பீஹார்
வங்காளம்
அஸ்ஸாம்
பேரார்
நிஜாம் இராஜ்ஜியம்
மைசூர்
பெகு
தெனஸரிம்
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்

காட்வின் ரங்கூனைத் தாக்கினர். பர்மியர் எவ்வளவு கஷ்டப் பட்டு எதிர்த்தும் கடைசியில் தோல்வியுற்றனர். பிறகு ஐராவதியின் வழியே சென்று ப்ரோம் என்ற இடத்தை ஆங்கிலேயர் முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். பிறகு செழிப்பான பேகு என்ற மாகாணம் முழுவதும் ஆங்கி லேயர் வசமாகவே, பெகுவை ஆங்கிலேயருக்குச் சொந்த மான மாகாணமென்று டல்ஹௌஸி பிரபு விளம்பரப் படுத்திவிட்டார். ஆங்கிலேயருடைய ஆட்சியில் பெகு மாகாணம் வெகுவாக முன்னேற்றமடைந்தது. இவ்வாறு கீழ் பர்மா (Lower Burma) ஆங்கிலேயருக்குக்கிடைத்தது.

டல்ஹௌஸி இந்திய இராஜ்ஜியங்களைச் சேர்த்தல் :— இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிபத்தியம் ஏற்படுத்தியவர்களில் லார்டு டல்ஹௌஸி முக்கியமானர். தற்கால இந்தியாவை அமைத்தவர் இவரே என்றும் கூறலாம். சீக்க யுத்தம் முடிந்த பிறகு பஞ்சாப் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்க்கப் பட்டது. மற்றும் அநேக சில்லறைப் பிரதேசங்களையும் டல்ஹௌஸி பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்தார். இவர் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியா மாகாணப் பிரிவினை பூர்த்தி யாயிற்று.

வார்சு இல்லாத இராஜ்ஜியங்கள் சேர்க்கப்படுதல் :— தம்மால் கூடிய வரையில் சுதேச இராஜ்ஜியங் களைப் பிரிட்டிஷாருக்குச் சேர்த்துவிட வேண்டுமென்பது டல்ஹௌஸியின் மனப்பூர்வமான எண்ணம். அநேக சமஸ் தானங்கள் இதற்கு முன்னமேயே பிரிட்டிஷ் ஏகாதிபத் திய உடன்பாட்டை ஏற்றுக்கொண்டிருந்தன அல்லவா? ஆயினும் இவற்றின் அரசாங்க நிர்வாகத்தில் பல ஊழல்கள் இருந்தன. பல சுதேச மன்னர் ஜனநலங் கருதாமல் சுயநலங் கருதுவாராயினர். இவற்றை எப்படியாவது கைக்கொள்ள வேண்டுமென்றெண்ணி, டல்ஹௌஸி வார்சு இல்லாத

இராஜ்ஜியங்களைப் பற்றிய (Doctrine of Lapse) ஓர் புதிய கோள்கையை ஸ்தாபித்தார். இதுவரையிலும் புத்திரப் பேறில்லாத இந்து அரசர்களும், பிறரும் தம் ஆஸ்தியைப் பெறுதற்குரியவர்களாக வேறு யாரையாவது சுவீகாரம் செய்துகொள்வது வழக்கமாக இருந்தது. இவ் வழக்கத்தை நிராகரித்து, பிரிட்டிஷ் ஆதிபத்தீயத்தின் கீழ் வந்த சுதேச ராஜாக்கள் தங்கள் அனுமதி யின்றிச் செய்துகொண்ட சுவிகாரங்கள் அங்கீகரிக்கப்படமாட்டாஎன்றும், அப்படிச் சந்ததியின்றி இறந்த அரசர்களின் நாடுகள் உடனே பிரிட்டிஷாருக்குத் திரும்பி (Lapse) ச் சென்றுவிடவேண்டுமென்றும் விதியுண்டாயிற்று. இதுவே டல்ஹௌசி யுண்டாக்கிய நூதனக் கொள்கையாகும். இவ்விதமாக இவர் வார்சு இல்லாத இராஜ்ஜியங்களுக்குப் பிரிட்டிஷாரே மேலதிகாரிகள் என்பதை ஸ்திரமாகக் கொண்டார்.

வர்சு இல்லாமல் ஆங்கிலேயர் வசம் வந்த நாடுகள்:— இவர் காலத்தில் பல ராஜாக்களுக்குச் சந்ததி இல்லாமலிருந்தது. மார்க்விஸ் ஆவ் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் சடார்ராவில் சிவாஜியின் பரம்பரையைச் சேர்ந்தவர் ஒருவர் அரசராக்கப்பட்டாரல்லவா? அவ்வம்சத்தில் வந்த ஒருவர் 1848-ல் சந்ததியின்றி இறக்கவே, டல்ஹௌசி சடாரர்வைத் தம் ராஜ்ஜியத்தோடு சேர்த்தார். நாகப்பூரை ஆண்டுவந்த பான்ஸ்லே மன்னர் 1853-ல் சந்ததியின்றி இறந்தார். உடனே அவருடைய இராஜ்ஜியமும் பிரிட்டிஷார் வசம் வந்தது. அதுவே இப்பொழுது மத்திய மாகாணங்கள் (Central Provinces) என வழங்குகிறது. அதே வருஷத்தில் ஜான்ஸி அரசர் தாம் இறப்பதற்கு முன் ஒருவனை சுவீகாரம் செய்துகொண்டார். டல்ஹௌசி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் ஜான்ஸியும் இங்கிலீஷ்காரருக்கே திரும்பி வந்தது. இவ்வரசர் ஆங்கிலேய

ருக்குச் சிறந்த நண்பராயிருந்தும், டல்ஹௌசி இவ்வாறு செய்ததைக் கண்டு ஜான்ஸி ராணி 1858-ல் நேர்ந்த சிப்பாய்க் கலகத்தில் சேர்ந்துகொண்டாள்.

அயோத்தி :—இது நிற்க, 1801 முதற்கொண்டு அயோத்தி பிரிட்டிஷ் பாதுகாப்புக்குள் வந்திருந்தது. அந்நாட்டின் அரசாட்சிசீர் குலைந்து, எவ்வளவு கடுமையான உத்தரவளித்தபோதிலும், சீர்திருத்தம் செய்யாமல் நவாப் ஆண்டுவந்தார். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களாகிய ஸ்லீமன், ஔட்ரும் என்பவர்கள் ஜனங்களின் நிலைமை மிகவும் கேவலமாகவும், அரசாங்கம் மிகவும் கேடுற்றும் இருந்ததாகத் தெரிவித்ததால், அந்த இராஜ்ஜியத்தைச் சேர்க்கவேண்டியது அவசியமாயிற்று. டல்ஹௌசி அயோத்தி நவாப்புக்கு உபகாரச் சம்பளம் தந்து அவரைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டு, அயோத்தி இராஜ்ஜியத்தையும் கைக்கொண்டார்.

சாசனம் புதுப்பிக்கப்படுதல் :—20 வருஷமானதும் 1853-ல் ஓர் முறை கம்பெனியாரின் சாசனம் புதுப்பிக்கப்பெற்றது. அதில் முன்போல இவ்வளவுகாலம் கம்பெனியார் ஆட்சி புரிவதென்று குறிப்பிடாமல் பார்லிமெண்டார் மறுமுறை மாற்றுகிற வரையில் கம்பெனியார் ஆண்டு வரலாமென விதிக்கப்பட்டது. இதனால் எப்போதுவேண்டுமானாலும், பார்லிமெண்டார் நேரிலேயே இந்திய ஆட்சியை வகிக்க வசதியுண்டாயிற்று. சிவில் உத்தியோகஸ்தர்களை டைரக்டர்கள் தம் இஷ்டம்போல் நியமிக்கக் கூடாதென்றும், அவ்வுத்தியோகஸ்தர்கள் அதற்குரிய பரீட்சையில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. வங்காளம், பீஹார் என்பவற்றிற்கு ஒரு தனி கவர்னர் நியமிக்கப்பட்டார்.

சீர்திருத்தங்கள் :—டல்ஹௌசி காலத்தில் பிரிட்டிஷ் ஆதிபத்தியம் நாடெங்கும் பரவி பலமடைந்தது. ஜனங்களுடைய சுகவாழ்விற்கான பல புதிய சீர்திருத்தங்களைச் செய்தார். போக்கு வரத்து வசதிகள் விருத்தியாயின. ரயில் பாதைகளும் தந்திக் கம்பிகளும் ஏற்பட்டன. தூரப்பிரயாணங்களைத் துரிதமாகச்செய்யசாத்தியமாயிற்று. நீர்ப்பாசனத்துக்கு உபயோகமான பல கால்வாய்கள் வெட்டப்பட்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவின் செழுமை விருத்தியாகத் தொடங்கியது. கல்வி அபிவிருத்தி அதிகமாயிற்று. சென்னை, பம்பாய், கல்கத்தா இம் மூன்று இடங்களிலும் சர்வகலா சங்கங்கள் (யூனிவர்சிட்டிகள்) ஏற்பட்டன.

காலக் குறிப்பு :—

1836—1842 லார்டு ஆக்லண்டு
1838—1842 முதல் ஆப்கன் யுத்தம்
1842—1844 லார்டு எல்லென்பரோ
1843 சிந்து ஜெயிக்கப்பட்டது
1844—18ɤ8 லார்டு ஹார்டிஞ்சு I
1845—1846 முதல் சீக்க யுத்தம்
1848—1856 லார்டு டல்ஹௌசி
1846—1849 இரண்டாம் சீக்க யுத்தம்
1849 பஞ்சாப் ஜெயிக்கப்பட்டது
1849 சடாரா பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்க்கப்பட்டது
1852 லோயர் பர்மா ஜெயிக்கப்பட்டது.

25. சிப்பாய்க் கலகம்

லார்டு கானிங் கவர்னர்-ஜனரல் (1856—1858) :— டல்ஹௌசி பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றதும், கானிங் பிரபு கவர்னர்-ஜனரல் பதவி ஏற்ருர். இவர் காலத்தில் ஒரு பெரிய சிப்பாய்க் கலகம் ஏற்பட்டு, அதன் பலனுக ஒரு புதிய அரசாட்சித் திட்டமும் ஏற்பட்டது.

கானிங் பிரபு

கலகத்தின் காரணங்கள் :— கலகம் உண்டானதற்குக் காரணமாயிருந்த சம்பவங்களை ஆராய்ச்சி செய்வோம்.

(1) மத சம்பந்தமான மாறுதல்கள்:—இந்தியா முழுவதும் ஐக்கியப்பட்டு ஒரே இராஜ்ஜியமாகப் பிரிட்டிஷார் ஆட்சியில் சேர்ந்த பிறகு, தொன்றுதொட்டு ஜனங்கள் அனுசரித்திருந்த அநேக பழக்கங்கள், காலக்கிரமத்தில் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வந்தன. தங்கள் மதாசாரங்கள் அழிந்துபோவதைக் கண்டு ஜனங்கள் அதிகப் பிரமையும் திகிலும் கொண்டனர். சக கமனத்தை நிறுத்தினது, விதவா விவாகத்தை அனுமதித்தது, கிறிஸ்தவ மதத்தில் சேர்தல் முதலிய விஷயங்களினுல் ஜனங்கள் கவலை கொண்டனர். பிரிட்டிஷ்காரர் இந்திய ஜனங்களையெல்லாம் கிறிஸ்தவர்களாக்க ஆசைகொண்டு இவ்விதம் சீர்திருத்தம் செய்வதாகப் பல ஜனங்கள் நம்பினுர்கள். தங்களையும் தங்கள் தேசத்தையும் பிடித்துக்கொண்ட இந்தப் புதிய பிரிட்டிஷ் ஆதிக்கத்தை விலக்க எண்ணங் கொண்டனர். பிளாசி யுத்தம் முடிந்து 100 வருஷத்துக்கு

பிறகு அவர்கள் பலம் குன்றிப்போகும் என்று ஒரு ஜோசியக் கதை ஜனங்களிடையே பரவியிருந்தது.

(2) ராணுவச் சீர்திருத்தம்:—இச்சமயத்தில் ராணுவ முறையில் ஏற்பட்ட சில புதிய சீர்திருத்தங்களும் சிப்பயா களின் கவலையை அதிகரிக்கச் செய்தன. சிப்பாய்களைக் கடல் கடந்து பர்மாவில் யுத்தம் செய்யக் கொண்டுபோயி னர். இந்து சிப்பாய்கள் நெற்றில் நாமம், திலகம் வைத் துக்கொள்வதை நிறுத்த முயற்சி செய்தனர். மேலும் புதிதாக சப்ளை செய்யப்பட்ட தோட்டாக்களில் பசுக் கொழுப்பும் பன்றிக்கொழுப்பும் தடவி யிருந்தன. அவை களை உபயோகிப்பதால் தங்கள் மதாசாரப்படி பாவம் என்று சிப்பாய்கள் கருதினார்கள். சிப்பாய்கள் கலகம் செய் யக் கிளம்பியதற்கு முக்கியமான காரணம் இதுதான்.

(3) ராஜீய அதிருப்தி :—பல இந்திய இராஜ்ஜியங்களை லார்டு டல்ஹௌசி வலுவில் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த் துக்கொண்டார். பல அரச வம்சத்தினருக்குக் கொடுத்து வந்த பென்ஷன் தொகையையும் குறைத் துவிட்டார். இதனால் பாதிக்கப்பட்ட அரச வம்சத்தினருக்கும் அவர் களது ஆதரவில் இருந்த பல பிரபுக்களுக்கும் ஆத்திரம் உண்டாயிற்று. பேஷ்வா பாஜி ராவ் சுவீகார புத்திரரான நானா சாஹேபும், ஜான்ஸி ராணியான லக்ஷ்மிபாயும் கலகத் தின் முக்கியமான தலைவர்களாக விளங்கினார்கள். அயோத்தி தாலுக்தார்களும் தங்கள் அதிகாரம் குறைந்ததைப்பற்றி அதிருப்தி யடைந்து கலகத்தில் சேர்ந்தனர். டில்லியில் இருந்த மொகலாயச் சக்கரவர்த்தியின் சந்ததியாரான பகதூர்ஷாவைத் தூண்டிவிட்டு அவரை அனுசரணையாக வைத்துக்கொண்டு கலகக்காரர்கள் மறுபடியும் டில்லி இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கலாம் என்று மனோராஜ்ஜியம் செய்தார்கள்,

இவவாறு மதம், ராணுவம், ராஜீயம் சம்பந்தமான காரணங்களால் திடீரென்று பெரிய சிப்பாய்க் கலகம் தோன்றிற்று.

---

26. கலகம் பரவுதல்—டில்லி முற்றுகை

கலக ஆரம்பம்:—கொழுப்புத் தடவின தோட்டாக்களைச் சிப்பாய்கள் வாங்கிக்கொள்ள மறுத்தனர். உத்தரவுக்குக் கீழ்ப்படியாததற்காக அந்தச் சிப்பாய்களை வேலையினின்றும் நீக்கி அவர்களைத் தண்டிக்க ஆரம்பித்தனர். திடீரென எல்லா இந்தியச் சிப்பாய்களும் விரோதமாகக் கிளம்பி பிரிட்டிஷ்காரரைக் கொலை செய்யத் தொடங்கினர்.

கலகம் பரவுதல் :—முதன் முதலாக பாரக்பூர் என்னுமிடத்தில் கலகம் தோன்றியது. பிறகு மீரத்தில் ஆரமபித்தது. அங்குள்ள ஐரோப்பியர்களைச் சிப்பாய்கள் கொன்று அவர்களுடைய பங்களாக்களைக் கொளுத்தினர். பிறகு டில்லிக்குச் சென்றனர். வழியில் பல சிப்பாய்கள் கலகக்காரருடன் சேர்ந்து கொண்டனர். பழைய இராஜ்ஜியத் தலைநகராகிய டில்லியைக் கைப்பற்றிக் கொண்டால் கலகம் பூர்த்தியாகி ஜெயம் ஏற்படும் என்று அவர்கள் எண்ணினார்கள். டில்லியில் இருந்த வெடிமருந்துச் சாலையை பிரிட்டிஷ் வீரர்கள் சிலநாட்கள் விடாமல் பாதுகாத்து, கலகக்காரர்களை எதிர்த்து நின்றார்கள். கடைசியில் வேறு வழியின்றி நெருப்பு வைத்து வெடிமருந்துச் சாலையைக் கொளுத்தி அழித்துத் தாங்களும் அதனுடன் மாண்டனர். டில்லி நகரம் சிப்பாய்கள் வசம் சிக்கியது. உடனே அங்கிருந்த ஐரோப்பியர்களைச் சிப்பாய்கள் கொன்றுவிட்டார்கள். பகதூர் ஷாவைச் சக்கரவர்த்தியாக விளம்பரப் படுத்தினார்கள்.

கான்பூரில் சிப்பாய்களுக்குத் தலைவராக நானு சாஹேப் இருந்தார். மூன்று வாரம் கடும்போர் செய்து, சிப்பாய்கள் கான்பூரை ஜெயித்தார்கள். பேஷ்வா என்று நானு சாஹேப் தம்மை விளம்பரப் படுத்திக்கொண்டார். கான்பூரிலிருந்த ஐரோப்பியர்களை அலகாபாத்து செல்ல விடுவதாய் நானு சாஹேப் உறுதிகூறி அவர்களை ஓடங்களில் ஏறச்செய்தார். ஆனால் சிப்பாய்கள் அவர்களைச் செல்ல விடவில்லை. அவர்கள் எல்லோரையும் சுட்டுக் கொன்றுவிட்டனர்.

லக்னோவில் நடந்த சண்டை மிகவும் பயங்கரமாயிருந்தது. ஏனென்றால் அவ்விடத்துத் தாலுக்தார்களும் கலகத்தில் பிரிட்டிஷாருக்கு விரோதமாய்க் கிளம்பினர். லக்னோவில் ரெசிடெண்டா யிருந்த ஸர் ஹென்றி லாரென்ஸ் ஏதோ குழப்பம் நேரிடலாம் என்றுமுன்னுடியே உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளை முன் ஜாக்கிரதையாகச் செய்து வைத்திருந்தார். 1857-ம்வருஷம் மே மாதம் கலகக்காரர் லக்னோவைக் கைப்பற்றிக்கொண்டதும் ஐரோப்பியரெல்லோரும் ரெசிடெண்டு ஆபிசுக்குள் புகுந்து கொண்டனர். சிப்பாய்கள் அவர்களை முற்றுகை செய்தனர். நெடு நாட்கள் வரையில் சிப்பாய்கள் வெற்றி யடையாமலே வெளியில் காத்திருந்தனர். எதேச்சையாக நேர்ந்த குண்டு வெடியால் லாரென்ஸ் மரண மடைந்தார். ஆயினும் பிரிட்டிஷ் வீரர்கள் தைரியமாக எதிர்த்து நின்றனர்.

மற்ற இடங்களிலும் பிரிட்டிஷாருக்கும் கலகக்காரருக்கும் யுத்தம் நடந்தது. குவாலியரில் சிந்தியா அரசர் பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கிளம்ப இஷ்டப்படவில்லை. ஆனால் அவருடைய சிப்பாய்கள் அவருக் கடங்காமல் கலக்காரர்களோடு சேர்ந்து கொண்டனர். இந்தூர் அரசருடைய சிப்பாய்களும் இதேமாதிரி அரசருக் கடங்காமல் கலகக்காரர்களோடு சேர்ந்தார்கள். நானு சாஹேப்பின் தள

கர்த்தரான டாண்டிய டோபி என்பவர் ஜான்ஸியில்கலகஞ் செய்தார். ஜான்ஸி ராணி சிப்பாய்களுக்கு முக்கியத் தலைவியாக விளங்கினாள். அவளது தைரியம் சிப்பாய் களுக்கு ஊக்கம் அளித்தது.

1857-ம் வருஷம் மே, ஜூன், ஜுலை இந்த மூன்று மாதங்களில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி மகத்தான ஆபத்தில் இருந்தது. டில்லியை முற்றுகை யிட்ட சேனை தவித்துக்கொண்டிருந்தது. கான்பூரில் நானா சாஹேப் முதன்மையாக விளங்கினார். ஜான்ஸி ராணியும் ஜெயிக்கப் படாமல் அட்டகாசம் செய்துகொண்டிருந்தாள். லக்னோ விலுள்ள ஐரோப்பியரும் வெகு ஆபத்தான தறுவாயில் இருந்தார்கள்.

கலகத்தை அடக்குதல் :—ஜுலை மாதம் மத்தியில் நிலைமை மாறிற்று. அலகாபாத்திலிருந்து ஜனரல் ஹாவ்லக் சேனாபதி கான்பூர் வந்து சேர்ந்தார். நானா சாஹேப் தோல்வியடைந்து இமயமலைக் காடுகளுக்கு ஓடி விட்டார். ஹாவ்லக் கான்பூரைக் கைப்பற்றினார். அவருக்குதவியாகச் சென்னையிலிருந்து கர்னல் நீல் வந்துசேர்ந்தார். ஹாவ்லக்கும் நீலும் கான்பூரிலிருந்து லக்னோவுக்குப் புறப்பட்டார்கள். காம்பல் என்பவர் லக்னோவை மீட்டு, அங்கிருந்த ஐரோப்பியரைக் காப்பாற்றினர்; கலகக்காரர் துரத்தப்பட்டனர்.

டில்லி முற்றுகை :—கலகக்காரர் கைப்பற்றியிருந்த டில்லியை மீட்பது முக்கியமாகும். ஏனென்றால், புராதன தலைநகரமாகிய டில்லி யாரிடமிருக்கிறதோ அவரே ஜெயம் அடைந்தார்கள் என்று பொதுஜனங்கள் எண்ணுவார்கள். ஆகையால் டில்லியை மீட்க பிரிட்டிஷார் முயற்சி செய்தார்கள். சூரத்திலிருந்தும் பஞ்சாபிலிருந்தும் பட்டாளங்கள் வந்து டில்லியை முற்றுகையிட்டன. கலகக்காரர்கள், மேலும்

மேலும்வெளியூர்களிலிருந்து வந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். இவர்களை ஹாவ்லக் முற்றுகை செய்தார். அவருக்குதவியாக நிக்கல்சன் பஞ்சாப் எல்லை மாகாணத்தி லிருந்து ஒரு பட்டாளத்துடன் வந்துசேர்ந்தார். ஜனரல்நிக் கல்சன் வெகு திறமையாகப் போர் புரிந்து கலகக்காரரைச் சின்னபின்னமாக்கினர். ஆனல் வெற்றியோடு நகருக்குள் நுழையும் சமயத்தில் அவர் உயிர்துறந்தார். டில்லிநகரத்தை பிரிட்டிஷார் பிடித்துக்கொண்டனர். அத்துடன்கலகத்தின் வேகம் குறையத் தொடங்கியது. மொகல் சக்கரவர்த்தி பகதூர் ஷாவைக் கம்பெனியார் ரங்கூனுக்கு அனுப்பி விட்டார்கள். அவருடைய பிள்ளையும் பேரனும் சண்டைக் குப் பிறகு சுடப்பட்டு இறந்தனர். பாபர், அக்பர் வம்சம் இவ்விதம் முடிவடைந்தது. பம்பாயிலிருந்து வந்த ரோஸ் என்பவர் ஜான்ஸியைமுற்றுகையிட்டுப்பிடித்தார். ஜான்ஸி ராணி சண்டையில் இறந்தாள். டாண்டியா டோபி இராஜ புதனக் காடுகளுக்கு ஓடினர்;பிறகுபிடிக்கப்பட்டு கொல்லப் பட்டார். மற்றக் கலகத்தலைவர்களைத் தூக்கிலிட்டார்கள்.

பெரிய சிப்பாய்க் கலகம் சுலபமாக அடக்கப்பட்ட தற்குக் காரணம் :—கலகம் ஏதோ சிற்சில இடங்களில் மட்டுமே நடைபெற்றதேயன்றி, இந்தியா முழுவதும் பரவ வில்லை. விவசாயிகள், வியாபாரிகள் முதலிய பொது ஜனங் கள் இதில் சேரவில்லை. பெரிய இந்திய மன்னர்களும் இந்தக் கலகத்தில் சேர்ந்துகொள்ளவில்லை. வட இந்தியா கலகத் துருப்புக்களுடன், சென்னை பம்பாய் துருப்புக்கள் கலகத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை. சீக்கியர்கள் ஆங்கி லேயர்களுக்கு உதவி புரிந்தனர். கலகத் தலைவருக்குள் ஒற்றுமையுமில்லை. சிப்பாய்க் கலகம் பெரும் வெள்ளம் போலின்றி அலை எழுந்து தாழ்வதுபோல் ஒவ்வோரிடத் தில் மும்முரமடைந்து ஓய்ந்துவிட்டது.

கவர்னர்-ஜனரல்களின் கால அளவுப்படம் I

[ஸ்கேல் :- 3 மி. மி. = 1 வருஷம்]

ஆண்டு	கவர்னர்-ஜனரல்	நிகழ்ச்சிகள்
1773		ரெகுலேடிங் ஆக்டு
1774	வார்ரன் ஹேஸ்டிங்ஸ்	மகாராஷ்டிர யுத்தம் I (1779-82) மைசூர் யுத்தம் II (1780-84)
1785	மக்பர்ஸன்	
1786	காரன் வாலிஸ் பிரபு	வங்காளத்தில், சாசுவத வரித்திட்டம் மைசூர் யுத்தம் III (1790-92)
1793	ஸர் ஜான் ஷோர்	
1798	வெல் லெஸ்லி பிரபு	மைசூர் யுத்தம் IV (1799) மகாராஷ்டிர யுத்தம் II, III (1803-05) சப்ஸிடியரி ஏற்பாடு
1805	காரன்வாலிஸ்	காரன்வாலிஸ் இரண்டாம் முறை
	ஸர் ஜார்ஜ் பார்லோ	
1807	மிண்டோ பிரபு I	1809 ரஞ்சித் சிங்குடன் உடன்படிக்கை

தொடர்ச்சி II

ஆண்டு		நிகழ்ச்சிகள்
1813	ஹேஸ்டிங்ஸ் பிரபு	நேபாள யுத்தம் (1814-16) பிண்டாரி யுத்தம் (1817) மகாராஷ்டிர யுத்தம் IV (1817-19)
1823	ஆமர்ஸ்டு பிரபு	பர்மா யுத்தம் I (1824-26)
1828	பெண்டிங் பிரபு	தக்கியர் அழிவு உடன்கட்டையேறுதல் நிறுத்தப்பட்டது ராஜாராம் மோகன் ராய்
1835	மெட்காப்	
1836	ஆக்லண்டு பிரபு	ஆப்கன் யுத்தம் I (1838-40)
1842	எல்லென்பரோ	சிந்து ஜெயிக்கப்பட்டது 1843
1844	ஹார்டிஞ்சு பிரபு I	சீக்கர் யுத்தம் I (1845-46)
1848	டல்ஹௌசி பிரபு	சீக்கர் யுத்தம் II (1848-49) பர்மா யுத்தம் II (1852) வார்சு இல்லாத இராஜ்ஜியங்கள் சேர்க்கப்பட்டன
1856	கானிங் பிரபு	சிப்பாய்க்கலகம் கம்பெனி ஆட்சியின் முடிவு

27. கம்பெனி முடிவு

அரசாங்க மாறுபாடு:—1857-ம் வருஷம் இந்திய சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியது. சிப்பாய்க் கலகம் ஒருவிதத்தில் அதிர்ஷ்ட சம்பவமென்றே கூறவேண்டும். கலகம் முடிந்ததும் கம்பெனியின் ஆட்சியை முடிவு பெறச்செய்து இந்திய ஆட்சியை இங்கிலாந்து அரசியான விக்டோரியா மகாராணியார் ஏற்றுக்கொண்டதாக பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்திய துரைத்தன (Government of India Act)ச் சட்டம் செய்யப்பட்டது. பிரிட்டிஷ் அரசியல் மந்திரிகளில் ஒருவர் இந்தியா மந்திரி அல்லது செக்ரடரி ஆவ் ஸ்டேட் என்று நியமிக்கப்பட்டார். இந்தியா மந்திரிக்கு ஆலோசனை சொல்ல உதவியாக ஒரு இந்தியா சபை ஸ்தாபிக்கப்பட்டது. இந்திய விஷயங்களில அனுபவமுள்ள பத்துப் பெயர்களை அதில் மெம்பர்களாக நியமித்தார்கள். கவர்னர்-ஜனரலுக்கு வைசிராய் அல்லது இராஜப்பிரதிநிதி என்று புதிய பட்டம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு வைசிராயும் ஐந்து வருஷ காலம் உத்தியோகத்திலிருக்கலாம். இந்தியா மந்திரியின் ஆலோசனைப்படி வைசிராய் இந்திய ஆட்சியை நடத்தவேண்டும்.

விக்டோரியா மகாராணி

மகா சாசனம் (1858) :—கலகத்துக்குப் பிறகு இந்தியாவில் அமைதியை உண்டாக்க காணிங் வெகு பாடுபட்டார். விக்டோரியா மகாராணி அனுப்பிய மகா சாசனம் எல்லா முக்கியப் பட்டணங்களிலும் இந்திய ஜனங்

களுக்குப் படித்துக் காட்டப்பட்டது. முதல் வைசிராயாக நியமிக்கப்பட்ட கானிங் பிரபு அலகாபாத்தில் ஒரு தர்பார் நடத்தி இந்தியாவின் மன்னர்களுக்கும் மக்களுக்கும் மகாராணியாரது சாசனத்தை விளம்பரப் படுத்தினர்.

இந்தியர்களுடைய உரிமைகளுக்கு ஆதாரப்பத்திர மாகிய மகா சாசனத்தில் அளிக்கப்பட்ட உரிமைகளாவன:—1. இந்திய ஜனங்களது சுக வாழ்வும் செல்வ விருத்தியுமே பிரிட்டிஷ் ஆட்சியின் முக்கிய நோக்கம் என்று அதில் கண்டிருந்தது. 2. இந்திய மன்னர்களது உரிமைகளையும் சுதந்திரங்களையும் உடன்படிக்கை ஒப்பந்தப் பிரகாரம் பாதுகாப்பதாகவும், இந்திய மன்னர்கள் ஆட்சியில் உள்ள ஒரு பாகத்தையும் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்துக் கொள்வதில்லை யென்றும் வாக்குறுதி கூறப்பட்டது. 3. சந்ததி இல்லாவிடில் சுவீகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்னும் உரிமைப்பத்திரம் ஒவ்வொரு இந்திய அரசருக்கும் கொடுக்கப்பட்டது. 4. கம்பெனி செய்தவுடன் படிக்கைகள், கம்பெனியின் கடன்கள், கம்பெனியார் அளித்துள்ள இனும் சாசனங்கள் முதலியவைகளையும் பிரிட்டிஷ் சர்க்கார் அப்படியே ஒப்புக்கொண்டார்கள். 5. மத விஷயமாகச் சர்க்கார் நடுநிலைமை வகிப்பதாகவும், எல்லா மதத்தினருக்கும் வித்தியாசமின்றி அவரவருடைய யோக்கியதாம்சத்தை யுத்தேசித்தே அரசாங்க உத்தியோகம் கொடுக்கப்படும் என்றும் மகாராணி அளித்த பத்திரத்தில் சொல்லப்பட்டது. 6. கலகத்தில் கலந்ததற்கு வருந்தித் திருந்துவோருக்குக் கருணை காட்டி மன்னிப்பு அளிப்பதாகவும் கூறியிருந்தது. இந்தப் பத்திரம் இந்திய மக்களின் ஜீவாதார உரிமைகளாகிய மத சுதந்திரம், சொத்து சுதந்திரம், சமாதான வாழ்வு முதலியவைகளை அளிக்கும் சாசனமாகக் கொண்டாடத் தக்கது.

கானிங் பிரபு முதல் வைசிராய்(1858—1862):—இவர் வைசிராய் பதவி பெற்றதும் சிப்பாய்க் கலகத்தில் தீங்குவிளை வித்தவர்கள்மீது பழிக்குப்பழி வாங்காமல், அவர்களை மன்னித்து ஆதரவு அளித்ததால் ‘ கருணை நிறைந்த கானிங் ’ எனப்பட்டார். ஆங்கிலேய அரசில் பயமின்றி அனைவரும் வாழலாம் என்று உறுதிகூறி நாடெங்கும் அமைதியை நிலை நாட்டினார்.

சீர்திருத்தங்கள் :—இந்தியா முழுதும் ஒரே ஆட்சியில் சேர்ந்துவிட்டதால் நீதிபரிபாலனம் ஒரேவிதமாக இருக்கும் பொருட்டு சிவில் சட்டம், கிரிமினல் சட்டம், இந்தியன் பீனல்கோட் முதலிய சட்டமுறைகளைப் பிரபல சட்ட நிபுணர்கள் சீர்திருத்தி அமைத்தார்கள். ஒவ்வொரு மாகாணத் தலை நகரத்திலும் ஒரு ஹைகோர்ட்டும் அதன் மேற்பார்வைக்குட்பட்ட ஜில்லாக் கோர்ட்டுகளும் ஸ்தாபிக்கப்பட்டன. வரவு செலவுக் கணக்குகளை கானிங் ஒழுங்கு செய்தார். ஒவ்வொரு வருஷமும் முன்னதாகவே அடுத்த வருஷ வருமானத்தையும் செலவையும் கணக்கிட்டு ‘பட்ஜெட்’ என்ற உத்தேசக் கணக்கைத் தயார் செய்துகொள்ளும் முறையை கானிங் ஏற்படுத்தினார். கல்வியை ஓங்கச் செய்தார். சேனையை ஒழுங்குப் படுத்தினார். 1861-ல் இந்திய சபைகள் சட்டம் ஒன்றைஅமைத்துச் சென்னை, பம்பாய்மாகாணங்களில்சிறிய சட்ட சபைகளை ஏற்படுத்தினார். தயாள குணத்தினாலும், சமயோசித புத்தியினாலும் சிப்பாய்க் கலகத்தில் ஏற்பட்ட நெருக்கடியை லார்டு கானிங் சமாளித்து இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலை நிறுத்தினார்.

28. இராஜப் பிரதிநிதிகள் (வைசிராய்கள்) ஆட்சி

ஆங்கில அரசர்களின் நேர் ஆட்சி :—ஆங்கில அரசர்களின் நேர் ஆட்சியில் இந்தியா வந்து இராஜப்பிரதிநிதிகள் ஆளுங்காலத்தில் இந்தியாவில் புதிய பிரதேசங்களைச் சேர்க்கும் வேலை பெரும்பாலும் இல்லை. ஆனால் எல்லைப் புறப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை அமைப்பதிலும், எல்லைப்புற நாட்டு மன்னர்கள் கலகஞ் செய்தால் அடக்குவதிலும் வைசிராய்கள் முதலில் கவனம் செலுத்தவேண்டியிருந்தது. இரண்டாவதாக உள்நாட்டுத் துரைத்தனத்தை ஒழுங்குசெய்து இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் அதிகப் பொறுப்பு அளிப்பதில் அவர்கள்கவனம் செலுத்தினார்கள். மூன்றாவதாக பஞ்ச நிவாரணம், ரயில் பாதை போடுதல், கல்வி, தொழில்கள், வியாபாரம் முதலிய அபிவிருத்தி ஏற்பாடுகளை அமைத்தனர்.

1. கானிங் பிரபு (1858—1862) :—இவரைப்பற்றி முந்திய பாடத்தில் படித்தோம்.

2. எல்ஜின் பிரபு (1862—1863):—வகாபிகள் என்ற முரட்டு ஜாதியாரின் கலகத்தை அடக்கினர். 1863-ல் இறந்தார்.

3. ஸர் ஜான் லாரன்ஸ் (1864—1869):—இவர் பின்பு பிரபு (லார்டு) பட்டம் பெற்றார். இவர் ஏற்கனவே பஞ்சாபின் துரைத்தனத்தைச் சீர் செய்து கீர்த்தி பெற்றவர். பூட்டான் என்ற மலைநாட்டாருடன் ஒரு சண்டை நடந்தது. ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். அதன் பலனாக டார்ஜிலிங் கிடைத்தது.

பஞ்சங்கள் :—ஒரிஸ்ஸா, சென்னை, மத்திய இந்தியா இப் பிரதேசங்களில்கொடியபஞ்சம்உண்டாயிற்று. ஆகாரம் பிற இடங்களிலிருந்து வருவதற்கு வழியில்லாமல் பலர் மாண்டனர். ஆனால் பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்கு உதவிசெய்ய சர்க்கார் வெகுவாகப் பாடுபட்டனர். இலவச உணவு கொடுப்பதற்கும், பொதுநலமான ரோடுகள் போடுதல், வாய்க்கால் வெட்டுதல் முதலிய வேலை செய்து கூலி பெறுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். பஞ்சங்களைத் தடுப்பதும், பஞ்சகாலத்தில் உதவிசெய்வதும் சர்க்காரது கடமையென்று கருதப்பட்டது.

குறிப்பு :—கீழ்த்தர உத்தியோகஸ்தரை வைசிராய் பதவிக்கு நியமிப்பது இவருக்குப் பிறகு இல்லை.

4. லார்டு மேயோ (1869—1872):—லார்டு மேயோ காலத்தில் வரவு செலவு திட்டம் சீர்திருத்தம் அடைந்தது. இதுவரையில் மாகாணங்களின் செலவு இனங்கள் ஒவ்வொன்றையும் கவனித்து அவர்களுடைய திட்டப்படி மாகாண சர்க்காருக்கு வைசிராய் எல்லா மாகாண வசூல் நிதியிலிருந்து கவர்ன்மெண்டார் பணம் கொடுப்பது வழக்கமாயிருந்தது. அப் பணத்தைச் சிக்கனமாகச் செலவுசெய்து மாகாண சர்க்கார் ஏதாவது மிச்சப்படுத்தினாலும் அம் மிச்சப் பணம் இந்திய சர்க்காரிடம் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். ஆதலால் மாகாண கவர்ன்மெண்டார் சிக்கனமாயிருக்கக் கவலைப்படுவதில்லை. லார்டு மேயோ புதிய ஏற்பாடு செய்தார். அந்தந்த மாகாணத்தில் சில இனங்களில் வசூலிக்கப்படும் வரிப்பணத்தை அந்தந்த மாகாணத்திலேயே செலவு செய்துகொள்ளலாம் என்று விதித்தார். இந்தச் சீர்திருத்தத்தின் பயனாக வரவு செலவு விஷயத்தில் மாகாணசர்க்காருக்கு அக்கரையும் பொறுப்பும் உண்டாயின. நிர்வாகம் சிக்கனமாக நடக்கத்தொடங்கியது.

1871-ல் இந்தியாவின் முதல் சென்ஸஸ் (ஜன சங்கியை) கணக்கு எடுக்கப்பட்டது. விவசாய முறைகளையும், தேசத்தின் வியாபாரத்தையும் கவனிக்க ஒரு தனி இலாகா ஏற்பட்டது. ஜெயில் நிர்வாகத்தைச் சீர்திருத்துவதிலும் லார்டு மேயோ தம் கவனத்தைச் செலுத்தினர். 1872-ம் வருஷம் அந்தமான் தீவில் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்க்க மேயோ சென்றார். அங்கே ஒரு குற்றவாளி மேயோவைக் குத்திக் கொன்றுவிட்டான்

5. லார்டு நார்த்ப்ரூக் (1872—1876):—இந்திய வியாபார விருத்திக்கு உதவியாக ஏற்றுமதிகளின்மேலும் இறக்குமதிகளின்மேலும் வசூலிக்கப்பட்ட (கஸ்டம்ஸ்) தீர்வை இவர் காலத்தில் வெகுவாகக் குறைக்கப்பட்டது. வெளிநாட்டு வியாபாரம் விருத்தியடைந்தது.

1873—1874-ம் வருஷம் வங்காளத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. கவர்ன்மெண்டார் செய்த முயற்சியால் பர்மாவிலிருந்து ஏராளமான அரிசி கொண்டுவரப்பட்டு, பஞ்சத்தில் துன்பமடைந்த ஜனங்களுக்கு அளிக்கப்பட்டது.

நார்த்ப்ரூக் காலத்தில் விக்டோரியா மகாராணியின் மூத்த குமாரரான எட்வர்ட் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். இளவரசரை இந்திய மக்கள் உபசரித்து, வரவேற்று மகிழ்ந்தனர்.

---

29. எல்லைப்புற யுத்தங்கள்

இந்தியாவின் இயற்கை எல்லைகள் வரையில் இந்திய இராஜ்ஜியம் வியாபித்துப் பரவி விட்டது. ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் எல்லைப்புறத்தில் மாத்திரம் சண்டைகள் செய்ய வேண்டியிருந்தது.

வடக்கு எல்லையில் இமயமலைகள் உள. இங்குள்ள நேபாளம், பூட்டான், திபேத் முதலிய இராஜ்ஜியங்களுடன் பிரிட்டிஷ் சர்க்கார் உடன்படிக்கைகள் செய்துகொள்ளும் அவசியம் ஏற்பட்டது. நேபாள யுத்தத்தைப்பற்றி முன்னமே படித்தீர்கள். 1874-ம் வருஷம் பூட்டான் ஜனங்களுடன் சண்டை யேற்பட்டதும், அதன் பலனாக டார்ஜிலிங் கிடைத்ததும் மூன்றாவது வைசிராய் காலத்தில் கூறப்பட்டன.

கிழக்குப்புறத்தில் பர்மாவுடன் ஏற்பட்ட சண்டையைப் பற்றி முன்னமே படித்தீர்கள். அதனால் கீழ் பர்மா (Lower Burma) ஆங்கிலேயருக்கு வந்தது. மூன்றாவது பர்மா சண்டை பின்னால் கூறப்படும் டப்ரின் பிரபு காலத்தில் 1885-ல் நடந்தது. பர்மா அரசராகிய தீபா பிரிட்டிஷ் வியாபாரிகளை இழிவாக நடத்தினார். பிரெஞ்சுக்காரர்களுக்கு வியாபார உரிமைகளை அதிகமாக அளித்தார். இக் காரணம்பற்றி ஆங்கிலேயர் தீபாவை ஜெயித்து அவரை நீக்கிவிட்டு பர்மா முழுவதையும் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்தார்கள். வைசிராய்க் கடங்கிய ஒரு தனி மாகாணமாகப் பர்மா ஏற்படுத்தப்பட்டது.

வடமேற்கு இந்தியாவினருகே ருஷியாவின் ஆதிக்கம் மறுபடியும் அதிகரித்துக்கொண் டிருந்தது. பிரிட்டிஷ் ஆளுகையில் பஞ்சாப் இருந்தமையால் ருஷியாவின் அதிகார எல்லைக்கும் பிரிட்டிஷ் எல்லைக்கும் இடையில் ஆப்கானிஸ்தானம் ஒன்றுதான் இருந்தது. ஆகையால் அந்தத் தேசத்தில் பிரிட்டிஷ்காரருக்குச் சிநேகிதமான ஒரு அரசர் இருந்தால் நலமல்லவா ?

பிரிட்டிஷ் எல்லைக்கும் ஆப்கானிய எல்லைக்கும் மத்தியிலுள்ள மலைப்பிரதேசத்தில் வகாபியர் என்னும் ஒருவகை

முரட்டு ஜாதியினர் வசித்திருந்தனர். பெயருக்கு ஆப்கானிய அரசரின் குடிகள் என்ருலும், அவர்கள் ஒருவிதக் கட்டுப் பாட்டுக்கும் அடங்காமல் சுயேச்சையாகத் திரிந்து கொண்டும் கொள்ளையிட்டுக்கொண்டும் இருந்தனர். அவர் கள் அடிக்கடி பிரிட்டிஷ் எல்லைக்குள் வந்து கொள்ளை யடிப்பதுண்டு. 1863-ல் எல்ஜின் பிரபு காலத்தில் பிரிட் டிஷ் வீரர்கள் வகாபியர்களை அடக்கினர் என்பதைப் படித்தோம்.

ஆப்கானிஸ்தானம் :—1863-ல் ஆப்கன் அரசரான டாஸ்ட் மகமது இறந்துபோனுர். பட்டத்துக்காக அவரு



டைய குமாரர்கள் சண்டை செய்தார்கள். கடைசியில் 1868-ல் ஷேர் ஆலி ஆப்கன் அரசர் ஆனுர். லார்டு லாரேன்ஸ் அவரோடு சிநேகம் செய்து ருஷியர்களது சாய்கால் ஆப் கானிஸ்தானத்தில் பரவாமல் செய்தார். லார்டு மேயோ,

லார்டு நார்த்ப்ருக் இருவரும் ஷேர் ஆலியுடன் சிநேகித மாகவே இருந்தனர்.

1872-ல் ருஷியர்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானத்தை நோக்கிநெருங்க ஆரம்பித்தனர் ருஷியருக்கு விரோதமாகப் பிரிட்டிஷாருடன் சிநேகம் செய்துகொள்ள விரும்பி ஷேர் ஆலி, நார்த்ப்ருக் வைசிராய்க்கு 1872-ல் ஒரு தூதனை அனுப்புவித்தார். ஆனால் வைசிராய் தீர்மானமாக ஒரு முடிவும் சொல்லவில்லை. சமயம் வாய்த்தபோது உதவி செய்வதாக வாக்களித்தாரே தவிர நிலையான ஒரு உடன் படிக்கை செய்துகொள்ள நார்த்ப்ருக் ஒப்பவில்லை. பிரிட்டிஷ்காரர் தமக்கு உதவி செய்யமாட்டார்கள் என்று ஷேர் ஆலி அறிந்து உடனே ருஷியர்களோடு சிநேகம் செய்தார். பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் பீதியடைந்தனர். ஆப்கானிஸ்தானத்தில் பிரிட்டிஷ் ரெசிடெண்டு ஒருவரை வசிக்கும்படி அனுப்பவேண்டும் என்று இங்கிலாந்திலுள்ள இந்திய மந்திரி வைசிராய்க்கு உத்தரவிட்டார். ஆனால் இது அபாயமானது என்று நார்த்ப்ருக் கருதி வைசிராய் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

இரண்டாவது ஆப்கானிய யுத்தம் (1879):—இது அடியிற் கூறப்படும் லிட்டன் பிரபு இராஜப்பிரதிநிதியாக இருந்த காலத்தில் நடந்தது.

காரணம்:—ஆப்கன் அரசர் ஒரு பிரிட்டிஷ் ரெசி டெண்டை ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று லிட்டன் பலவந்தம் செய்தார். ஷேர் ஆலி ஆட்சேபிக்கவே, ஆப் கான் யுத்தம் தொடங்கியது.

யுத்த நிகழ்ச்சி:—யுத்தம் செய்வதற்கு முன்னேற் பாடாக போலன் கணவாய் அருகில் உள்ள குவெட்டா என்ற கோட்டையை 1876-ல் பிரிட்டிஷ்காரார் பிடித்துக்

கொண்டார்கள். பிரிட்டிஷ் சேனைகள் கைபர் கணவாய் வழியாகவும், போலன் கணவாய் வழியாகவும் ஆப்கானிஸ்தானத்தை எதிர்த்துச் சென்றன. காபூல் நகரம் கைப்பற்றப்பட்டது. ஷேர் ஆலி ருஷிய எல்லைக்குள் ஓடிப் போய்விட்டார்.

சமாதான உடன்படிக்கை :—1879-ல் ஷேர் ஆலியின் குமாரரான யாகுப் கானுடன் காண்டமாக் என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கைப்படி 1. யாகுப் கான் ஆப்கன் அரசராக அங்கீகரிக்கப்பட்டார். 2. ஒரு பிரிட்டிஷ் ரெசிடெண்டு காபூலில் வசிக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 3. கைபர் கணவாயைப் பிரிட்டிஷ்காரர் பாதுகாத்துக் கொள்வது என்றும் ஏற்பாடாயிற்று. 4. எல்லைப்புற ஜில்லாக்களாகிய சிபி, குராம், பிஷின் இவைகள் ஆங்கிலேயரிடம் விடப்பட்டன. 5. ஆப்கானிஸ்தானம் ருஷியாவுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது.

மூன்ருவது ஆப்கானிய யுத்தம் :—காண்டமாக் உடன்படிக்கை நிரந்தரமான சமாதானத்தை உண்டாக்கவில்லை. காபூலில் பிரிட்டிஷ் ரெசிடெண்டு வசிப்பதை ஆப்கானிய ஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் யுத்தம் முடிந்து பிரிட்டிஷ் சேனைகள் திரும்பியபிறகு ஆப்கானியர், பிரிட்டிஷ் ரெசிடெண்டைத் தாக்கிக் கொன்றுவிட்டனர். முன்போலவே மறுபடியும் ஆப்கானியரை அடக்கிப்பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று பிரிட்டிஷ்காரர் கிளம்பினர். சேனபதி லார்ட் ராபர்ட்ஸ் காபூலைக்கைப்பற்றி யாகுப் கானைக் கைது செய்து இந்தியாவுக் கனுப்பினர். பிறகு காண்டஹாரை ஜெயித்து ஆப்கானியரைத் தோற்கடித்தார்.

1880-ல் வைசிராய் லார்டு லிட்டன் சமாதானஞ் செய்துகொண்டார். டாஸ்ட் மகமதுவின் பேரனுராகிய அப்துர் ரஹிமான் ஆப்கன் அரசராக முடிசூட்டப்பட்டார். அப்துர் ரஹிமானுக்கு விரோதிகள் ஏற்பட்டால் பிரிட்டிஷ் சர்க்கார் உதவி செய்வதாக உறுதிமொழி யளித்தார்கள். பிரிட்டிஷ் சேனைகள் எல்லாம் காபூலை விட்டுத் திரும்பின.

1876-ல் லார்டு லிட்டன் குவெட்டாவைப் பிடித்துக் கொண்டதன் பலனுக அது வடமேற்கு எல்லைப்புறத்தில் ஒரு சிறந்த ராணுவ ஸ்தலமாக ஏற்பட்டது. குவெட்டா நகர் 1935-ல் ஏற்பட்ட ஓர் பெரிய பூகம்பத்தினுல் மிக்க சேதப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

பலுசிஸ்தானத்து அரசராகிய கான் பிரிட்டிஷ் பாது காப்பில் அடங்கிய சிற்றரசர் ஆனுர்.

காலக்கிரமத்தில் கைபர் கணவா யருகிலும், இன்னும் எல்லைப்புறத்தில் முக்கியமான மற்ற இடங்களிலும் பட்டாளங்கள் நிறுத்தப்பட்டன. இந்தப் பாகம் தற்காலம் வடமேற் கெல்லை மாகாணம் எனப்படும்.

---

30 உள் நாட்டு விஷயங்கள்

6. லார்டு லிட்டன்(1876—1880):—1877-ல் விக்டோரியா மகாராணி இந்தியா சக்கரவர்த்தினி யென்று பட்டம் தரித்தார். வைசிராய் தர்பார் நடத்தி இந்திய மன்னர்களை யழைத்துச் சக்கரவர்த்தினியின் செய்தியை விளம்பரப் படுத்தினுர். இதுவே முதலாவது டில்லி தர்பார். சர்க்காருக்கு விரோதமாக எதையும் பிரசுரம் செய்வதில்லை யென்று எழுதிக்கொடுத்த பின்புதான் இந்தியப் பத்திரிகைகளை அச்சிட அனுமதி கொடுக்கப்படு

மென்று லிட்டன் 1878-ல் ஒரு சட்டம் இயற்றினர். இதை இந்தியர்கள் விரும்பாமல் இச்சட்டத்தைக் "கறுப்புச் சட்டம்" என்று கூறினர்கள். மேலும் சர்க்காரிடமிருந்து அனுமதி (லைசென்ஸ்) பெறமல் யுத்தக் கருவிகளை இந்தியர்கள் வைத்திருக்கக் கூடாதென்றும் ஒரு சட்டஞ் செய்தார்.

தாது வருஷப் பஞ்சம் (1876):—தென்னிந்தியாவில் தாது வருஷத்தில் கொடிய பஞ்சம் உண்டாகியது. சென்னை, பம்பாய், மைசூர், ஹைதராபாத் முதலிய எல்லாப் பாகங்களிலும் இந்தப் பஞ்சத்தினல் ஜனங்கள் வெகுவாக வருந்தினர்கள்.

பஞ்ச ஏற்பாடுகளைப்பற்றிச் சட்டம்:—இந்தியாவில் பஞ்சம அடிக்கடி நேருவதன் காரணங்களையும், பஞ்சம் வ்ந்தால் செய்யவேண்டிய வேலைகளையும் விசாரணை செய்ய லிட்டன் பிரபு ஒரு கமிஷன் நியமித்தார். பஞ்சகாலத்தில் திடசரீரிகளுக்குத் தகுந்த வேலை கொடுத்துச் சர்க்கார் கூலி கொடுக்கவேண்டும் என்றும், வேலைசெய்ய முடியாத விருத்தாப்பியருக்கும் குழைந்தைகளுக்கும் இலவச ஆகாரம் கிடைக்கும்படி சர்க்கார் செய்யவேண்டும் என்றும், இவர்கள் அபிப்பிராயப்பட்டனர். பஞ்சம் ஏற்படக்கூடிய பிரதேசங்களுக்கு உணவுப் பொருள்கள் சுலபமாகப் போய்ச் சேருமாறு, ரயில்வேக்களும் கால்வாய்களும் உண்டாக்கப்பட்டன. சென்னையில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் இக் காலத்தில்தான் வெட்டப்பட்டது.

இந்தியன் சிவில் சர்விஸ் போட்டிப் பரீட்சை:—1879-ல் இந்திய சர்க்காரில் உத்தியோக பதவிகள் பெறுவதற்கு இந்தியர்களும் அருகர்களாக அனுமதிக்கப்பட்டனர். உத்தியோகஸ்தர்களைப் பொறுக்கி யெடுக்க லண்டனில்

போட்டிப் பரீட்சை ஏற்படுத்தப்பட்டது. தற்காலம் இந்த இந்தியன் சிவில் சர்விஸ் (I. C. S.) போட்டிப் பரீட்சை லண்டன், டில்லி இவ்விரண்டு இடங்களிலும் நடைபெறுகிறது.

7. லார்டு ரிப்பன் (1880—1884):—இவர் கத்தோலிக் கிறிஸ்துவ மதத்தினர். இந்திய மக்களிடம் உண்மையில் அன்பு காட்டிப் பல அரிய நன்மைகள் செய்ததால் ரிப்பன் பிரபு இந்தியர்களால் மிகவும் போற்றப்படும் வைசிராய் ஆனார். 1. இந்திய பாஷைகளில் பத்திரிகைகளும், புத்தகங்களும் தாராளமாக விருத்தியாக ரிப்பன் வசதிகள் செய்து கொடுத்தார். 2. ஜில்லா போர்டு, முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களை முதன் முதல் ஏற்படுத்தினர். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்தசபைகளில் மெம்பர்களாக இருந்துஸ்தல ஆட்சிசெய்யலாயினர். 3. அடிக்கடிநிலவரிவசூல்திட்டத்தை மாற்றுவதால் குடிகளுக்கு வெகு கஷ்டம் உண்டாவதை அறிந்த வைசிராய் ரிப்பன் ஒரு தடவை வரி செட்டில்மெண்டு செய்தால் அந்தத் தீர்வையே சில வருஷங்களுக்கு அநுஷ்டிக்கவேண்டுமென்று திட்டம் செய்தார். 4. ஜனங்களுக்கு ஆரம்பக் கல்வி யபிவிருத்தி அடைய லார்டு ரிப்பன் வெகுவாக உதவி செய்தார். எலிமெண்டரி பாடசாலைகளுக்குச் சர்க்கார் கிராண்டு அளிக்கவும் ஏற்பாடு செய்தார். 5. உப்புவரியைக்குறைத்தார். 6.இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களை யளித்தார்.


லார்டு ரிப்பன்

7. 1831-ல் நீக்கப்பட்ட இராஜாவின் தத்துப் புத்திரருக்கு மைசூரைத் திருப்பி யளித்து அவரை மைசூர் மன்னராக்கினுர். இந்த வமிசத்தினரே இப்பொழுதும் மைசூரை ஆளுகின்றனர்.

8. லார்டு டப்ரின் (1884—1888):—பர்மா தேசத்தில் தீபா அரசர் பல அட்டூழியங்களைச் செய்துவந்தார். பர்மாவிலிருந்த பிரிட்டிஷ் ஜனங்களைக் கஷ்டப்படுத்தினுர். பிரிட்டிஷாருக்கு விரோதமாக அவர் சதியாலோசனைசெய்வதாகவும் தெரியவந்தது. உடனே அவரை அடக்கப் பிரிட்டிஷ் சேனைகளை வைசிராய் அனுப்பினுர். மாண்டலே நகரம் பிடிக்கப்பட்டது. தீபா அரசரை நீக்கிவிட்டு பிரிட்டிஷ் இந்தியாவுடன் பர்மா தேசமும் சேர்க்கப்பட்டது. பர்மா முழுவதும் ஒரு மாகாணமாக அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகு பர்மாவில் அமைதியும் வியாபாரமும் அதிகரித்தன. ரங்கூனிலிருந்து இருப்புப்பாதைகள் போடப்பட்டன. இந்த மூன்ருவது பர்மா யுத்தத்தைப்பற்றி முந்திய பாடத்தில் கூறப்பட்டது.

இந்தியா காங்கிரஸ் சபை:—1885-ல் A. O. ஹியூம் என்னும் இங்கிலீஷ்காரர் முயற்சியினுல் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் அமைக்கப்பட்டது. தேச ஆட்சி விஷயத்தில் இந்தியர்களுக்கும் சமபாகம் வேண்டுமென்று அச்சபையார் விரும்பினுர்கள். 1885-லிருந்து பிரதி வருஷமும் காங்கிரஸ் சபை கூடுவது வழக்கமாயிற்று.

விக்டோரியா மகாராணி ஆட்சியின் பொன் விழா (Golden Jubilee):—விக்டோரியாமகாராணியார்முடிசூட்டிக்கொண்டு 50 வருஷங்கள் 1887-ல் ஆனதால் அவரது ஆட்சியின் பொன்விழாக் கொண்டாட்டம் இந்தியா முழுவதும் நடைபெற்றது.

டப்ரின் சீமாட்டி நிதி:—டப்ரின் பிரபுவின் மனைவியார் இந்திய மாதருக்கு வைத்திய வசதி யளிக்கும் பொருட்டுப் பணத்தொகை சேகரித்து ஒரு நிதி ஏற்படுத்தினர். அதிலிருந்து பெண்களுக்கான வைத்தியசாலைகள் பல இடங்களில் நடைபெறுகின்றன.

9. லார்டுலான்ஸ்டௌன்(1888-1894):--வைசிராய்க்கு உதவியான சட்டநிரூபண சபையில் மெம்பர்கள்தொகை அதிகமாக்கப்பட்டது. இந்திய ஜனப்பிரதிநிதிகள் மெம்பர்களாக அனுமதிக்கப்பட்டனர். இவர் ஆப்கன் மன்னர் அப்துர் ரஹிமானிடம், ஸர்மார்டிமர்டூரேண்ட் என்பவரைத் தூதனுப்பினர். ஆப்கானிஸ்தானத்தில் கிழக்கு தெற்கு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு டூரேண்ட் எல்லை என்று பெயர் பெற்றன.

10. இரண்டாவது எல்ஜின் பிரபு (1894-1899):—இவர் முதலாவது எல்ஜின் பிரபுவின் புதல்வர். இவர் காலத்தில் வடமேற்கு எல்லைப்புற சம்பந்தமான சில தகராறுகள் நிகழ்ந்தன. பஞ்சங்களும், பம்பாயில் கொள்ளை (பிளேக்) நோயும் ஏற்பட்டன.

கர்ஸன் பிரபு

11. கர்ஸன் பிரபு:—அவருக்குப் பின்வந்தகர்ஸன் பிரபு (1899—1905) பிரபலமான வைஸிராய்களுள் ஒருவர். பேச்சு வன்மையும், ராஜரீக தந்திரமும், பல நாடுகளில் பிரயாணம் செய்ததாலுண்டான விசால அறிவும், தன் மதிப்பும் அவருக்குக் கீர்த்தியளித்தன. அவர் காலத்தில் முக்கியமான பல மாறுதல்கள் ஏற்பட்டன. இவர் காலத்தில் 1897-ல் விக்டோரியா ராணியாரது ஆட்சியின் 60-ம் ஆண்டு வைர விழா (Diamond Jubilee) கொண்டாடப்பட்டது.

டில்லி தர்பார் II :—1901-ல் விக்டோரியா மகாராணியார் உயிர் நீத்தார். ஏழாவது எட்வர்ட் அரசரானார். 1903-ல் டில்லியில் ஒரு பெரிய தர்பார் நடத்திக் கர்ஸன் பிரபு ஏழாவது எட்வர்டை இந்தியச் சக்கரவர்த்தி என்று விளம்பரப்படுத்தினார். விக்டோரியாவின் ஞாபகார்த்தமாக கல்கத்தாவில் விக்டோரியா மெமோரியல் ஹால் என்ற கட்டடம் அமைக்கப் பட்டது.

ஏழாவது எட்வர்ட்

வடமேற்கு எல்லைப்புற விஷயம்:—எல்லைக் கூட்டத்தாரின் நடவடிக்கைகளைச் சரிவரக் கவனிக்கவும், எல்லைப் புறத்தைப் பத்திரப்படுத்தவும், எல்லைப்புற நாடுகளைப் பஞ்சாப் மாகாணத்தினின்றும் பிரித்து அவற்றை வடமேற்கு எல்லைப்புற மாகாணம் என்று தனியாகச் செய்து ஒரு கமிஷனரின் ஆளுகைக்குட்படுத்தினார். இப்பொழுது அம் மாகாணம் கவர்னர் ஒருவரால் ஆளப்படுகிறது.

சர்வ கலாசாலைச் சீர்திருத்தம் :—உயர்தரக் கல்வியைச் சிறப்புப்பெறச் செய்யும் நோக்கத்துடன் கர்ஸன் ஒரு கமிஷனை நியமித்து அதன் யோசனைப்படி சர்வ கலாசாலைச் சட்டத்தை இயற்றினார் (1904). கலாசாலைகளை அடிக்கடி அதிகாரிகள் பார்வையிட வேண்டுமென்று விதித்தும், சர்வ கலாசாலைச் சபைகளைத் திருத்தி யமைத்தும், பரீக்ஷை நடத்துவதுடன் நல்ல முறையைக் கையாடிப் போதனை செய்யவேண்டுமென்றும் திட்டங்கள் செய்யப்பட்டன.

புராதனக் கட்டடங்களின் பாதுகாப்பு:—புராதனக் கட்டடங்களையும் கோயில்களையும் பாதுகாக்கும் பொருட்டு சட்டமொன்றைக் (1904) கர்ஸன் பிரபு இயற்றினர். இது அவர் இந்தியாவுக்குச் செய்த நிரந்தரமான நன்மையாகும். பல அரசர்கள் பழைய காலங்களில் மகத்தான கட்டடங்களையும், கோயில்களையும், ஸ்தூபிகளையும், ஞாபகச் சின்னங்களையும் கட்டி வைத்தனர். இவை யாவும் தேசத்திற்கு மதிப்பைத் தரும் பொக்கிஷங்களாகக் கருதப்பட வேண்டும். மேலும் புராதன இந்திய சரித்திர ஆராய்ச்சிக்கு இவை பெரும் உதவியளிக்கும். ஆனால் இப்பழைய கட்டடங்களை எவரும் சரிவரக் கவனிக்காதபடியால் காலக்கிரமத்தில் அவை அழிந்து போய் வந்தன. கர்ஸன் பிரபுவின் கால முதல் சர்க்கார் செலவில் அவைகளை அப்பொழுதுக்கப்பொழுது பழுது பார்க்கஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விவசாய இலாகா:—இந்திய விவசாயிகளுக்கும் அவர் அநேக நன்மைகள் செய்தார். அகில இந்திய விவசாய இலாகா (Imperial Agricultural Department) ஒன்றை அவர் ஏற்படுத்தினர். விவசாயிகள் நூதன முறைகளில் விவசாயம் செய்யுமாறு போதிப்பது இந்த இலாகாவின் வேலை. சிறு நகரங்களிலுங்கூட நாம் இப்பொழுதும் விவசாய அதிகாரி ஒருவர் விவசாயிகளுக்குப் புதுமாதிரியான கருவிகள், எருக்கள், விதைகள் முதலியவற்றைப் பற்றிப் போதிப்பதைக் காண்கிறோம்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள்:—இவர் காலத்தில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்பட்டன.

வங்காளப் பிரிவினை:—கம்பெனியார் வங்காளத்தில் தமது இராஜ்ஜியத்தை ஸ்தாபித்த பிறகு, துரைத்தனத்

தின் தலைநகரமாக கல்கத்தா இருந்து வந்தது. சென்னை, பம்பாய் இரு மாகாணங்களுக்கும் கவர்னர்கள் இருந்து வந்தனர். வங்காளத்தைக் கவர்னர்-ஜனரல் நேரில் ஆண்டுவந்தார். ஆனால் வங்காள மாகாணம் மிகவும் பெரியதா யிருந்ததாலும், ஜனத்தொகை அதிகமா யிருந்த தாலும் ஒரு உப-கவர்னரால் அதன் நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியவில்லை என்றும், கீழ் வங்காளம் கொஞ்சமும் அபிவிருத்தி யடையாமல் இருந்ததென்றும் உணர்ந்த கர்ஸன் பிரபு வங்காளத்தை இரண்டாகப் பிரித்துக் கீழ் வங்காளத்தை ஒரு புதிய மாகாணமாகச் செய்ய நிச்சயித் தார் (1905). ஆனால் இது வங்காள மக்களுக்குப் பிடிக்க வில்லை. தமது மாகாணத்தில் அவர்களுக்கு எப்பொழு தும் பற்று அதிகம். வங்காளத்தை இரண்டாகப் பிரிப்ப தால் தங்களுடைய ஒற்றுமை குறைவுபடும் என்று எண்ணி அவர்கள் பிரிவினையை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி செய் தனர். ஆனால் கர்ஸன் பிரபு தம்முடைய தீர்மானத்தை மாற்றமுடியாதென்று கூறிவிட்டார்.

துரைத்தன சம்பந்தமான சீர்திருத்தங்கள் :— கர்ஸன் பிரபு துரைத்தன சம்பந்தமான மற்றும் பல சீர்திருத் தங்களையும் செய்தார். வியாபாரம்-கைத்தொழில் இலாகா (Department of Commerce and Industry) ஒன்றை ஏற்படுத்தினர். வியாபாரிகளுக்கு வேண்டிய சௌகரியத்தை அந்த இலாகா அளித்து வருகிறது. புதிய இருப்புப்பாதைகள் (சுமார் 6000 மைல் நீளம் வரை) போடப்பட்டன. இதனால் பொருளாதாரத்துறையில் அபி விருத்தி ஏற்பட்டது. நீர்ப்பாசன கால்வாய்களை வெட்டச் செய்தார். போலீஸ் இலாகா நன்றாக வேலை செய்ய ஏற்

பாடுகளையும் பண்ணினர். உப்பு வரியும், வருமான வரியும் குறைந்ததால் ஏழை மக்களுக்குச் சௌகரியமுண்டா யிற்று. 1905-ல் சேனபதி கிச்சனர் பிரபுவின் அந்தஸ்து சம்பந்தமாகக் கர்ஸன் பிரபுவுக்கும் பிரிட்டிஷ் துரைத் தனத்தாருக்கும் அபிப்பிராய பேத மேற்பட்டதால், அவர் வேலையை ராஜீநாமா செய்தார்.

12. இரண்டாவது மிண்டோ பிரபு (1905—1910) :—

மிண்டோ பிரபு II

1906-ம் வருஷம் ஜார்ஜ் இளவரசர் இந்தியாவில் பிரயாணம் செய்து இந்திய ஜனங்களையும் இந்திய மன்னர்களையும் நேரில் பார்த்து விட்டுச் சென்றார். மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள் மூலம் இந்தியர்களுக்குச் சில அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டன. 1909-ம் வருஷம் சட்ட சபைகள் சீர் திருத்தி அமைக்கப்பட்டன. அதிக இந்தியர்களுக்கு மெம்பர்கள் பதவி கிடைத்தது.

13. லார்டு ஹார்டிஞ்சு II (1910—1916):—ஏழாம் எட்வர்ட் இறந்த பிறகு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்டத்துக்கு வந்தார். 1911-ம் வருஷம் ஜார்ஜ் மன்னர் டில்லி நகரத்தில் இந்தியச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டார். இது டில்லி தர்பார் III. அச்சமயம் ஜனங்கள் விருப்பத்துக் கிணங்க வங்காள மாகாணத்தை மறுபடியும் ஒன்றுக்கி விளம்பரப்படுத்தினர். பீஹாரும் அஸ்ஸாமும் இரண்டு தனி மாகாணங்கள் ஆயின. இந்தியாவின் புராதனத் தலைநகராகிய

டில்லி இந்தியாவின் பிரதான நகர் ஆயிற்று. கல்கத்தாவில் வசித்த வைசிராய் டில்லியில் வசிக்கத் தொடங்கினார்.

ஐந்தாம் ஜார்ஜ்

1914-ம் வருஷம் ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தையும் இங்கிலீஷ்காரருடைய வியாபார ஆதிக்கத்தையும் தொலைத்துவிடவேண்டும் என்று ஜெர்மானியர் பாடுபட்டனர். பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திலுள்ள எல்லாத் தேசங்களும் ஏகமனதாகப் பொருளும் சேனையும் திரட்டிக்கொண்டு வந்தன. இந்தியாவிலிருந்தும் ஏராளமான சேனைகள் பிரிட்டிஷாருக்கு உதவியாகச் சென்றன. 1914-ம் வருஷம் யுத்தம் ஆரம்பித்த சமயம் "எம்டன்" என்ற ஜர்மன் கப்பல் சென்னைப் பட்டணத்துக் கருகே வந்து இம்சை செய்தது. ஆனால் அக்கப்பல் பிறகு கைப்பற்றப்பட்டது. நான்கு வருஷங்கள் யுத்தம் கடுமையாக நடந்தது. கடைசியில் ஜெர்மானியர் தோல்வியடைந்தனர். இந்தியாவின் மகத்தான பொருள் உதவியையும் சேனை உதவியையும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வெகுவாகச் சிலாகித்தனர். பிரிட்டிஷ் சாம்


இந்தியா 1912
ஆப்கனிஸ்தானம்
காஷ்மீர்
பஞ்சாப்
திபேத்து
பலுசிஸ்தானம்
ராஜபுதனம்
நேபாளம்
பூடான்
சிந்து
இந்தியா
பீஹார்
வங்காளம்
ஒரிஸா
பர்மா
மத்திய மாகாணங்கள்
பேரார்
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்
நிஜாம் இராஜ்யம்
மைசூர்
சென்னை

ராஜ்ஜியத்தில் உள்ள தென் ஆப்பிரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளைப்போல இந்தியாவுக்கும் சம உரிமைகளும் அந்தஸ்தும் கொடுக்கவேண்டும் என்பதே பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நோக்கம் என்று விளம்பரம் செய்யப்பட்டது.

14. லார்டு செம்ஸ்போர்ட் (1916—1921):—இந்திய ஆட்சியில் ஜனங்களுக்கு அதிகச் சுதந்திரம் கொடுக்கும் நோக்கத்துடன் வைசிராய் செம்ஸ்போர்டும் இந்தியா மந்திரி மாண்டேகுவும் ஒரு திட்டம் தயாரித்தார்கள். இதற்கு மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் என்று பெயர். 1919-ம்

மாண்டேகு

செம்ஸ்போர்ட்

வருஷம் இந்தச் சீர்திருத்தம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. சக்கரவர்த்தியின் அனுமதியும் கொடுக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தப்படி 1920-ல் புதிய சட்ட சபைகள் கூட்டப்பட்டன. மாகாண ஆட்சியில் சில இலாகாக்கள் இந்திய மந்திரிகளின் பொறுப்பில் விடப்பட்டன. சட்ட சபை மெம்பர்களான ஜனப்பிரதி

நிதிகள் கட்சியில் அதிகச் சாய்கால் உள்ள தலைவர்களையே மந்திரிகளாக மாகாண கவர்னர் நியமிப்பது வழக்கம். மாகாண ஆட்சியில் ஒரு பாதி இந்திய மந்திரிகள் பொறுப்பில் கொடுக்கப்பட்டது; இன்னொரு பாதி கவர்னர் நிர்வாக சபை மெம்பர்கள் அதிகாரத்திலேயே இருக்கலாயிற்று. ஆதலால் இதுவும் ஒருவித இரட்டை ஆட்சி ஆகும்.

15. லார்டு ரீடிங் (1921—1927):—1919-ம் வருஷ ஏற்பட்ட புதிய ஆட்சி முறையில் முழு சுயஆட்சி இந்தியர்களுக்குக் கிடைக்கவில்லை யென்று சில ஜனங்கள் அதிருப்தி அடைந்தார்கள். சில இந்தியப் பிரமுகர்கள் சட்ட சபைகளால் பிரயோசனமில்லை யென்றும் அவைகளை ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும் சொன்னார்கள். இவர்களின் தலைவர் மகாத்மா காந்தி இந்திய ஜனங்களின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களது விருப்பங்களுக்குப் பிரிட்டிஷார் இணங்கவேண்டும் என்று அவர் வெகு பாடுபட்டார். வேறு பல இந்தியப் பிரமுகர்கள் சட்ட சபையில் நுழைந்து தேச ஆட்சியைச் சீர்திருத்தலாமென்று கருதினார்கள்.

மகாத்மா காந்தி

1921-ல் மேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசராகிய எட்வர்ட் இந்தியாவுக்கு விசயம் செய்தார்.

16. லார்டு இர்வின் (1926—1931) :—இந்தியாது நன்மைக்காகப் பல விதங்களில் இவர் பாடுபட்டார். 1919-ல் ஏற்பட்ட சட்டத்தில்படிப்படியாக இந்திய சுய ஆட்சி ஏற்படவேண் டுமென்றும், 1919-ல் முதல்படி அமைந்த பிறகு பத்து வருஷங்க ளானவுடன் பிரிட்டிஷ் பார்லி மெண்டு கமிட்டியினர் சீர்திருத்த முறையைப் பரிசீலனை செய்து இரண்டாவது படியாக என்ன ஏற்பாடு செய்யலாம் என்று தீர்மானிக்க வேண்டும் என்றும் கண்டிருந்தது. அதற் கேற்ப 1929-ம் வருஷம் சில பிரிட்டிஷ் பிரமுகர்களை சக்கர வர்த்தி இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அவர்கள் இந்தி யாவில் பிரயாணம் செய்து பலருடன் கலந்து யோசித்து ஒரு யாதாஸ்து தயார் செய்து அனுப்பினர். சீர்திருத்த முறையைப்பற்றிப் பிரிட்டிஷ் மந்திரிகளுடன் கலந்து யோசிக்கும் பொருட்டு லண்டனில் வட்ட மேஜை மகா நாடு கூட்டப்பட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் சில இந்தியப் பிரமுகர்களையும் லண்டனுக்கு அழைத்தனர். அவர்கள் லண்டன் சென்று திரும்பினர்.

லார்டு இர்வின்

17. லார்டு வில்லிங்டன் (1931—1936):—சீர்திருத்த முறைகளைப்பற்றி இந்தியப் பிரமுகர்களும் பிரிட்டிஷ் மந்திரிகளும் கலந்து பேசுவதற்காக மற்றுமொருதரம் லண்டனில் சபை கூட்டினர். பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டியார் 1934-ல் இந்திய அரசியல் சீர்திருத்த சம்பந்த

மாக ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதை யொட்டி பார்லிமெண்டில் 1935-ல் ஒரு புதிய இந்தியச் சட்டம் நிறைவேறிற்று.



லார்டு வில்லிங்டன்

பீகார் பூகம்பம், குவெட்டா பூகம்பம் இவை நிகழ்ந்தன. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டிக்கொண்டு 25 வருஷங்கள் ஆனதுபற்றி அவரது ஆட்சியின் வெள்ளிவிழா (Silver Jubilee) நாடெங்கும் 1935-ம்வருஷம்மே மாதத்தில்கொண்டாடப்பட்டது.

1936 ஜனவரி 20-ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் காலஞ் சென்றார். உடனே அவரது மூத்த புதல்வர் எட்டாம் எட்வர்ட் மன்னரானார்.

18. லார்டு லின்லித்கோ :—1936 ஏப்பிரல் முதல் இவர் வைசிராய். புதிய இந்தியச் சட்டப் பிரகாரம் இந்திய

லார்டு லின்லித்கோ

அரசியல் அமைப்பு இவர் காலத்தில்ஏற்பட்டு அதிகநன்மை விளையும்.

இராஜப்பிரதிநிதிகளின் கால அளவுப்படம் I

[ஸ்கேல் 3 மி.மி = 1 வருஷம்]

1858	கானிங் பிரபு	விக்டோரியா ராணியார் மகா சாஸனம் ஹைகோர்டு, சர்வகலாசாலை இந்திய சபை சட்டம் 1861
1862	எல்ஜின் I	
1864	லாரென்ஸ்	பூடான் யுத்தம் 1864
1869	மேயோ	ஜனக்கணக்கு, (சென்ஸஸ்)
1872	நார்த்புருக்	வங்காளத்தில் பஞ்சம்
1876	லிட்டன்	தாது வருஷப் பஞ்சம் டில்லி தர்பார் I (1877) ஆப்கன் யுத்தம் II, III (1878-81)
1880	ரிப்பன்	ஸ்தல சுய ஆட்சிச் சட்டம்
1884	டப்ரின்	பர்மா யுத்தம் III (1885) காங்கிரஸ் சபை அமைப்பு 1885
1888	லான்ஸ்டௌன்	

தொடர்ச்சி II

ஆண்டு		
1894–1899	எல்ஜின் II	பம்பாயில் பிளேக்
1899–1905	கர்ஸன்	வடமேற்கு மகாண அமைப்பு விக்டோரியா ராணி காலஞ்சென்றது எட்வர்ட் VII சக்கரவர்த்தியாதல் வங்காளப் பிரிவினை டில்லி தர்பார் II
1905–1910	மிண்டோ II	மிண்டோ மார்லி சீர்திருத்தம் ஜார்ஜ் இளவரசின் விஜயம் 1906
1910–1916	ஹார்டிஞ்சு II	ஜார்ஜ் V முடிசூடுதல், டில்லி தர்பார் III டில்லி தலை நகரம் வங்காளப் பிரிவினை மாறியது ஜெர்மன் போர் 1914-18
1916–1921	செம்ஸ் போர்டு	மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தம்
1921–1926	ரீடிங்	வேல்ஸ் இளவரசர் விஜயம் 1921 காந்தியின் ஒத்துழையாமை
1926–1931	இர்வின்	சைமன் கமிஷன் வட்டமேஜை மகாநாடு
1931–1936	வில்லிங்டன்	பீஹார், குவெட்டா பூகம்பங்கள் இத்திய அரசியல் சீர்திருத்தங்கள் 1935 ஐந்தாம் ஜார்ஜின் வெள்ளிவிழா 1935
1936–	வின்லித்கோ	

ஐந்தாம் ஜார்ஜ் 1936 ஜனவரியில் காலஞ்சென்றார். உடனே எட்டாம் எட்வர்ட் மன்னரானார்.

31. இந்திய இராஜ்ஜியங்கள்

பொதுவிபரம்:—இந்தியாவில் பெரும்பாகம் பிரிட்டிஷ் நேர் ஆட்சியில் அடங்கியது. ஆனால் சுமார் மூன்றில் ஒரு பாகம் இந்திய அரசர்களால் ஆளப்படும் இராஜ்ஜியங்களாம். இந்த அரசர்கள் எல்லோரும் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக் கடங்கியவர்கள்.

ஐதராபாத், மைசூர், காச்மீர், பரோடா, திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை முதலிய பெரியதும் சிறியதுமான எழு நூறு இந்திய இராஜ்ஜியங்கள் இருக்கின்றன. இதுவரையில் படித்த பாடங்களிலிருந்து பிரிட்டிஷ் கம்பெனியாருடன் எவ்விதம் இந்திய மன்னர்கள் உடன்படிக்கைகள் செய்துகொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேர்ந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

1858-ம் ௵ மகாராணி விளம்பரம் செய்தது இந்திய மன்னர்களுக்குப் பெரிய ஆறுதலை யளித்தது. இந்திய மன்னர்களை நீக்குவதும், பிரிட்டிஷ் இந்தியாவின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்துவதும் தமது நோக்கம் அல்ல என்றும், அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதும் உடன்படிக்கைள் பிரகாரம் நடப்பதுந்தான் தமது நோக்கம் என்றும் மகாராணியால் தெரிவிக்கப்பட்டது. சந்ததி இல்லாவிடில் சுவீகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்றும் உறுதி கூறப்பட்டது.

மூன்றுவகை இந்திய இராஜ்ஜியங்கள்:—1. இராஜப் பிரதிநிதியின் நேர்ப்பார்வையிலுள்ளன ஐந்து. (உ-ம்) நேபாளம், ஹைதராபாத், மைசூர், பரோடா, காச்மீரம். 2. கவர்னர்-ஜனரலின் ஏஜண்டுகளின் மேற்பார்வையில் உள்ளது 170. இவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு (a) மத்திய இந்தியா ஏஜன்ஸி, (b) இராஜபுதனம் ஏஜன்ஸி,

(c) பலுசிஸ்தானம் ஏஜன்ஸி, இவைகட்கான மூன்று ஏஜண்டுகள் இருக்கிறார்கள். 3. மாகாண கவர்னரின் (தலைவர்) கீழ் உள்ளன. (உ-ம்.) திருவாங்கூர், கொச்சி, புதுக் கோட்டை முதலிய 5 இராஜ்ஜியங்கள் சென்னை கவர்னரின் பார்வையில் உள்ளன.

இந்திய மன்னர்களின் சர்வாதிகாரம்:—ஒவ்வொரு இந்திய அரசருக்கும் தமது இராஜ்ஜியத்தில் சட்டங்கள் ஏற் படுத்தவும், நாணயங்கள் அச்சிடவும், வரிகள் விதிக்கவும், மற்றும் உள்நாட்டு விஷயங்களில் இஷ்டப்படி அரசாளவும் சர்வாதிகாரம் உண்டு.

நிபந்தனைகள் :—இந்திய மன்னர்கள் வெளிநாட்டா ருடன் எவ்வித இராஜீக சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. தேச பாதுகாப்புக்காகவும், அமைதிக்காகவும் பிரிட்டிஷ் துருப்புகள் முக்கியவிடங்களில் இருக்கின்றன. ஒவ்வொரு பெரிய இராஜ்ஜியங்களிலும் (சிறிய இராஜ்ஜியத் தொகுதிகளிலும்) இந்திய மன்னர்களுக்கு ஆலோசனை சொல்ல ஒரு பிரிட்டிஷ் ரேசிடேண்டு உண்டு. மன்னர்கள் சரிவர ஆட்சி செய்யாமல் ஊழல்கள் ஏற்பட்டால் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் பிரவேசித்துச் சீர் செய்யலாம். தபால் தந்தி முதலியன பொதுவாக ஆங்கில ஆட்சிக்குட்பட்டன.

அதிகாரிகளும் சபைகளும்:—ஒவ்வொரு சமஸ் தானத்திலும் திவானும் மற்ற உத்தியோகஸ்தர்களும் உண்டு. மைசூர், திருவாங்கூர் முதலிய இராஜ்ஜியங்களில் ஜனப்பிரதிநிதிகள் உள்ள சபைகள் அமைக்கப்பட்டுள.

இந்திய மன்னர் சபை (Chamber of Indian Princes):—இந்திய மன்னர்கள் ஒன்றுகூடி பொது விஷயங் களை வைசிராயுடன் கலந்து ஆலோசிக்க அனுகூலமாக இந்திய மன்னர் சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய சமஷ்டி (Indian Federation) :—புதிய அரசியல் அமைப்பில் இந்திய இராஜ்ஜியப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் இந்தியாப் பிரதிநிதிகளுடன் இந்திய சட்டசபையில் உட்காரலாம். சுய ஆட்சி பெற்றுள்ள பல மாகாணப் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து இநதியாமுழுமைக்கும்பொதுவான ஆட்சி நடத்துவது சமஷ்டி ஆட்சி எனப்படும். இந்திய சகஷ்டியில் இந்திய இராஜ்ஜியங்களும் அங்கத்தினராகலாம்.

---

32. பிரிட்டிஷ் இந்தியாவில் ஆட்சிமுறை

பிரிட்டிஷ் இந்திய துரைத்தனத்தைமூன்று பிரிவாகப் பிரிப்பது வழக்கம். (1) இந்தியா சம்பந்தமாக இங்கிலாந்திலுள்ள துரைத்தனம் (ஹோம் கவர்ன்மெண்டு), (2) மத்திய அரசாங்கம் அல்லது இந்திய கவர்ன்மெண்டு, (3) மாகாணத் துரைத்தனம். இந்த அரசியல் அமைப்பு 1919-ம் வருஷத்திய சட்டத்தின்படி நடைபெறுகிறது.

I. இந்தியா சம்பந்தமாக இங்கிலாந்திலுள்ள துரைத்தனம் (ஹோம் கவர்ன்மேண்ட்)

1. இங்கிலாந்து அரசராகிய நமது மாட்சிமை தங்கிய சக்கரவர்த்திக்கும் இங்கிலீஷ் பார்லிமேண்டின் இரண்டு சபைகளுக்கும் இந்திய அரசியல் விஷயங்களில் சர்வாதிகாரமுண்டு.

2. இந்தியா மந்திரி அல்லது இந்திய அரசாங்கக் காரியதரிசி (Secretary of State for India) :—இவர் பார்லிமெண்டு சபையின் அங்கத்தினர். இங்கிலாந்தின் பிரதான மந்திரிக்கு ஜவாப்தாரி ஆவர். அச்சபையின் சார்பாக இவரே இந்தியாவைப்பற்றிய சகல விஷயங்களுக்கும் அதிகாரமுள்ளவராவர். இந்தியாவைஆளும்இராஜப்பிரதிநிதியும்

மாகாண கவர்னர்களும் கால காலங்களில் எவ்வாறுநடந்து கொள்ளவேண்டுமென்று உத்தரவளிக்க இவருக்கு அதிகாரமுண்டு. வருஷ மொரு முறை பார்லிமெண்டுக்கு இந்தியாவைப்பற்றி யாதாஸ்து (Report)ஒன்று தயாரித்து வாசிக்கவேண்டியது. பார்லிமெண்டு அங்கத்தினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இவர் பதில் சொல்லும் கடமையுடையவர்.

3. இந்தியக் காரியதரிசிக்கு ஆலோசனை சொல்லவும், பரிபாலனத்திற்கு உதவிகள்புரியவும் 'இந்தியா கௌன்சில்' என்ற சபை யொன்றிருக்கிறது. அதன் மெம்பர்கள் யாவரும் இந்திய விஷயங்களில் அனுபவம் பெற்றவர்கள். அதில் இப்பொழுது இந்தியரும் மெம்பர்களாக இருந்து வருகிறார்கள்.

4. ஹை கமிஷனர் :—இந்திய வியாபார வசதிகளையும்,இங்கிலாந்திலுள்ள இந்திய மாணாக்கர்களது வசதிகளையும் கவனிக்க இவர் லண்டனில் இருக்கிறார். இவர் இந்தியர்.

II. மத்திய அரசாங்கம் (இந்திய கவர்ன்மெண்டு)

1. இராஜப் பிரதிநிதி:—பிரிட்டிஷ் பிரதமமந்திரியின் சிபார்சை அநுசரித்துச் சக்கரவர்த்தி ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம் இராஜப் பிரதிநிதியை நியமிக்கிறார்.

2. கார்ய நிர்வாக சபை :—இந்திய ஆட்சியில் இராஜப்பிரதிநிதிக்கு உதவியாக நிர்வாக சபையில் ஏழு மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்களில் மூவர் இந்தியர் ; இந்த மெம்பர்கள் ஒவ்வொருவரும் இந்திய ஆட்சியில் ஓரோர் பிரிவை மேற்பார்வை செய்கிறார்கள்.

3. சட்ட நிருபண சபைகள் :—சட்ட நிருபணம் செய்வதில் வைசிராய்க்கு உதவியாக இரண்டு சபைகள் இருக்கின்றன. (1) அரசாங்க சபை அல்லது கௌன்சில்

ஆவ் ஸ்டேட் (Council of State) (2) மகாராஜ்ஜீய சட்ட சபை (Imperial Legislative Assembly).

அரசாங்க சபை (கௌன்சில் ஆவ் ஸ்டேட்):— இச்சபையில் உள்ள 60 மெம்பர்களில் 34 பேர்களை ஜனங்கள் தேர்தல் செய்து அனுப்புகிறார்கள். துரைத்தன உத்தியோகஸ்தர்களின் தொகை இருபதிற்கு மேற்படக்கூடாது. மற்றவர்கள் துரைத்தனத்தாரால் நியமிக்கப்படுகிறார்கள். அக்கிராசனர் கவர்னர்-ஜனரலால் நியமிக்கப்படுகிறார்.

மகாராஜ்ஜீய சட்ட சபை:—இச்சபையில் உள்ள 145 மெம்பர்களில் 104 பேர்கள் பற்பல மாகாணங்களின் தொகுதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். தேச ஆட்சிக்கு அவசியமான சட்டங்களைச் சட்ட சபையில் தீர்மானிக்க வேண்டும். பிரதி வருஷமும் வரவு செலவு திட்டத்தைச் சட்ட சபையின் அங்கீகாரத்திற்குச் சர்க்கார் அனுப்புவார்கள். ஜனப்பிரதிநிதிகள் இந்தத் திட்டத்தில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டலாம். இராஜப் பிரதிநிதியின் அங்கீகாரத்திற்குட்பட்டு சபையோர்கள் தங்களில் ஒருவரை அக்கிராசனராகத் தேர்ந்து எடுக்கிறார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டு மேற்பார்வையில் தேசக் காவல், இந்திய இராஜ்ஜீய விஷயங்கள், தபால், தந்தி, சுங்கத்தீர்வை, உப்பு செய்தல், இருப்புப்பாதை விஷயங்கள், நாணயச் செலாவணி, வருமானவரி முதலிய இலாகாக்கள் உள. மற்றைய விஷயங்களை அந்தந்த மாகாண கவர்ன்மெண்டாரே கவனித்துக்கொள்வார்கள்.

III. மாகாணத் துரைத்தனம்

கவர்னர்:—இவரை மாகாண அரசர் எனக் கருதலாம். மாகாண விஷயங்களைப் பொருத்த மட்டில் இவரே

சர்வ அதிகாரி. மாகாண கவர்னரை இந்தியா மந்திரியின் சிபார்சின்படி சக்கரவர்த்தி நியமிக்கிறார்.

மாகாண நிர்வாகசபை:—கவர்னருக்கு உதவியாக மாகாண நிர்வாகசபை யொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது மாகாண ஆட்சியில்ஒருபாகம் நிர்வாகசபை மெம்பர்கள் பொறுப்பில்இருக்கிறது. கவர்னர் சிபார்சின் பேரில் நிர்வாகசபை மெம்பர்களைச் சக்கரவர்த்தி நியமிக்கிறார். நிர்வாக மெம்பர்கள் நால்வர். அவர்களில் இருவர் இந்தியர். போலீஸ் சட்டமும் அமைதியும் சம்பந்தமான விஷயங்கள், ரேவினியூ இந்த இலாகாக்கள் இவர்கள் வசம் இருக்கின்றன.

மந்திரிகள்:—மாகாணச் சட்ட சபையிலுள்ள ஜனப் பிரதிநிதிகளில் பெரும்பான்மைக் கட்சியிலுள்ள தகுந்த மூவரைக் கவர்னர் மந்திரிகளாய் நியமிக்கிறார். கல்வி, சுகாதாரம், மராமத்து, விவசாயம், கைத்தொழில், லோகல் போர்டு முதலிய இலாகாக்கள் மந்திரிகள் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன. மாகாண ஆட்சியில் ஒரு பாகம் மந்திரிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிக்கு மாற்றப்பட்ட (Transferred) பகுதி என்று பெயர். மற்றொரு பகுதியைநிர்வாக சபையின் அங்கத்தினர்கள் பார்வை யிடுகிறார்கள். இதற்கு ஒதுக்கப்பட்ட பகுதி (Reserved Half) என்று பெயர். இவ்வித ஆட்சியை இரட்டை யாட்சி எனக் கூறுவர்.

மாகாண சட்ட நிரூபண சபை:—ஒவ்வொரு மாகாண கவர்னருக்கும் உதவியாக ஒரு சட்ட நிரூபண சபையுண்டு. இதில் நிர்வாக சபை அங்கத்தினர்களும், கவர்னரால் நியமிக்கப்பட்ட மெம்பர்களும்,ஜனங்களால்பல தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் மெம்பர்கள். இந்த மாகாண சபையின் மெம்பர்களில் 100-க்கு 70 பேர்களுக்குக் குறையாமல் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்

பட்டவர்களாக யிருக்கவேண்டுமென்ற ஒழுங்கு ஏற்பட்டிருக்கிறது. இச்சபைக்கு முன்னேவிட சட்ட நிரூபணம், வரி விதிகள், அரசியல் நிர்வாகம், வரவு செலவு திட்டம் முதலிய விஷயங்களில் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவர்னரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அக்கிராசனர் சபையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

புதிய அரசியல் அமைப்பு

1935-ம் வருஷத்திய இந்தியச் சட்டம்:—அரசாங்கத்தாரின் சிபார்சினுலும், பெரியார்களின் முயற்சியினுலும், இந்திய அரசாங்க சீர்திருத்தத்தைப்பற்றிப் பிரிட்டிஷ் பார்லிமேண்டில் ஒரு மசோதா 1935-ல் நிறைவேறி, மன்னர் பிரானது அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்தப் புதிய அரசியல் திட்டம், மாகாண ஆட்சி சம்பந்தமாக 1937-ல் அமுலுக்கு வரும். இதனுல் இந்தியர்களுக்கு மேலும் அதிகப் பொறுப்பும் நன்மையும் உண்டாகும். முக்கிய மாறுதல்கள் ஆவன :—

1. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் அரசியல் பொறுப்பு முழுமையும் அம் மாகாண ஆட்சியிலேயே விடப்படும்.

2. பாதிப் பொறுப்பு மந்திரிகளிடமும், பாதிப் பொறுப்பு நிர்வாக சபை அங்கத்தினர்களிடத்திலும் தற்காலம் இருக்கும் இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டு, முழு ஆட்சியும் மந்திரிகள் சபைக்கே விடப்படும். இவர்கள் சட்ட சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அச் சபைக்கு உத்தரவாதி யாவார்கள்.

3. சென்னை மாகாணத்தில் மேல் சபை (Upper House), கீழ் சபை (Lower House) என இரண்டு சபைகள் அமைக்கப்படும்.

4. கவர்னருக்கு சில அம்சங்களில் அதிக அதிகாரம் ஏற்படும்.

5. மத்திய ஆட்சியில் சமஷ்டி (Federation) ஏற்பாடும் நடைபெறும். அதாவது ஒவ்வொரு மாகாணப்பிரதிநிதிகளும், சுதேச இராஜ்ஜியப் பிரதிநிதிகளும் இந்தியா சட்ட சபையில் உட்காருவார்கள். இப்பிரதிநிதிகளில்மீதர்ந்தெடுக்கப்படும் மந்திரிகளும், இராஜப்பிரதிநிதியும் சேர்ந்து மத்திய ஆட்சியை நடத்துவார்கள். மத்திய ஆட்சியிலும் இரண்டு சபைகள் உண்டு. இவைகளின் அங்கத்தினர்கள் ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்படாமல், மாகாண சபை அங்கத்தினர்களிலிருந்து பிரதானமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6. பல மாகாணங்களிலிருந்து வரும் சிவில் வழக்குகளில் அப்பீல் விசாரணை செய்ய ஒரு மேலான இந்தியா நியாயமன்றம் அமைக்கப்படும்.

7. உள்நாட்டு ஆட்சியில் இந்தியா மந்திரியின் மேற் பார்வையும் தலையிடுதலும் குறையும்.

8. ஒரிஸ்ஸா, சிந்து இவைகள் தனி மாகாணங்களாக அமைக்கப்படும்.

---

33. பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மைகள்

சுமார் 150 வருஷங்களாக இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதுவரையில் நமது நாட்டுச் சரித்திரத்தைப் படித்து வந்த நீங்கள், இப்போது உள்ள உன்னத நிலையை முற்காலத்திய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அறிந்துகொள்ளலாம்.

2. அமைதி :—பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகளில் மிகவும் முக்கியமானது நமது நாட்டில் நிறைந்

துள்ள அமைதி. முற்காலத்தில் தேசமுழுதும் ஆளக்கூடிய வல்லமையுள்ள ஆட்சி ஒன்றும் நிரந்தரமாக நெடுநாள் நீடித்திருக்கவில்லை. அரசர்களுக்குள் சண்டைகளும், மெலியாரை வலியார் விரட்டி நசுக்குவதுமாக இருந்தது. ஜனங்கள் நிம்மதியாகவும் யாதொரு பயமுமின்றியும் ஜீவனம் செய்து சுகமாக வசித்திருக்க வேண்டுமாயின் பலமும் நிரந்தரமுமான அரசாட்சி அவசியம். பிரிட்டிஷ் ஆட்சியில் தேசமுழுதும் ஐக்கியமாயிற்று; ஜனங்கள் எல்லோரும் தாம் ஒரு தேசத்தவர் என்ற ஒரு உணர்ச்சியைப் பெறுவதற்கு இது சாதகமாயிற்று. தேசத்தில் மேலும் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டதால் ஜனங்களுக்குக் கவலையின்றித் தங்கள் தொழிலைச் செய்துகொண்டு தங்கள் அறிவையும் பொருளையும் விருத்தி செய்துகொள்ளச் சாத்தியப்படுகிறது.

2. தேசக்காவல்:—அந்நிய விரோதிகள் தேசத்தினுள் படையெடுத்துத் தொந்தரவு செய்யாமல் பாதுகாப்பதும், உள்நாட்டில் துஷ்டர்கள் கொலை, களவு, கலகம் செய்யாமல் கவனிப்பதும் சர்க்காரின் முக்கிய வேலைகளாம். இந்திய சர்க்கார் பெருஞ் சேனையை நிர்வகித்து வருகிறார்கள். சில முக்கிய ஊர்களில் பட்டாளம் நிறுத்தியிருக்கின்றனர். இதன சேனாதிபதி (கமாண்டர்-இன்-சீப்) வைசிராய் நிர்வாக சபையில் ஒரு மெம்பர். உள்நாட்டில் கலகம் ஏற்பட்டுப்போலீசாரால் அடக்க முடியாத சமயம் (ராணுவ) துருப்புக்கள் அனுப்பபபடும். நிரந்தரமான இந்தச் சேனையைத் தவிர அவசர சமயங்களில் தயாராக இருக்கும்படி "இந்தியன் டெரிடோரியல் சேனை" ஏற்படுத்தியிருக்கின்றனர். நிலப்படையைத் தவிரக் கப்பல் படையும், ஆகாய விமானப் படையும் இந்தியாவைப் பாதுகாத்து வருகின்றன.

3. போலீஸ் :—உள்நாட்டு அமைதியைக் கவனிக்கப் போலீஸ் படை உண்டு. அந்தந்த மாகாண ஆட்சியில் போலீஸ் நிர்வாகம் முக்கியமான அம்சவாகும். தேசக் காவல் செய்வது இந்திய சர்க்கார் வேலை; போலீஸ் நிர்வாகம் மாகாண சர்க்கார் வேலை.

4. நியாய ஸ்தலங்கள் :—சட்ட விரோதமாக நடப்பவர்களையும், கொலை, களவு முதலிய குற்றங்கள் செய்பவர்களையும் விசாரணை செய்து நீதி செலுத்துவதற்கு மாஜிஸ்டிரேட்களும்; சொத்து உரிமை, கடன் வழக்கு முதலிய சிவில் சண்டைகளை விசாரணை செய்ய நீதிபதிகளும் உழைத்து வருகிறார்கள். சட்டங்கள் இன்னினவென்று சீர்திருத்தப்பட்டு அவைகள் ஒழுங்காக அச்சிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாகாணத்திலும் பிரதம நீதிமன்றம் என்ற ஹைகோர்ட்டு உண்டு. ஜில்லாக் கோர்ட்டுக்களிலிருந்தும் மற்றக் கீழ்க் கோர்ட்டுக்களிலிருந்தும் மாகாண ஹைக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம்.

5. வரி வசூலும், செலவும் :—குடும்பப் பரிபாலனத்திற்குப் பண சம்பாத்தியம் அவசியமல்லவா? அதுபோலவே தேச பரிபாலனத்திற்கும் பணம் வேண்டும். ஜனங்களிடமிருந்து பலவிதங்களில் வரிகள் வசூல் செய்வதாலேயே இந்தப் பணம் கிடைக்கும். இப்போது பிரிட்டிஷ் ஆட்சியில் ஜனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் ஜனங்களது நன்மைக்காகவே பெரும்பாலும் செலவாகிறது.

6. விவசாயம், நீர்ப்பாசனம் :—நமது ஜனங்களது முக்கியத் தொழில் விவசாயம். இதை விருத்தி செய்யப் புதிய விவசாய முறைகளைக் காட்டவும், மாதிரிப் பண்ணைகள் வைத்துப் பரீட்சை செய்து கற்பிக்கவும் விவசாய

இலாகா உத்தியோகஸ்தர்கள் பாடுபடுகிருர்கள். நீர்ப்பாசன வசதிகளை அதிகப் பணச் செலவு செய்து ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

7. போக்குவரத்துச் சாதனங்கள் :—பிரயாணத்திற்கும் வியாபாரத்திற்கும் சௌகரியமாகப் பல சாலைகளும், நதிகளைக் கடக்கப் பாலங்களும் கட்டி யிருக்கிருர்கள். சுலுவாகவும் சீக்கிரமாகவும் பிரயாணம் செய்யவும், சாமான்கள் அனுப்பவும் ரயில் பாதைகள் தேச முழுதும் ஏற்பட்டுள்ளன. தபால், தந்தி மூலமாகக் குறைந்த செலவில் சீக்கிரமாகச் சமாசாரங்களை அனுப்பலாம். மோடார் பஸ் பிரயாண வசதிகளும், டெலிபோனில் பேசும் சௌகரியமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

8. ஆராய்ச்சி சாலைகளும் தொழிற்சாலைகளும் :—ஜனங்களது செல்வத்தை விருத்தி செய்வதற்காக அவர்களது தொழில் முறைகள், வியாபாரம் எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்து புது வழிகளும் சௌகரியங்களும் ஏற்படுத்தி வருகிருர்கள். தொழிற் கலாசாலைகளும், மின்சார சக்தி உண்டாகும் இடங்களும் கட்டி இருக்கிருர்கள். செல்வத்தை ஜனங்கள் விருத்தி செய்ய உதவி செய்வது போலவே செல்வத்தைச் சேமித்து வைப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தி யிருக்கிருர்கள். ஜனங்கள் பணத்தைச் சேமித்துவைக்கப் பாங்கிகளும், திடீரென்று அகால மரணத்திற்குட்படுபவர்களது குடும்பங்களைக் காப்பாற்ற இன்ஷியூரன்சு வசதிகளும் வெகுவாக விருத்தியாகி வருகின்றன.

9. சுக வாழ்க்கை வசதிகள் :—ஜனங்கள் வியாதியின்றிச் சுகமாகவும், கல்வி பெற்றுச் சந்தோஷமாகவும் வசிக்குமாறு உதவி புரியவேண்டியது சர்க்காரின் முக்கிய வேலையாகும். வியாதியஸ்தர்களை வைத்து மருந்து கொடுத்

துத் தேற்றுவதற்காகப் பல ஊர்களிலும் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தித் தகுந்த வைத்தியர்களையும் நியமித்து இருக்கிறார்கள். கொடிய தொத்து வியாதிகள் பரவாமல் முன் ஜாக்கிரதை செய்ய சுகாதார உத்தியோகஸ்தர்களை நியமித்து இலவசமாக ஏழைகளுக்கு மருந்து கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் சில இடங்களில் பெண் வைத்தியர்களையும் நியமித்து அவர்களுக்கான பிரத்தியேக மருத்துவசாலைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். மிருக வைத்திய சாலைகளும் ஏற்பட்டுள.

10. கூட்டுறவு:—ஜனங்களின் க்ஷேம அபிவிருத்திக்குச் சிறந்த வழி கூட்டுறவு. பொது நன்மைக்குப் பலர் சேர்ந்து உழைப்பதால் வேலை சுலபமாகி நன்மையும் அதிகம் கிட்டும். கூட்டுறவுச் சங்கங்களை விருத்தி செய்ய அரசாங்கத்தார் மிகவும் உதவிசெய்து வருகிறார்கள். ஏழைத் தொழிலாளிகளும் விவசாயிகளும் கூட்டமாக சங்கங்கள ஏற்படுத்திக் கொள்கிறார்கள். தமது தொழிலுக்கு வேண்டிய சரக்குகளை மொத்தமாக வாங்கிப் பிரித்துக் கொள்வதும், தாம் செய்த சரக்குகளைச் சுலபமாக மொத்த விற்பனைக்கு ஏற்பாடுகள் செய்துகொள்வதும் வழக்கமாகி வருகின்றன. மேலும், மக்கள் குறைந்த வட்டிக்குக் கடன் பெறவும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள.

11. பஞ்ச நிவாரணம்:—பஞ்சங்கள் நேரிடாமல் சர்க்கார் காத்து வருகிறார்கள்.

12. கல்வி அபிவிருத்தி:—எண்ணிறந்த ஆரம்பப் பாடசாலைகளையும், கலாசாலைகளையும், சர்வகலா சங்கங்களையும் ஏற்படுத்தி பொதுக் கல்வியையும் உயர்தரக் கல்வியையும் ஓங்கச் செய்திருக்கிறார்கள்.

34. ஸ்தல சுய ஆட்சி

ஸ்தல சுய ஆட்சி (Local Self-Government) :—நமது தேச ஆட்சியைத் துரைத்தனத்தார் பொது ஜனங்களின் நன்மைக்கான முறைகளில் தாமே முந்திய தொரு பாடத்தில் படித்தவாறு நேரில் நடத்திவருகிறுர்கள். ஆனல் அவர்கள் கிராமம், நகரம், ஜில்லா இவைகள் சம்பந்தமான பொது நல வசதிகளை அமைத்துப் பரிபாலனம் செய்யும் பொறுப்பை அங்குள்ள ஊராரிடமே விட்டிருக்கிறுர்கள். ஆங்காங்குள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுள்ள சபைகள் மூலமாக ஜனங்களே நாட்டாண்மை நடத்துவது ஸ்தல சுய ஆட்சியெனப்படும். இராஜப்பிரதிநிதியாக விளங்கிய ரிப்பன் பிரபு முதன் முதலில் ஸ்தல சுய ஆட்சி உரிமையை அளித்தார்.

பஞ்சாயத்து சபை :—கிராமங்களில் அமைக்கப்படும் ஸ்தல சபை "பஞ்சாயத்து போர்டு" எனப்படும். இப் பஞ்சாயத்துச் சபைகளே ஸ்தலசுய ஆட்சியின் அடிப்படையாகும். தெருக்களில் விளக்குப் போடுதல், குடி தண்ணீர் வசதி அமைத்தல், வீதிகளையும் ஜலதாரைகளையும் சுத்தஞ் செய்தல், கிராமக் கல்வி முதலிய பொதுஜன வசதிகளை அமைத்துப் பரிபாலிப்பது இச்சபையாரது முக்கிய வேலை. வீட்டு வரி, தொழில் வரி, கல்வி வரி, சர்க்காரது உதவித் தொகை இவை மூலமாக செலவுக்கான வரும்படி கிடைக்கும்.

நகர பரிபாலன சபை (முனிசிபாலிடி) :—பெரிய பட்டணங்களில் நகர பரிபாலன சபையார் பொதுநலக்காரியங்களைக் கவனித்து வருகிறுர்கள். இவ்விதச் சபை சென்னைப்பட்டணத்தில் சென்னை கார்பொரேஷன் எனப்படும்.

ஜில்லா சபை (District Board):—கிராமங்களுக்குப் பொதுவான போக்குவரவு வசதிகள், கல்விச் சாலைகள், வைத்திய சாலைகள், சுகாதார ஏற்பாடுகள் முதலியவற்றை அமைத்துப் பராமரிப்பது ஜில்லா சபையாரது கடமை.

ஜனப்பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தலும் வாக்குரிமை (ஓட் உரிமை) யும்:—ஜனங்களே தங்கள் பிரதிநிதிகள் மூலமாக அரசாட்சி நடத்துவது ஜன ஆட்சி எனப்படும். பஞ்சாயத்து போர்டு, முனிசிபல் சபை, ஜில்லா போர்டு, சட்ட சபைகள் முதலியன ஜன ஆட்சியின் அங்கங்கள். இவ்விதச சபைகளுக்குத் தகுந்த பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது ஜனங்களுக்கு ஏற்பட்ட ஒரு பெரிய பொறுப்பாகும். இவ்விதம் தேர்தல் செய்யும் உரிமைக்கு வாக்குரிமை அல்லது ஓட் சுதந்திரம் என்று பெயர். தமக்குக் கிடைத்துள்ள ஓட் உரிமையின் பெருமையையும் பொறுப்பையும் ஜனங்கள் உணர்ந்து சுயநலம் பாராட்டாமல் பொதுக்ஷேமத்திற்கு உழைக்கக்கூடியபொறுப்பாளிகளான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

புதிய அரசியல் அமைப்பில் ஜனப்பிரதிநிதி ஆட்சி மேலும் மேலும் அதிகரிக்கும். சுய ஆட்சி என்பது பொறுப்புள்ள ஜனப்பிரதிநிதி ஆட்சியே யாகும். அதாவது அரசாட்சி செய்பவர்கள் ஜனங்களுக்கு உத்தரவாதமுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

———

35. பொது மக்களின் முயற்சியும் ஒத்துழைப்பும்

அரசாங்கத்தாரின் முயற்சி:— நமது நாடு முன்னேற்ற மடையவும், நமது நாட்டினர் சுகமாகவும் சமாதானமாகவும் வாழவும் அரசாங்கத்தார் பல துறைகளிலும் மகத்தான முயற்சி செய்துவருவதை ஒருவாறு படித்தோம்.

போதுமக்களின் முயற்சி:— ஒரு நாட்டினர் சௌக் கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு அரசாங்கத்தா ரது முயற்சி மட்டும் போதாது. பொது ஜனங்களில் ஒவ் வொருவரும் நாட்டின் நலத்தைக்கருத்தில் கொண்டுதாமும் பிறரும் சுகமாக வாழ்வதற்கு முயற்சிக்கவேண்டும். ஒரு நாட்டின் சரித்திரம் அதிலுள்ள ஒவ்வொருவருடைய சரித் திரமேயாகும். ஒவ்வொருவனும் தனக்காகப்பாடுபடுவதுடன் ஜன சமூகத்தின் நன்மைக்காகவும் உழைக்கவேண்டும். பொது மக்களின் முயற்சினாலேயே ஒரு தேசம் சீரும் சிறப்பும் பெற்று முன்னேற்றம் அடைதல் கூடும். அரசாங் கத்தார் தங்கள் கடமையைச் செய்வதுபோலவே பொது மக்களும் தங்கள் கடமைகளை உணர்ந்து கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில், ஆராய்ச்சி இவைகளில் முயற்சியும் ஊக்கமும் எடுத்துக்கொள்ளவேண்டும்

ஒத்துழைப்பு:— அரசாங்கம்செவ்வனே நடைபெறவும் தேசத்தில் அமைதி நிலைக்கவும் பொது மக்களும், அரசாங் கத்தாரும் ஒத்துழைப்பது அவசியமாகும் குடிமக்கள் தமது உரிமைகளையும் கடமைகளையும் நன்றாக அறிந்து உரிமை களைப் பாதுகாக்கவும், கடமைகளைச் சரிவரச் செய்யவும் வேண்டும். நாட்டின் நலத்தின் பொருட்டு அரசாங்கத்தார் ஏற்படுத்தும்சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பதுடன், புதிய அரசியல் அமைப்பில் ஒத்துழைக்கவும் வேண்டும். அவ்வாறு செய்வதால் காலக்கிரமத்தில் பல நலங்களையும் பெறலாம்.

36. நாம் என்ன செய்ய முடியும்?

இதுவரையில் நமது தேச மக்களது முற்கால வாழ்க்கை விதத்தையும், தற்கால வாழ்க்கை முறைகளையும் தெரிந்து கொண்ட நீங்கள் இனிமேல் உங்களது வாழ்க்கையைப் பற்றியும் யோசிக்கவேண்டும் அல்லவா? நீங்களும் இனிப் பெரியவர்களாக வளர்ந்து ஜனசமூகத்தில் ஒன்றுசேர்ந்து உழைத்துப் பாடுபடவேண்டும்.

உங்களது சுகமும் சந்தோஷமும் தேசத்தின் மேன்மைக்கு அஸ்திவாரம். உங்களது செல்வமே தேசத்தின் செல்வம். நீங்களே நமது நாட்டின் பெருமையை பிரகாசிக்கச் செய்யும் சக்தியுள்ளவர்கள். நீங்கள் இந்தியர்கள் என்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேர்ந்தவர்கள் என்றும் பெருமை கொள்ளல் வேண்டும். நமது முன்னோரது ஒழுக்கம், அறிவு, வீரம், ஞானம் முதலியவைகளை ஞாபகத்தில் வைத்து, நீங்களும் அவைகளை பின்பற்றி அவர்களைக் கௌரவிப்பது உங்களது கடமையாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பெருமையை உணர்ந்து நவீன கலைகளைப் பயின்று, நமது நாடு முன்னேற்றம் அடையுமாறும் நீங்கள் பாடுபடவேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் நோய் வாய்ப்படாமல் திடசரீரிகளாக வளர்ந்து, மனோதிடத்துடன் எல்லோருடைய சுகத்திற்கும் சந்தோஷத்திற்கும் உழைத்து, சமூக நலத்தை விருத்தி செய்தால் நமது நாடு செழித்து ஓங்கி விளங்கும்.

நமது நாடு செழிக்க! நமது மன்னர் வாழ்க!

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.